
1
தலைவர்தர்
நினைவுகள்

உலகளாவிய பொதுக் கள உரிமம் (CC0 1.0)

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

பதிப்புரிமை அற்றது

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் (https://ta.wikisource.org), தமிழ் இணையக் கல்விக் கழகமும் (http://tamilvu.org) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

No Copyright

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community (https://ta.wikisource.org) and Tamil Virtual Academy (http://tamilvu.org). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.



பாவேந்தர் நினைவுகள்

(முதற்பகுதி)

மூருகு சுந்தரம்

அகரம்
சிவகங்கை

பாவேந்தர் நினைவுகள்

© முருகுசுந்தரம்

4/100 கான்வென்ட் வீதி
சேலம் 636 004

முதற் பதிப்பு
ஏப்ரல் 1979

அட்டை
சாகித்யன்

அச்சும் வெளியீடும்
அகரம்,
2, சிவன் கோவில் தெற்குத் தெரு,
சிவகங்கை 623 560

விலை ரூ. 7—00

□

கடல் மேற் குமிழிகள்...

□

பாவேந்தர் வாழ்க்கை ஒரு பரந்த கடல்.
இந்நூல் அதன் அலை ஒதுக்கிய முத்து.
இன்னும் சலாபமே கைபடாமல் இருக்கிறது.
பலபேர் மூச்சடக்கி உள்ளே மூழ்க வேண்டும்.

ஒரு பெருங் கவிஞனின் படைப்பு
சமுதாயத்துக்கு எவ்வளவு முக்கியமானதோ
அதே போல்

அவன் வாழ்க்கை நிகழ்ச்சிகளும்
முக்கியமானவை; சுவையானவை.

தமிழ் மக்களுக்குப் புராணந்தான்
எழுதத் தெரியும்.
வரலாறு எழுதத் தெரியாது;
அதனால்
நம்மை நாமே தொலைத்து விட்டு
இப்போது குப்பையைக்
கிளறிக் கொண்டிருக்கிறோம்.

ஆங்கில நாட்டில்
வோர்ட்ஸ்வொர்த்தின் மூக்குக்கும்
கீட்சின் தலைமயிருக்கும்
ஆராய்ச்சி உண்டு.
இலக்கியமேதை வால்டயரின் கைப்பிரம்பு
500 பிராங்குக்கும்
மோலியர் என்ற
பிரெஞ்சு நாடகாசிரியன்
உட்கார்ந்திருந்த நாற்காலி
725 பிராங்குக்கும் ஏலம் போயின.
மேலைநாட்டார்
கவிஞன்வரலாற்றின் மீதும்
கலைஞன் கைபட்ட பொருள் மீதும்
எவ்வளவு ஆர்வங் காட்டுகிறார்கள்
என்பதற்கு இவை எடுத்துக் காட்டுகள்.

பாவேந்தர் என்னும்
பவளமல்லிகைச் செடியை
நான் சென்னையிலும் சேலத்திலும்
சுற்றிச் சுற்றி வந்தபோது
அது தாளுக உதிர்த்த மலர்களையும்
நானே விரும்பிப் பறித்த
மலர்களையும் மட்டுமே
இந்நூலில் படைத்திருக்கிறேன்.

'நீ ஓர் எழுத்தாளன்
நான்
இப்போது கூறும்
செய்திகளைச்
செய்தித் தாளிலோ
நூலிலோ எழுதக் கூடாது'
என்று எனக்கு
எச்சரிக்கை விடுத்துப் பாவேந்தர்
கூறிய செய்திகளும் உண்டு.
அவர் ஆணைப்படி அவற்றை
இந்நூலில் சேர்க்கவில்லை.

பாவேந்தரின் கொள்கை பலருக்குப்
பிடிக்காமலிருக்கலாம். ஏன்?
அவர் நடைமுறையும் கூடப்
பிடிக்காமலிருக்கலாம்

ஒரு பெருங்கவிஞனின்
கொள்கையும் நடைமுறையும்
நாம் விரும்பும்படி
இருக்க வேண்டும் என்று
நினைப்பதற்கு
நமக்கென்ன உரிமையிருக்கிறது?

இவர் இதில் பல அரசியல் தலைவர்களையும்
கவிஞர்களையும்
தமிழறிஞர்களையும்
கண்மூடித்தனமின்றி விமர்சனம் செய்திருக்கிறார்.
தம் கூரிய பேனா முனையால்
காயப்படுத்தியிருக்கிறார்.
அதற்கு நான் பொறுப்பாளி இல்லை.

மணம் பூவிலிருந்து புறப்படுகிறது.
பாவேந்தர் வரலாறு
அகரம் கலைக்கூடத்திலிருந்து
புறப்படுகிறது.
வாழ்க அகரம்!

4/100 கான்வென்ட் வீதி, முருகு
சேலம்-4



பாவேந்தர் சென்னையில் வாழ்ந்த (31 ஆம் எண்) இராமன் தெரு இல்லம்



நூலாசிரியர்
கவிஞர் முருகுசுந்தரம்



இராமன் தெரு இல்லத்தில்
உடனிருந்து உதவிய
கவிஞர் பொன்னடியான்

கண்டதும் கேட்டதும்

1

பெரியார், ஸ்டாலின் போன்ற சில அரசியல் தலைவர் களின் படத்தைப் பார்த்தவுடன் ஒருவித அச்சங்கலந்த மரியாதை நம் உள்ளத்தில் நம்மையறியாமலேயே ஏற் படுவதை உணர்கிறோம். பாவேந்தர் பாரதிதாசனின் உருவப்படத்தை முதன் முதலில் பார்த்தபோதும் அத் தகைய உணர்வு எனக்கு ஏற்பட்டது. நான் பள்ளி மாண வனாக இடைப்பாடியில் படித்துக் கொண்டிருந்தபோது திராவிடர்க் கழகம் பிரியாமல் செயல்பட்டுக் கொண்டிருந் தது. கி.பி. 1946 ஆம் ஆண்டில் திருவாளர்கள் அன்பழகன், நாவலர் இளந்தாடி நெடுஞ்செழியன், டார்பிடோ ஜனார்த்தனம் ஆகிய மூவரும் கல்லூரிப் படிப்பை முடித்துக்

கொண்டு கழகப் பிரசார பீரங்கிகளாகத் தமிழகத்து மேடைகளில் முழங்கிக் கொண்டிருந்தனர். நாவலர் நெடுஞ்செழியன்பேசிய ஒவ்வொரு மேடையிலும் பாவேந்தர் பாடல்களான 'எங்கள் வாழ்வும்', 'பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது சிறுத்தையே வெளியில் வா', 'உலகப்பன்', 'வசவினை எடடா!' ஆகியவற்றைப் பாடாமல் கீழே இறங்கமாட்டார். அப்பாடல்களை அன்றைய நெடுஞ்செழியன் பாடிக் கூட்டத்தை முடிக்கும் போது இடியிடித்து மழை ஓய்வது போலிருக்கும்.

இடைப்பாடிக் கூட்டத்தில் நெடுஞ்செழியன் இப்பாடல் களை உணர்ச்சிவசப்பட்டு மேடையில் கூறக் கேட்ட நான், அன்றே அவ்வூர்த் திராவிடர்க்கழகத் தலைவரும் நண்பருமான காலஞ்சென்ற திரு இரா. தாண்டவனிடத்திலிருந்து 'பாரதிதாசன் கவிதைகள்' என்ற முதல் தொகுதியை வாங்கிவந்து படித்தேன். அன்றிலிருந்து பாரதிதாசன் கவிதைகளுக்கும் எனக்கும் நிலையான தொடர்பு ஏற்பட்டு விட்டது.

என் தந்தை ஒரு சுயமரியாதைக்காரர். எங்கள் வீட்டுக்குக் குடியரசும், திராவிட நாடும் தொடர்ந்து வந்து கொண்டிருந்தன. குடியரசில் பாரதிதாசன் பாடல்களும், அவரைப் பற்றிய குறிப்புகளும் சில சமயங்களில் வெளியாகும். திராவிடநாடு இதழில், பாவேந்தரை மேலைநாட்டுப் புரட்சிக் கவிஞர்களான ஷெல்லி, வால்ட் விட்மன் ஆகியவர்களோடும், மராட்டியக் காண்டேகரோடும் ஒப்பிட்டு அண்ணா எழுதிய கட்டுரைகளைப் படித்த போது பாவேந்தரைப்பற்றி அதிகம் சிந்திக்கத் தொடங்கினேன்.

மேட்டூர் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் பயின்ற காலத்தில் புலவர் குழந்தை, புலவர் இரா. பெ. இராமச்சந்திரனார் பேசின்ற தமிழறிஞர்களைப் பொங்கல் விழாவின் போது அழைத்துப் பேச வைத்தோம். அவர்கள் பேச்சு பாவேந்தர் பாடல்களின் சில புதிய பரிமாணங்களை எனக்கு அறி

முகப் படுத்தியது. எங்கள் பயிற்சிப் பள்ளியின் தலைமை யாசிரியராக இருந்த திரு. பாலகிருட்டிணன் பி ஏ., எல்.டி.† அவர்கள் தமிழிலும் ஆங்கிலத்திலும் பெரும் புலமை மிக்கவர். பாரதிதாசன் பாடல்களில் அதிக ஈடு பாடு கொண்டவர். பாரதிதாசன் பாடல்கள் பலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் 'பூந்தோட்டம்' என்ற பத் திரிகையில் வெளியிட்டவர். அவருடைய தொடர்பால் பாவேந்தர் பாடல்களின் மீது எனக்கு அளவிறந்த மதிப் பும் பற்றும் ஏற்பட்டன. பிறகு பாவேந்தரின் நூல்களைத் தேடிப் படிக்கத் தொடங்கினேன். அவர் புதுவையிலிருந்து வெளியிட்ட 'குயில்' கவிதை ஏடு பாவேந்தரின் படைப் புக்களைத் தொடர்ந்து செல்லும் ஆவலைத் தூண்டி விட் டது.

தமிழ் மறவர் பொன்னம்பலனார் பணிபுரிந்த அதே சேலம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கி.பி. 1955 ஆம் ஆண்டு தமிழாசிரியராக வேலை ஏற்றேன். அடுத்த ஆண்டு பள்ளி மாணவர்களைச் சுற்றுலாவுக்காக அழைத்துக் கொண்டு சென்ற பொழுது (திசம்பர் 1956) புதுச்சேரியும் சென்றி ருந்தேன். கையுறையாகச் சில கனிகளை வாங்கிக் கொண்டு மாணவர்களோடு பெருமாள் கோயில் தெருவில் இருந்த பாவேந்தர் இல்லத்துக்குச் சென்றேன். அன்று பாவேந்தர் எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டுப் பிரம் புச் சாய்வு நாற்காலியில் ஓய்வாகப் படுத்திருந்தார். மாணவர் கூட்டத்தைப் பார்த்தவுடன் அவருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. எங்களைப் பற்றி விசாரித்துவிட்டு மாண வர்களை நோக்கி, ''தமிழை நன்றாகக் கற்க வேண்டும்'' என்று அறிவுரை கூறினார். பிறகு விடை பெற்றுக்

---

†இவர் 'இளங்கண்ணன்' என்ற புனைபெயரில் பத்திரிகைகளில் எழுதுவார். ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு பெற்றதும், சாகித்திய அகாடமியில் ஆங்கில மொழிபெயர்ப்பாளராக'ச் சிலகாலம் பணி புரிந்தார். The Golden Anthology of Ancient Tamil Literature என்ற பெயரில் சங்கப் பாடல்களை மூன்று தொகுதிகளாக மொழி பெயர்த்திருக்கிறார்.

கொண்டு எல்லாரும் திரும்பினேம். இதுவே பாவேந்தருக்கும் எனக்கும் ஏற்பட்ட முதல் சந்திப்பு.

1961 ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29 ஆம் நாள் ஞாயிற்றுக் கிழமை இரவு 7 மணியளவில் பாவேந்தரை இரண்டாம் முறையாகப் பார்த்தேன். அன்று சென்னை இராஜாஜி ஹாலில் அனைத்திந்தியத் தமிழ் எழுத்தாளர் பெருமன்றத் துவக்கவிழா நடைபெற்றது. அவ்விழாப் பொறுப்பாளரான திருச்சி அ.வெ.ரா. கிருஷ்ணசாமி ரெட்டியார் நேரில் சென்று அழைத்த அழைப்பை மதித்துப் பாவேந்தர் விழாவுக்குச் சற்று முன்னதாகவே வருகை தந்திருந்தார். சேலம் மாவட்டத் தமிழ் எழுத்தாளர் மன்றச் செயலாளன் என்ற முறையில் நானும் விழாவில் கலந்து கொண்டேன்.

பாவேந்தர் பெண்கள் கூட்டத்திடையே அமர்ந்திருந்தார். பாரதியாரின் மூத்த மகளான தங்கம்மாள் பாரதி அங்கு வந்திருந்ததால், பாவேந்தர் அந்த அம்மையார் அருகில் அமர்ந்து பேசிக்கொண்டிருந்தார். பெருந்தலைவர் காமராசர், டாக்டர் சுப்பராயன், மீ.ப. சோமசுந்தரம் ஆகியோரும் அன்றைய விழாவில் கலந்து கொண்டனர். காமராசர் மேடைக்கு வந்ததும் பாவேந்தரைப் பார்த்தார். உடனே விழாப் பொறுப்பாளரை அனுப்பிப் பாவேந்தரை அழைத்து மேடைமீது தம்மருகில் உட்காரவைத்துக் கொண்டார்.

காமராசர் குத்து விளக்கேற்றி மன்றத்தைத் துவக்கி வைத்தார். பாவேந்தர் மன்றத்தை வாழ்த்தும் முகத்தான் சில சொற்கள் நறுக்குத் தெறித்தாற்போல் சொன்னார்: ''தமிழ் எழுத்தாளன் முதலில் தமிழை ஒழுங்காகக் கற்க வேண்டும். இன்றைய தமிழ் எழுத்தாளர் பலருக்குத் தமிழே தெரியாது. எழுத்தாளன் என்பவன் எப்போதும் எவருக்கும் அஞ்சாமல் தன் உள்ளத்தில் தோன்றும் கருத்தை வெளியிடும் துணிச்சல் பெற்றவனாக இருக்க

வேண்டும்'' என்று இந்த இரண்டு கருத்தை மட்டும் சொல்லிவிட்டு உட்கார்ந்து கொண்டார். இரண்டு அல்லது மூன்று நிமிடமே பேசியிருப்பார். அதற்குள் இந்த நாட்டு எழுத்தாளனுக்குக் கட்டாயம் எதைச் சொல்ல வேண்டுமோ அதை மட்டும் சொல்லிவிட்டு மூடித்துக் கொண்டார்.

மூன்றும் முறையாகப் பாவேந்தரை பார்த்தது சேலத்தில். தமிழகப் புலவர் குழு 25—9—60இல் சேலம் வந்திருந்தது. சேலம் நீதிக்கட்சிப் பிரமுகர் திருவாளர் பி. இரத்தனசாமிப் பிள்ளை தம்முடைய மாமாங்கம் தோட்ட மாளிகையில் புலவர்களுக்கு ஒரு பெரிய விருந்து வைத்தார். மாலையில் சேலம் திருவள்ளுவர் கழகம் புலவர் குழுவுக்கு ஒரு வரவேற்பு வழங்கியது. டாக்டர் மு.வ. அன்றைய நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கினார். நிகழ்ச்சி எங்கள் நகர வைப் பள்ளி மைதானத்தில் போடப்பட்ட பெரிய மேடையில் நடைபெற்றது.

புலவர் குழுவில் ஒரு வழக்கமுண்டு. புலவர் குழுவில் உள்ள நாற்பது பேரும் ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் பேச முடியாது. எனவே ஒவ்வொரு கூட்டத்திலும் சீட்டுப் போட்டுப் பத்துப்பேரைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்கள் மட்டுமே பேசுவார்கள். கூட்டம் தொடங்கியது. சேலம் திருவள்ளுவர் கழகத்தின் ஆசிரியரான புலவர் நடேச உடையார் வரவேற்புரை வழங்கினார். பிறகு தேர்ந்தெடுக்கப்பட்ட பத்துப் புலவர்களும் பேசினர். அப்புலவர்களுள் பாவேந்தர் இடம் பெறவில்லை. கூட்டத்திலிருந்து ஒரு சிலர் பாவேந்தர் பேசவேண்டும் என்று சொல்லித் துண்டுச் சீட்டு எழுதிக் கொடுத்தனர். பொது மக்களின் விருப்பத்திற் கிணங்கப் பாவேந்தர் எழுந்து பேசினர்.

இந்த நிகழ்ச்சி நடைபெறுவதற்கு ஒரு சில திங்களுக்கு முன்பு மாநிலக் கல்லூரி ஆங்கிலப் பேராசிரியர் ஒருவர் திரு. வி. க. மறைமலையடிகள் ஆகியோரின் உரைநடை

யைக் கூட்டத்தில் கேலி செய்திருந்தார். இதைப் பற்றிக் குறிப்பிட்ட பாவேந்தர் பெருஞ்சீற்றங் கொண்டு, "தமிழ் நாட்டிலே, தமிழர்கள் நடுவிலே, தமிழறிஞர் ஒருவரின் படைப்பை ஒருவன் கேவலமாகப் பேசுகிறான். மான உணர்விருந்தால் நீங்கள் இதைப் பொறுத்துக் கொண் டிருப்பீர்களா? எப்போது அவன் தமிழை இழித்துப் பேசி னானே, அப்போதே அவன் தலை கீழே அற்று விழுந்து விட்டது என்ற செய்தி தமிழகம் முழுவதும் பரவியிருக்க வேண்டாமா?" என்று பேசினார். உணர்ச்சி வெறியினால் அவர் குரல் கம்மியது; கண்களில் நீர்கசிந்தது.

இதுவரை பாவேந்தரைப் பார்த்ததோடு சரி. அடுத்த ஆண்டுத் துவக்கத்திலிருந்து பாவேந்தருக்கும் எனக்கும் உள்ளங்கலந்த பழக்கமும், நெருக்கமும், அடிக்கடி சந்தித் துப் பேசும் வாய்ப்பும், கடிதத் தொடர்புகளும் ஏற்பட்டன. இந் நெருங்கிய தொடர்பு அவர் இறக்கும் வரை இருந்து கொண்டிருந்தது. கி.பி. 1962இல் சைதாப்பேட்டை ஆசி ரியர் பயிற்சிக் கல்லூரியில் பி.டி. படிப்பதற்காக வந்து சேர்ந்தேன். பாவேந்தர் அருகிலேயே குடியிருந்தார். பெரும்பாலும் கல்லூரி விட்ட நேரங்களில் பாவேந்தரோடு தான் இருப்பேன். அவரோடு பழகும் நேரங்களில் அவர் வாழ்க்கை வரலாற்றைக் கேட்டு ஒரு சுவடியில் குறித்துக் கொண்டேன். அக் குறிப்புகளை அப்படியே நாட்குறிப்புப் போலவே கொடுத்திருக்கிறேன்; என் நினைவில் நின்ற அவரைப்பற்றிய பொதுவான செய்திகளை ஒரு கட்டுரை யாக்கிக் கொடுத்திருக்கிறேன். பாரதியாரைப்பற்றி அவர் குறிப்பிட்ட செய்திகளையும் ஒரு தனிக் கட்டுரையாக்கியுள் ளேன்.

○

அந்த நாட்கள்

2

18—1—62

வெள்ளி

சைதாப்பேட்டை ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் எனக்கு இடம் கிடைத்ததும், முதலில் பாவேந்தர் நினைவுதான் எனக்கு வந்தது. சென்னைக்குப் புறப்படுவதற்கு முன் பாவேந்தருக்கு மிகவும் நெருங்கிய சேலம் நண்பரான திரு. சங்கரன் அவர்களிடத்தில் ஓர் அறிமுகக் கடிதம் வாங்கி வைத்துக் கொண்டேன். சென்னை சென்றதும் எனக்குக் கல்லூரி வேலைகளே சரியாக இருந்ததால்,

பாவேந்தரை நேரில் காணும் வாய்ப்புத் தடைபட்டுக் கொண்டே வந்தது. மேலும் பாவேந்தரைக் காணச் சென்று வந்த நண்பர் பலரும் அவரைப் பற்றிப் பலவித மாகக் கூறுவர். எனவே என் உள்ளத்திலும் ஒருவித அச் சம் இருந்தது. 'நன்முகப் பழகுவாரா? மாட்டாரா?' என்று அடிக்கடி நான் எண்ணுவதுண்டு.

கல்லூரியில் பொங்கல் விழா. அவ்விழா முடிந்து ஓரிரு நாட்கள் இருக்கும். மாலை 6 மணியளவில் சைதாப்பேட் டையிலிருந்து உந்து வண்டியில் புறப்பட்டுத் தேனும்பேட் டையில் இறங்கினேன். அங்கிருந்து தியாகராயர் நெடுஞ் சாலையில் சிறிது தொலைவு சென்று உருசியத் தூதர் அலு வலகத்தருகே வலது புறமாகத் திரும்பினால் இராமன் தெரு உள்ளது. அத் தெருவில் 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்று ஒரு பெரிய விளம்பரப் பலகை ஒரு பங்களா முகப் பில் தென்பட்டது. உடனே அந்த பங்களாவிற்குள் நுழைந்து விட்டேன். முன்னால் பெரிய வரவேற்பு அறை யொன்று இருந்தது. அதில் சோபாக்களும் நாற்காலி களும் போடப்பட்டிருந்தன. அங்கே மெலிந்த ஒற்றை நாடி உடம்புக்கார இளைஞர் ஒருவர் சுறுசுறுப்பாக எதையோ எழுதிக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்த தும், 'என்ன வேண்டும்? யாரைப் பார்க்கிறீர்கள்?' என்று அவர் கேட்டார்.

''நான் முருகுசுந்தரம்... நான்'' என்று கூறுவதற்கு முன்பாகவே அவர் ''ஓ நீங்கள்தானா? தெரியுமே. சேலத் துக் கவிஞர். உம் பாட்டைக் குயிலில் அடிக்கடி பார்த்திருக் கிறேன். நான்தான் பொன்னடியான். கவிஞருக்குத் துணை யாக இருந்து எல்லா வேலைகளையும் பார்த்துக் கொண் டிருக்கிறேன்'' என்று கூறினார்.

நான் 'பாவேந்தரைப் பார்க்க வேண்டும்' என்று கூறிய தும் 'உட்காருங்கள்; சாப்பிடுகிறார். சாப்பிட்டதும் பார்க்க லாம்' என்று சொன்னார். பாவேந்தர் சாப்பிட்டு முடித்த

தும் பொன்னடி உள்ளே சென்று நான் வந்திருப்பதாகச் சொன்னார். பாவேந்தரும் நேராக வரவேற்பு அறைக்கு வந்தார். அப்போது முன்னிரவு ஏழு மணி. மின்விளக்கு வெளிச்சத்தில் அவர் தோற்றம் மிகவும் எடுப்பாக உள்ளத்தில் சட்டென்று பதியும்படியாக இருந்தது. இடுப்பில் பச்சை நிற லுங்கி; மேலே திறந்த மேனி. வரும்போதே கனைத்துக் கொண்டு வந்தார். கனைப்பொலியைக் கேட்டவுடன் என்னையறியாமல் நான் எழுந்து நின்றுகொண்டேன். அவருடைய நடையிலும் தலைநிமிர்விலும் உலகையே அலட்சியம் செய்யும் அசாதாரண நிலை தென்பட்டது. என் அருகில் வருவதற்கு முன்பாகவே, அவர் விழிகள் என்னை நிமிர்ந்து பார்த்த பார்வை 'என்ன? யார் நீ?' என்று கேட்பது போல் இருந்தது.

அவர் என்னை வாய்திறந்து கேட்பதற்கு முன்பாக அவசரப்பட்டுச், ''சேலம் சங்கரன் கடிதம் கொடுத்திருக்கிறார்'' என்று சொன்னேன்.

''அப்படியா? படி'' என்றார். நானும் கடிதத்தை நின்றுகொண்டே படித்தேன். படித்து முடித்ததும் தாம் அமர்ந்திருந்த சோபாவைக் காட்டி ''இப்படி வந்து உட்கார்'' என்று சொன்னார். நானும் அடக்கத்தோடு சோபாவின் நுனியில் அமர்ந்த வண்ணம் அவரைப் பார்த்துக் கொண்டிருந்தேன்.

''உன் பேர்?''

"முருகுசுந்தரம்."

அதற்குள் பொன்னடி சுறுக்கிட்டு 'இவர் குயிலிலே அடிக்கடி எழுதியிருக்கிறார்' என்று சொன்னார்.

''அப்படியா! என்ன படிச்சிருக்க?''

''புலவர்; எம்.ஏ.''

''என்ன கையிலே புத்தகம்?''

''இது நான் எழுதின பள்ளிப் பாடப் புத்தகம். இதிலே நாமக்கல் கவிஞர் உங்களைப் பற்றி எழுதிய பாடலையும் சேர்த்திருக்கிறேன்'' என்று சொல்லி அப் பாடலைப் படித்துக் காட்டினேன்.

''பாடல் சரியான இடத்திலதான் இருக்குது. ஆமா! இதை எப்படி விட்டானுங்க? அப்ரூவ் ஆயிடுச்சா? விடமாட்டானுங்களே!'' என்று வியப்போடு கேட்டார்.

''அப்ரூவ் ஆகிவிட்டது; பல பள்ளிகளிலும் பாடமாக வைத்திருக்கிறார்கள்'' என்று நான் சொன்னேன். அவர் என்னை மகிழ்ச்சியோடு பார்த்தார்.

''நான் உங்கள் மீசையைப்பற்றிப் பத்து எண்சீர் விருத்தம் எழுதியிருக்கிறேன்'' என்று சொன்னேன்.

''ஏன்?'' என்றார் பாவேந்தர்.

''இங்கிலாந்தில் வொர்ட்ஸ்வொர்த் என்ற கவிஞன் வாழ்ந்தபோது அவன் மூக்கைப்பற்றிக் கவிதைபாடிச் சிறப்பித்தார்கள். கீட்சின் தலைமுடி பொன்னிறமானதா கருநிறமானதா என்று ஆராய்ச்சி நடத்தினர்கள். இந்நூற்றாண்டின் இணையற்ற கவிஞராகிய உங்கள் மீசையைப் பற்றி ஒரு கவிதை பாடினால் என்ன என்று எண்ணினேன்; எழுதினேன்'' என்று நான் சொன்னேன்.

''அப்படியா! எங்கே படி!'' என்றார். நானும் படித்தேன். அந்தப் பத்து எண்சீர் விருத்தத்தையும்* பொறுமையோடு கேட்டுவிட்டுக் ''கற்பனையெல்லாம் ரொம்ப நல்லா இருக்குது.....ஆமா...சாப்பிட்டயா'' என்றார்.

''இல்லை ஐயா. நான் கல்லூரி விடுதிக்குச் சென்று சாப்பிட்டுக் கொள்கிறேன்'' என்றேன்.

உடனே 'தாயாரு! தாயாரு!' என்று சமையற்காரியை அழைத்தார். 'தாயாரம்மாள்' என்பது அந்த அம்மையார் பெயர்.

---

*காண்க: பிற்சேர்க்கை.

''ஆமா! நீ புலால் சாப்பிடுவயா?'' என்று கேட்டார்.

''சாப்பிடுவேன்'' என்றேன் நான்.

''கறியை விடாதே. கறிதான் மனிதனுக்கு உணர்ச்சி வெறியை உண்டாக்குது. உணர்ச்சி வெறிதான் கவிஞனுக்கு வேண்டும். கடைசிவரையிலும் கறியை விடக் கூடாது. நான் அதுக்கு எடுத்துக் காட்டு... என்ன?'' என்று கூறிவிட்டு என்னைப் பார்த்தார்.

''சரிங்க ஐயா!'' என்றேன்.

''சைவத்தை நம்பி நம்ம வீர உணர்ச்சியே போயிடுச்சு. பழைய காலத்திலே ஏறு தழுவினோம்! இப்ப எவன் தழுவரு? கன்னுக்குட்டியைக் கண்டாலே காதவழி ஓடரு...'' என்று சொல்லிவிட்டு உரக்கச் சிரித்தார். தாயாரம்மாள் எதிரில் வந்து நின்றார்.

''என்ன சாப்பாடு இருக்கா?''

''இருக்குதுங்க.''

''மத்தியானம் செஞ்சதெல்லாம்...?''

''அதெல்லாம் இல்லீங்க...''

''இரவல் கூட இல்லையா?''

''கொஞ்சம் இருக்குதுங்க.''

''சரி. போடு போடு!''

தாயாரம்மாள் சாப்பாடு பரிமாறினார். நான் கீழே அமர்ந்து சாப்பிட்டேன். பாவேந்தர் அருகில் இருந்த சாய்வு நாற்காலியில் அமர்ந்த வண்ணம், ''நல்லா சாப்பிடு. வெட்கப்படாதே..... ஆமா! நீயேன் விடுதியிலே சாப்பிடற? இங்கேயே வந்திடே. தினம் இங்கேயே சாப்பிடலாம்'' என்றார்.

''பரவாயில்லேங்கையா! இங்கே வந்து சாப்பிட்டுவிட்டுக் கல்லூரிக்குப் போக முடியாது'' என்றேன் நான்.

''ஆமா! அங்கே விடுதிக்குக் கட்ற பணமும் வீணாயிடும். அப்ப ஒன்னு செய். அடிக்கடி வந்து சாப்பிட்டுவிட்டுப் போ'' என்ருர். நானும் 'சரி' என்றேன்.

படுக்கையறையில் ஒரு மரக்கட்டில். அதன்மீது மெத்தை ஒன்று விரிக்கப்பட்டிருந்தது. அம் மெத்தையின்மீது அழகான பூ வேலைப்பாடுகளுடன் கூடிய விரிப்பு ஒன்றும் போடப்பட்டிருந்தது. அந்த விரிப்பின் வேலைப்பாடு என் உள்ளத்தைக் கவர்ந்தது. பாவேந்தர் கட்டிலில் படுத்திருந்தார். நான் பக்கத்தில் இருந்த ஒரு நாற்காலியில் அமர்ந்திருந்தேன். பழைய காலத்து ஜி. இ. சி. மின் விசிறி ஒன்று மேசை மீது இரைச்சலோடு ஓடிக் கொண்டிருந்தது. ''எனக்கு இரவில் தூக்கம் வருவதில்லே. பன்னிரண்டு மணிக்குத்தான் தூங்குவேன். இங்கிலீஸ் படத்துக்குப் போவமா?" என்ருர் பாவேந்தர்.

''சரி போகலாம்'' என்றேன்.

இருவரும் அருகிலே இருந்த இராஜகுமாரி (சகானிஸ்) திரைப்படக் கொட்டகைக்குச் சென்ருேம். அன்று 'Kingdom Of Beauty' என்ற ஒரு சீனப்படம் நடந்து கொண்டிருந்தது. அது ஆங்கிலத்திலே 'டப்' செய்யப்பட்டிருந்தது. படத்தின் நடுவே கொட்டகையில் இருப்பவர்கள் சிரித்தால் 'ஏன் சிரிக்கிருர்கள்?' என்று கேட்பார். உடனே நான் காரணத்தை விளக்குவேன். படம் புரியாவிட்டாலும் படத்தில் காட்டப்பட்ட இயற்கைக் காட்சிகளே வியந்து பாராட்டினர். அதில் பாடப்பட்ட சீனப் பாடல்கள் நம் தமிழ் வண்ணப்பாடல்களேப் போலவே இருப்பதாகச் சொன்னர். படம் பார்த்துவிட்டு அன்று நானும் பாவேந்தர் வீட்டிலேயே படுத்துக் கொண்டேன். காலையில் 7-30 குக் கல்லூரி துவங்குவதால் கண் விழித்ததும் பாவேந்த

ரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் புறப்பட்டு வந்துவிட் டேன். நான் புறப்பட்டு வந்த பிறகு, பொன்னடியைக் கூப்பிட்டு என் பாடலை எடுத்துக்காட்டி ''தோ... இரவு வந்தாரே அவர் என் மீசையைப் பத்திக் கவிதை பாடி யிருக்கிறார்'' என்று சொன்னராம்.

□

20—1—62

ஞாயிறு

□

ஞாயிற்றுக்கிழமை வார விடுமுறையாகையால் அன்று என் உறவினர் வீட்டுக்குப் போய்விட்டு மாலையில் சைனு பஜாரில் தேவையான பொருள்களை வாங்கிக் கொண்டு இரவு எட்டு மணிக்குக் கல்லூரி விடுதிக்கு வந்தேன். உடனே பக்கத்து அறைக்கார நண்பர்கள் ''பாரதிதாசன் வீட்டிலிருந்து உங்களைத் தேடி ஓர் இளைஞர் வந்திருந் தார். பாரதிதாசன் உம்மைக் கையோடு அழைத்து வரச் சொன்னராம்'' என்று கூறினர்கள்.

உடனே உந்து வண்டியேறி 9 மணி வசக்கில் பாவேந்தர் இல்லத்தை அடைந்தேன். பொன்னடி எனக்காக முற்றத் தில் காத்திருந்தார். ''என்ன முருகு? ஏன் இரண்டு நாளாக வரவில்லை. கவிஞர் அடிக்கடி என்னைக் கேட்பார். 'ஞாயிற்றுக் கிழமை விடுமுறையாச்சே? ஏன் வரவில்லை? போய்க் கூட்டிக்கொண்டு வா!' என்று சொல்லி என்னை அனுப்பி வைத்தார். அதனால் தான் நான் கல்லூரி விடு திக்குத் தேடி வந்தேன். எங்கு போயிருந்தீர்?'' என்று கேட்டார்.

நான் வெளியில் சென்றிருந்த காரணத்தைப் பொன்னடியிடம் கூறிவிட்டுக் கவிஞரின் அறைக்குச் சென்றேன். கவிஞர் கட்டிலில் படுத்திருந்தார். என்னைக் கண்டதும் ''ஏம்ப்பா இன்னைக்கு வரலே? உனக்காக இன்னைக்குக் கோழிக்கறி, இருல் எல்லாம் வாங்கிவந்து சமைக்கச் சொல்லியிருந்தேன்?'' என்றார்.

''ஐயா! இன்று கொஞ்சம் வெளிவேலை இருந்தது. உறவினர் வீட்டுக்குப் போயிருந்தேன்'' என்று சொன்னேன். பிறகு சாப்பிடச் சொன்னார்; சாப்பிட்டேன். அப்போது தேர்தல் நெருங்கிக் கொண்டிருந்த காரணத்தால், திராவிடர்க் கழகப் பிரசார நாடகம் ஒன்று கவிஞர் வீட்டில் ஒத்திகை பார்க்கப்பட்டது. கவிஞருக்கு வேண்டிய கோவிந்தராசன் என்பவர் அந்த நாடகத்தை ஏற்பாடு செய்திருந்தார். கவிஞர் சில பாடல்களை இசையோடு பாடிக் காட்டினார். நடிக நடிகையருக்கு நடித்தும் காண்பித்தார். ஒரு பெண் மிகவும் இனிமையாகப் பாவேந்தர் பாடல்களைப் பாடினாள். அப்பெண்ணைப் பார்த்து, ''என்ன? தட்டுக்குச்சி மாதிரி இருக்கே? இப்படியிருந்தா எப்படிப் பாடுவ? பாடனுமுன்னு உடம்பு நல்லா இருக்கணும்'' என்று கூறினார்.

நாடகத்தில் கதாநாயகியாக நடித்த பெண் படுசுட்டி. கவிஞரின் காலடியில் அமர்ந்து கொண்டு அன்பாகவும் பணிவாகவும் பேசுவாள். பாவேந்தர் படுக்கையின் மீது விரித்துப் போடப்பட்டிருந்த விலையுயர்ந்த விரிப்பு அவள் கண்ணை உறுத்திக்கொண்டே இருந்தது. ஒத்திகை முடிந்து போகும்போது அதைத் தனக்குக் கொடுக்கும்படி கவிஞரிடம் கேட்டாள்.

''இது தானே? எடுத்துக்க...'' என்று சொல்லி விரிப்பை அவள் கையில் கொடுத்து விட்டார். எல்லாரும் படுக்கப் போகும்போது இரவு 1 மணியிருக்கும். விடியற்காலம் 5-30 மணிக்கு எழுந்து நான் புறப்பட்டேன். கவிஞர்

எனக்கு முன்பாகவே எழுந்து காலைக்கடன்களை முடித்துக் கொண்டு சமையலறையில் மேசை மீது கால்மேல் கால் போட்டு உட்கார்ந்த வண்ணம் காலில் தாளம் போட்டுக் கொண்டிருந்தார். இரவு எந்நேரம் படுத்தாலும் விடியற் காலை 5 மணிக்கே எழுந்திருப்பது கவிஞர் பழக்கம். கவிஞரிடம் விடைபெற்றுக் கொண்டு நான் சைதாப்பேட்டை புறப்பட்டேன்.

□

26—1—62

வெள்ளி

□

இன்று ஒரு குறிப்பிடத் தக்க நாள். 'அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்றம்' இன்று பாவேந்தர் இல்லத்தில் துவக்கப்பட்டது. நான் காலையிலேயே கல்லூரிக்கு விடுப்பு எடுத்துக்கொண்டு வந்து சேர்ந்தேன். கவிஞர் பாரதி சுந்தரம் என்ற ஓர் அன்பர் வந்திருந்தார். அவர் பேச்சும் நடவடிக்கைகளும் எப்போதும் மற்றவர் கவனத்தைக் கவரும்படி இருந்தன. அவரோடும் பொன்னடியோடும் பேசிக் கழித்தேன். நடுப்பகல் உணவைக் கவிஞர் வீட்டிலேயே உண்டுவிட்டு அங்கேயே ஓய்வெடுத்துக் கொண்டேன். துவக்க விழாவில் கலந்து கொள்ள ஒவ்வொரு கவிஞராக வந்து கொண்டிருந்தனர். வந்தவர்களுக்கெல்லாம் சிற்றுண்டி வழங்கப்பட்டது. வந்தவர்களுள் நா.ரா.நாச்சியப்பன், அமீது, வல்லம் வேங்கடபதி, வேழவேந்தன், தமிழ்முடி, தமிழழகன், நாக.முத்தையா, பொன்னடியான், நாரண துரைக்கண்ணன், பாரதி சுந்தரம், சி.பாலசுப்பிரமணியன், திருநாவுக்கரசு, செந்தாமரை, ஜமதக்னி, சகுந்தலா பாரதி ஆகியோர் குறிப்பிடத் தக்கவர்கள்.

சதாவதானி ஷெய்குதம்பிப் பாவலரின் மகனும் செந்தா மரை என்னும் புனைபெயரில் எழுதி வந்தவரும், வாஞ்ஞி நிலையத்தில் பணிபுரிந்து கொண்டிருந்தவருமான திரு. அமீது பாவேந்தரின் சில பாடல்களை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பது பற்றித் தம் கருத்துக்களைத் தெரிவித்துக் கொண்டிருந்தார். ஜமதக்னி என்பவர் இந்தியும் தமிழும் வல்ல ஒரு கவிஞர்; சுதந்திரப் போராட்டத்தில் சிறை சென்றவர். இந்தியில் உள்ள 'காமாயினி' என்ற காப்பி யத்தைக் 'காமன் மகள்' என்ற பெயரில் தமிழில் மொழி பெயர்ப்புச் செய்திருக்கிறார்.

பாரதியாரின் இளைய மகள் சகுந்தலா பாரதிக்கு அப் போது வயது ஏறத்தாழ ஐம்பதிருக்கும். கண்பார்வை சற்று மந்தமாக இருந்தது. அதை அறிந்து பாவேந்தர் மிக வருந்தி, ''நான் எடுத்து வைத்திருந்து வளர்த்த குழந்தை; இவளுக்கு அதற்குள் கண்ணொளி கெட்டுவிட் டதே!'' என்றார். சகுந்தலா பாரதியும் பாவேந்தரை அடிக்கொருதரம் 'மாமா! மாமா!' என்று அழைத்து அன் புக்கடலில் ஆழ்த்திக் கொண்டிருந்தார்கள். அவரைப் பார்த்தால் பாரதி எப்படி இருந்திருப்பார் என்பதை ஓரளவு புரிந்து கொள்ளலாம். நன்றுகப் பழுத்த எலுமிச்சம்பழத் தின் நிறம்; ஒற்றை நாடி உடம்பு; உட்காருவது கூடப் பாரதி போலச் சப்பணம் போட்டு மார்பையும் தலையை யும் நிமிர்த்து உட்கார்ந்திருந்தார், பேசுவதும் பாரதி போலவே வெடுக்கென்று பேசினர். மாலை 6 மணியளவில் அவரது கணவர் வந்து அவரை இல்லத்துக்கு அழைத்துச் சென்றார்.

அனைத்துலகத் தமிழ்க்கவிஞர் பெருமன்றத் துவக்கவிழா வில் பாவேந்தர் பேச்சில் பொதிந்திருந்த கருத்துக்கள் பின் வருமாறு:

> உலகின் பலநாடுகளிலும் வாழும் தமிழ்க் கவிஞர்கள் எல்லாரையும் ஒன்றுகத்திரட்டி ஒரு பெரிய சக்தியாக

உருவாக்குவது இம்மன்றத்தின் முதல் நோக்கம். அவர்கள் பாடல்களையெல்லாம் ஒன்றாகத் திரட்டி நூலாக வெளியிட வேண்டும். அப்பாடல்களை ஆங்கிலத்திலும் பிற மொழிகளிலும் பெயர்க்க வேண்டும். தில்லிக்கும், பிற மாநிலங்களுக்கும் தமிழே அறியாத சிலர் தாங்கள்தாம் தமிழ்க் கவிஞர்களின் முகவர்கள் என்று கூறிக்கொண்டு செல்கின்றார்கள். அத்தகைய வேற்று மாநில மன்றங்களுக்குக் கவிஞர் மன்றம் தனது முகவரை அனுப்பவேண்டும்."

அனைத்துலகத் தமிழ்க்கவிஞர் பெருமன்றத்தின் சார்பில் திங்கள் இருமுறை இதழாகக் குயில் மீண்டும் துவக்கப்பட்டது. மன்றத்தின் குரலாக இக்குயில் கூவியது. 16 காசு விலை கொண்ட இந்த 16 பக்க இதழ் சென்னை இராமன் தெரு பாவேந்தர் இல்லத்தில் திருவள்ளுவராண்டு 1993 சித்திரைத் திங்கள் 2ஆம் நாள் (15—4—62) வெளிவந்தது. எட்டு இதழ்களோடு 1—8—62இல் இது தன் வரலாற்றை முடித்துக் கொண்டது. இந்த எட்டு இதழ்களும் குறிப்பிடத் தக்கவை. இவற்றில் தகுதிவாய்ந்த 21 இளங் கவிஞர்கள் படத்தோடு அறிமுகப்படுத்தப்பட்டார்கள். பாவேந்தரும் வாரந்தோறும் நிறைய எழுதினார். பாவேந்தரின் அன்புக் கட்டளையின்பேரில் அவருடைய பாடல்கள் மூன்றினை நான் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தேன்; அவைகளும் வெளியாகியிருக்கின்றன. 1—8—62இல் வெளியான இறுதி இதழ்தான் பாவேந்தர் தம் வாழ்நாளில் கடைசியாக வெளியிட்ட கவிதை இதழ். இவ்விதழில் எழுதியுள்ள இளங் கவிஞர்களின் ஒவ்வொரு பாடலும், பாவேந்தரின் 'சிறப்புக்கவி' என்னும் அணிபூண்டு அழகுற வெளியாகியுள்ளன. இக்கடைசிக் குயில் வரிசையின் முதல் இதழ்,

திருமிகு தமிழகத் தலைநகர் ஆன
சென்னையிற் பன்னூறு கவிஞர் சேர்ந்த
அனைத்துலகத் தமிழ்க் கவிஞர் பெருமன்
றத்தின் சார்பில் முத்தமிழ்ப் புத்தமிழ்து

பாடுங் குயில்! இது பதினேந்து நாட்கள்
தேடுவார் அடையும் தேடருஞ் செல்வம்.

கலகக் கட்சிக ளில்தலை யிடாது
வலிய வரும்சண் டையையும் விடாது;
குயிலின் கொள்கையும் குயிலை உடைய
பெருமன் றத்தின் கொள்கையும் இதுவே

என்று தன்னைத் தலையங்கத்தில் அறிமுகப்படுத்திக் கொண்டது. இத் தலையங்கத்துக்குக் காரணம் நானும், மன்றத் துவக்க விழாவுக்கு வந்திருந்த வேறு சில நண்பர்களும் "ஐயா! நீங்கள் நாட்டுக்குப் பொதுவானவர்; தமிழரின் பொதுச் சொத்து. உங்களுக்கு இனிக் கட்சி அரசியல் வேண்டாம்" என்று வற்புறுத்திக் கூறியதுதான். பிறவி அரசியல்வாதியான பாவேந்தரால் அரசியல் இல்லாமல் இருக்க முடியுமா? திராவிட முன்னேற்றக் கழகம் விலை வாசிப் போராட்டத்தில் ஈடுபட்டது. நாடெங்கிலும் ஆயிரக் கணக்கான தோழர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டுச் சிறை சென்றனர். போராட்டக் காலத்தில் நாட்டில் சில அசம்பாவிதங்கள் நடைபெற்றன. உடனே பாவேந்தரின் அரசியல் பேனு நெருப்பைக் கக்கத் தொடங்கியது. 1—8—62இல் வெளியான கடைசிக் குயில் கீழ்க் கண்ட அரசியற் கண்டனப் பாடலோடு முற்றுப் பெற்றது.

மணப்பந்த லுக்குத்தீ வைத்தார் கழகப்
பிணப்பந்த லுக்குக்கால் நட்டார்— பணத்துக்குத்
தீட்டிய திட்டம் சிவசிவா! ஊர்ப்பெயரால்
ஓட்டிய ஓட்டைவண்டி தூள்.

□

கவிஞர் பெருமன்றத் துவக்கவிழா முடிவுற்றதும் வந்திருந்த கவிஞர்கள் யாவரும் மாலை ஆறுமணியளவில் பாவேந்தரிடம் விடைபெற்றுச் சென்றனர். நான் மட்டும் அங்கு இருந்தேன். இரவு எட்டு மணி ஆயிற்று. நீண்ட

கருப்புக்கார் ஒன்று பாவேந்தர் வீட்டுக்குப் படகுபோல் வந்து நின்றது. பெருமிதமான தோற்றமுடைய ஒருவர் அதிலிருந்து இறங்கி உள்ளே வந்தார். பாவேந்தர் அவரை அன்போடு வரவேற்றார். இருவரும் மகிழ்ச்சியோடு அரைமணிநேரம் உரையாடிக்கொண்டிருந்தனர். பின்னர் இருவரும் விருந்துண்ணத் தொடங்கினர். மிகவுயர்ந்த புலால் உணவும், வெளிநாட்டு விஸ்கியும் விருந்தில் இடம் பெற்றன. அவர்கள் இருவரும் விருந்தை முடிக்கும் போது மணி 9·30. அதற்குமேல் பொன்னடியும் நானும் சாப்பிட உட்கார்ந்தோம். நான் பொன்னடியைப் பார்த்து "யாரிந்தச் சிறப்பு விருந்தினர்?" என்று கேட்டேன்.

"அவர் வருமான வரித்துறையில் பெரிய அதிகாரி" என்றார் பொன்னடி.

"இவர் அடிக்கடி வருவாரா?" என்று கேட்டேன்.

"ஆமாம்! இன்னும் பல பெரிய அதிகாரிகளும் வருவர்" என்றார் பொன்னடி.

"விருந்துச் செலவு யாருடையது!" என்று கேட்டேன்.

"எல்லாம் பாவேந்தருடையதுதான். இது பெரிய இடத்துச் சமாச்சாரம். நமக்கெதற்கு? இதோடு விட்டு விடுவோம்" என்றார் பொன்னடி. அதன் பிறகு நாங்கள் இருவரும் அதைப்பற்றிப் பேசுவதில்லை.

சாப்பிட்டு முடிந்ததும் நானும் பொன்னடியும் விருந்து சாப்பிட்ட மேசை நாற்காலிகளை ஒழுங்கு செய்து ஓரிடத்தில் எடுத்துப் போட்டுவிட்டுப் படுக்கப் போனோம். பாவேந்தரும் அந்த அதிகாரியும் இரவு 10 மணிவரை பேசிக்கொண்டு இருந்தார்கள். அதற்குமேல் அந்த அதிகாரி விடைபெற்றுக் கொண்டு சென்றார். பாவேந்தர் படுக்கையில் அமர்ந்து புகைப்பிடித்துக் கொண்டிருந்தார். சமையற்காரத் தாயாரம்மாள் வீட்டு வேலைகளை முடித்து விட்டு நடுக்கூடத்தில் வழக்கம் போல் படுத்துக் கொண்

டார். நானும் பொன்னடியும் முன்னலிருந்த வரவேற் பறையில் படுத்திருந்தோம்.

பாவேந்தரோடு பழகத் தொடங்கிய இந்த ஒரு வாரத்தில் இன்று எனக்குப் புது அனுபவம். பாவேந்தர் மது அருந்துவார் என்று கேள்விப்பட்டதுண்டு; ஆனால் நேரில் பார்த்ததில்லை. என்னைக் கண்டு அவர் நாணுவாரோ என்ற அச்சத்தால் அவர் விருந்துண்ணத் தொடங்கிய திலிருந்து நான் அவர் கண்ணில் படாமல் இருந்தேன். சாப்பிட்ட பிறகும் அவர் கண்ணில் படாமல் படுத்துக் கொண்டேன். இதைக் கவனித்திருப்பார் என்று எண்ணு கிறேன்.

இரவு 10-30 மணிக்கு 'முருகு' என்ற குரல் பாவேந்தர் அறையிலிருந்து கேட்டது; எழுந்து ஓடினேன். பாவேந் தர் எந்தவித மாறுபாடும் இல்லாமல் கம்பீரமாக, அமைதி யாகப் படுக்கையில் கால்மேல் கால் போட்டுக்கொண்டு அமர்ந்திருந்தார். நான் எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்தேன். இருவரும் என்ன பேசுவதென்று தெரி யாமல் சிறிது நேரம் உட்கார்ந்திருந்தோம். பிறகு பாவேந்தரே 'தூக்கம் வரலே' என்று பேச்சைத் துவக்கினார்.

பிறகு அன்று நிகழ்ந்த பெருமன்றத் துவக்க விழா பற்றி யும், விழாவுக்கு வந்திருந்த கவிஞர்களைப் பற்றியும் பேச்சுத் திரும்பியது. சகுந்தலாபாரதி அவர் தந்தை போலவே இருப்பதாக நான் சொன்னேன். பாவேந்த ரும் ''ஆமாம்! பாரதி நல்ல உயரம். ஒடிசலான உடம்பு; பொன்னிறம்; சுடுவது போன்ற பார்வை; துடிப்பான மீசை. பாரதியின் ஆற்றல் முழுமை பெற்றிருந்த நேரத் தில் பிறந்த பெண் சகுந்தலா. சகுந்தலா என்று இந்தப் பெண்ணுக்குப் பாரதி பெயர் வைத்ததற்கு முக்கியக் கார ணம் உண்டு. பாரதி புதுச்சேரியிலே இருந்தபோது வ.வெ.சு.அய்யர், வ.ரா. முதலிய நண்பர்களோடு கூடிக் காளிதாசனின் 'சகுந்தலை'யை நாடகமாக நடிக்கத் திட்ட

மிட்டார். ஒத்திகையும் நடந்தது. அதில் பாரதி துஷ்யந்தன் பாத்திரத்தை ஏற்று நடித்தார். ஆனால் நாடகம் நடக்கவில்லை. சகுந்தலை நாடக ஒத்திகை நடந்தபோது இந்தப் பெண் பிறந்ததால், இவளுக்கும் சகுந்தலை என்று பெயர் வைத்தார் பாரதி'' என்றார் பாவேந்தர். அதன் பிறகு கவிஞர்கள் வாணிதாசன், சுரதா, பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம், மு.அண்ணாமலை ஆகியோரைப் பற்றிப் பேச்சுத் திரும்பியது. இந்த நால்வரைப் பற்றியும் மிகவும் சுருக்கமாகச் சொல்லிச் சட்டென்று முடித்துக் கொண்டார்.

"வாணிதாசனுக்கு வயது நாற்பதிருக்கும். சொந்த ஊர் சேவியமேடு. நான் பிரெஞ்சு அரசாங்கப் புலவர் தேர்வுக் குழுத் தலைவனா இருந்தப்போ, இவனும் தேர்வு எழுதினான். நான் வேலையிலே இருந்த கல்வே கல்லூரியிலே இவனும் தமிழாசிரியனா இருந்தான். நடுவிலே கல்லூரியிலே கொஞ்சம் குறும்பு பண்ணிட்டா. அதனாலே சொந்த ஊரான சேவியமேட்டுக்கே மாத்திப்புட்டாங்க. முதலில சின்னச் சின்னதாக் கவிதை எழுதிக்கிட்டு வந்து காட்டுவான். நாந்தா திருத்திக் கொடுப்ப. நானே ஒரு சாற்றுக்கவி அவன் பாட்டுக்கு எழுதிப் பத்திரிகையிலே போட்டு விளம்பரப் படுத்தினேன். அவன் கவிதையில் புதிய கற்பனை ஒரு எழுச்சி இல்லை. என்னை அப்படியே பின்பற்றி எழுதுவான். நல்லாத்தா இருந்தா. கட்சி பிரிஞ்சப்போ இந்தக் கண்ணீர்த்துளிப் பசங்க கூட இவனும் சேர்ந்துட்டா. அப்பறம் இந்தப்பக்கம் வராதடானு ஞுட்ட. இருந்தாலும் வருவா...கொஞ்சம் நன்றி உணர்வுள்ளவ.

'இன்ப இரவு'ன்னு நான் நாடகம் ஒன்னு நடத்திக்கிட்டு இருந்தப்ப அதிலே சுரதா நடிச்சுக்கிட்டு இருந்தான். என் பாடல்களைப் பேர்த்து எழுதுவான். பாண்டியன் பரிசை அவந்தா பேர்த்து எழுதினான். எழுத்து மணி மணியா இருக்கும். கொஞ்சம் துணிச்சலானவ.

''பட்டுக்கோட்டை கலியாணசுந்தரமும் மு. அண்ணாமலையும் கொஞ்சநாள் எங்கிட்ட புதுச்சேரியிலே இருந்தாங்க. இரண்டுபேரும் என் பாட்டைப் பேர்த்து எழுதுவானுங்க. பட்டுக்கோட்டை இருக்கானே ரொம்ப அமைதி. என் எதிரிலேயே பயபக்தியோட வாய் கூடத் திறக்காம உட்கார்ந்திருப்பான். என்கிட்ட அளவு கடந்த மரியாதை. எதை எழுதினாலும் 'பாரதிதாசன் வாழ்க'ன்னு மேலே போட்டுட்டுத்தா எழுதுவான். அவன் இவ்வளவு வேகமா வளருவான்னு நான் அப்ப நெனைக்கில. அந்த அறிகுறி எதுவும் அப்பத் தென்படல.''

மாலையில் கவிஞர் மன்றத் துவக்க விழாவில் அவர் பேசிய கருத்துக்களின் மீது எங்களுடைய பேச்சுத் திரும்பியது. ஆண்டுதோறும் இந்திய ஜனாதிபதி முன் தில்லியில் நடைபெறும் பன்மொழிக் கவியரங்கத்திற்குத் தமிழகத்தின் சார்பில் மேலிடச் செல்வாக்குப் பெற்ற ஊர்பேர் தெரியாத கவிஞர்களே அனுப்பப்படுகின்றனர் என்பதைப் பற்றி நாங்கள் பேசியபோது, புதுச்சேரியில் அவர் ஆசிரியப்பணியில் இருந்தபோது நடைபெற்ற ஒரு நிகழ்ச்சியை நகைச்சுவையோடு எடுத்துக்கூறினார்:

"சேஞ்சான்னு ஒருத்த..."

"என்ன சொன்னீங்க?" என்றேன் நான். ''செயிண்ட் ஜான் அவனோட பேர். காரைக்காலிலே அவன் ஒரு அவுக்கா(வழக்குரைஞர்). அவனே சேஞ்சான்...சேஞ்சான்னு எல்லாரும் கூப்பிடுவோம். வழக்குரைஞர் பட்டம் பெற இவன் பிரெஞ்சுநாடு போயிருந்தான். ஏதோ தமிழறிந்ததா அங்கே காட்டிக்கிட்டான். அவன் புதுச்சேரி திரும்பி வந்ததும் பிரெஞ்சு அரசாங்கம் அவனைத் தமிழ்த் தேர்வுக் குழுவோட தலைவனு ஆக்கிட்டாங்க. அவனுக்கு தமிழுந் தெரியாது, ஒரு மண்ணுந்தெரியாது. புதுவை

யிலே ஒரு தமிழ்த்தேர்வு நடந்தது. அந்தத் தேர்வோட வினுத்தாளிலே 'கல்லாதான் ஒட்பம்' என்று தொடங்கும் குறள் இடம் பெற்றது. அந்தப்பாட்டு சேஞ்சானுக்குப் புரியல. 'கல்லாதான் நொட்டமா, கல்லாதான் ஒட்டமா, கல்லாதான் ஒட்டமான்னு' அவனுக்கு ஐயம். கடைசியிலே 'கல்லாதான் ஒட்டம் கழியநன் ருயினும்னு' வினுத் தாளி லேயே அச்சுப் போட்டுட்டான். இது என் கவனத்துக்கு வந்துச்சு. விடைத்தாள்களோ நானே திருத்தி மதிப்பெண் போட்ட. அதுக்குப் பிறகு புதுச்சேரியிலே தமிழைப் பொறுத்தவரையிலும் எந்த ஐயமுன்னுலும் ...போ...சுப்பு ரத்தினத்துக்கிட்டன்னுதா சொல்வாங்க. இதை எதுக்குச் சொல்றன்னு எந்த விதத்திலும் தகுதியில்லாதவன்தா வெளியுலகுக்குப் போயித் தன்னைக் கவிஞனென்றும், அறிஞனென்றும் விளம்பரப்படுத்திக்கரு'' என்று குறிப் பிட்டார்.

இரவு மணி பன்னிரண்டாகி விட்டது; தூக்கம் வரும் போலிருந்தது. அப்போது பாவேந்தர் தாமே மதுவைப் பற்றிப் பேசத்தொடங்கினர். "நான் வாரத்திலே இரண்டு மூன்று நாள் மட்டும் அளவோடு குடிப்பது வழக்கம். அள வோடு குடிப்பது உடம்புக்கும் நல்லது, எங்க பக்கத்திலே இது உணவு மாதிரி. வீட்டில பெண்களே கொஞ்சம் ஊற்றி உணவுக்கு முன்னுல அளவோடு கொடுப்பாங்க. எப்போதுமே, 'குடிப்பது குடிப்பதற்காக' என்பது தவ ருன கொள்கை. குடிப்பது உணவைச் சுவைத்துச் சாப்பிடு வதற்குத் துணை செய்ய வேண்டும். அந்த அளவுதான் குடிக்கணும். நீ புதுச்சேரி வந்தா பார்க்கலாம். புதுச்சேரிக் கார எவனும் அளவுக்கு மீறிக் குடிச்சுப்புட்டு வீதியிலே வரமாட்டா. அப்படி எவனுவது குடிச்சுப்புட்டு வீதியோ ரத்திலே உருண்டு கிடந்தான்னு அவ புதுச்சேரிக்கார அல்ல. சேலத்துக்கார" என்று கூறிவிட்டு உரக்கச் சிரித் தார். நானும் சிரித்து விட்டு எழுந்து வந்து படுத்துக் கொண்டேன்.

□

30—1—62

செவ்வாய்

□

இரவு மணி ஏழு இருக்கும். கவிஞர் இல்லம் சென்றேன். கட்டிலில் கவிஞர் படுத்திருந்தார். நான் நேராக அறைக்குள் சென்றேன். தலையைச் சாய்த்து என்னைப் பார்த்து 'வா' என்றார். நான் நாற்காலியில் அமர்ந்தேன். கவிஞர் ஏதோ சிந்தனையில் இருந்தார். நீண்ட நேரம் எதுவும் பேசவில்லை. நான் பேசாமல் எழுந்து வந்து 'ஏன் இன்று கவிஞர் ஒரு மாதிரியாக இருக்கிறார்?' என்று பொன்னடியிடம் கேட்டேன்.

''யார் கண்டது? சித்தம் போக்கு! சிவன் போக்கு! நமக்கென்ன? நாம் போய் சாப்பிடலாம் வாங்க!'' என்று கூறிச் சிரித்தார் பொன்னடி. பொன்னடியும் நானும் சாப்பிட்டுவிட்டுப் படுத்துவிட்டோம். காலை 6 மணிக்கு நான் கண்விழித்து எழுந்தபோது கவிஞர் வீட்டில் இல்லை. நானும் சைதாப்பேட்டை புறப்பட்டேன். உந்துவண்டி ஏறுவதற்காக நான் தேனாம்பேட்டை நாற்சந்திக்குச் சென்றபோது பாவேந்தர் அங்கு பாதையோரத்தில் நின்றுகொண்டிருந்தார். அந்தக் காட்சி என் உள்ளத்தை மிகவும் வருத்தியது. நான் அருகில் சென்று, ''ஏனய்யா இங்கு நின்றுகொண்டிருக்கிறீர்?'' என்று கேட்டேன்.

''ஆமாம்! நிற்க முடியவில்லை. கால் கடுக்கிறது'' என்று சொன்னார். உடனே அருகில் இருந்த பெட்டிக்கடையில் ஒரு பெட்டி வாங்கி அதன் மீது கவிஞரை உட்கார வைத்தேன். கவிஞர் ஒரு வெண் சுருட்டைப் பற்றவைத்துக் கொண்டு அதன் மீது உட்கார்ந்தார். சற்றுத் தள்ளி நின்றுகொண்டிருந்த கோவிந்தராசன் என்ற நண்பரைக்

காட்டி, ''இந்த மடையன் என்னை வீட்டிலிருந்து நடக்க விட்டே கூட்டிக்கிட்டு வந்தா'' என்று வருத்தத்தோடு சொன்னார்.

''எந்த ஊருக்குப் புறப்படுகிறீர்?'' என்று நான் கேட்டேன்.

''குடியேற்றம் (குடியாத்தம்) போற. இராசகோபால் நாயுடு குடியேற்றம் காங்கிரஸ் வேட்பாளர். அவரை ஆதரிச்சுத் தேர்தல் கூட்டத்திலே பேசறத்துக்காக போற'' என்றார் பாவேந்தர்.

''அவர் பஸ் முதலாளியாயிற்றே. உங்களுக்கு ஒரு கார் அனுப்பக்கூடாதா?'' என்று நான் கேட்டேன்.

'அனுப்பலாம்' என்று சொல்லிவிட்டு, அங்கே நின்று கொண்டிருந்த கோவிந்தராசனைக் காட்டி, ''இவனை அவர் எப்படி மதிக்கிறாரோ?'' என்று கூறினார். அதற்குள் உந்து வண்டி வந்து விட்டது. அவரை வண்டியில் ஏற்றிவிட்டு நான் கல்லூரி சென்றேன்.

□

2—2—62

வெள்ளி

□

மாலை 6 மணியளவில் கவிஞர் இல்லம் சென்றேன். குடியேற்றம், விழுப்புரம் தேர்தல் கூட்டங்களை முடித்துக் கொண்டு 31—1—62 புதன்கிழமையே கவிஞர் சென்னை திரும்பிவிட்டார். மூன்று நாட்களாகக் கவிஞரைப் பார்க்காதது என்னவோ போல் இருந்தது. அறைக்குள் நுழைந்தபோது மேஜைட்டு முறையில் கோட்டும் சூட்டும்

அணிந்த ஓர் இளைஞர் பாவேந்திரின் 'கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே இங்கு வேரில் பழுத்த பலா' என்ற பாடலை ஈடுபாட்டோடு பாடிக்கொண்டிருந்தார். பாடும் பாணியும் குரலும்கூடக் கணீரென்று சிதம்பரம் ஜெயராமனுடையதைப்போல் இருந்தன. அவருக்கு எதிரில் மற்றொரு நண்பரும் உட்கார்ந்திருந்தார்.

நான் உள்ளே நுழைந்ததும் மிக்க ஆர்வத்தோடு, ''வா! எங்கே மூணு நாளாக் காணோம்? தோ...இவர் கவிஞர் தஞ்சைவாணன் எம்.ஏ. சட்டக் கல்லூரி மாணவர். இவர் 'ம்யூசிக் டைரக்டர்'; பல படங்களுக்கு இசையமைக்கிறார்'' என்று அறிமுகப்படுத்தினர்.

என்னை அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கும்போது, ''இவர் முருகுசுந்தரம் எம்.ஏ. பெரிய கவிஞர். சேலம் காலேஜிலே புரொபசர். எனக்கு ரொம்ப வேண்டியவர்'' என்று சொன்னர்.

'அரங்க.ராமானுஜம்' என்பது கவிஞர் தஞ்சைவாணனின் இயற்பெயர். 'என்புதோல் போர்த்த உடம்பு' என்று வள்ளுவப் பெருமான் வகுத்த வைர வரிகள் வேறுயாருக்கு மல்ல; இவருக்குத்தான். நாகரிகமாகச் சொன்னால் 'நடக்கும் கோல்' என்று சொல்லலாம். தம்முடைய பூஞ்சை உடம்பைச் சற்றுப் பார்ப்பவர் கண்ணில் பெரிது படுத்திக் காட்டுவதற்காக எப்போதும் மொத்தமான கோட்டணிந்து காட்சியளிப்பார். பாவம்! இப்போது எப்படி இருக்கிறாரோ? சென்னை வாஹினி நிலையத்தில் தற்போது பணிபுரிந்து கொண்டிருக்கிறார்; நுட்பமானவர். எதைப் பேசினாலும் ஈடுபாட்டோடு பேசுவார். உடனிருந்த இசையமைப்பாளர் யாரென்று நினைவில்லை.

''கட்சி அரசியல் உங்களுக்கு வேண்டாம்; நீங்கள் தமிழர்க்குப் பொதுவானவர்'' என்று நான் பாவேந்தருக்கு அடிக்கடி கூறுவதுண்டு. நான் கூறும்போது அவரும் 'சரி' என்று கூறுவார். ஆனால் வாய்ப்பு நேரும்போது

மிகவும் தீவிரமாக அரசியல் பேசுவார்; எழுதுவார். கவிஞர் தஞ்சைவாணன், கோவிந்தராசன் போன்றவர்கள் அவரைக் கட்சி அரசியலில் இழுத்துவிட்டு வேடிக்கைப் பார்த்தார்கள்.

அப்போது தி. மு. க. விலிருந்து சம்பத் பிரிந்து தமிழ்த் தேசியக் கட்சியைத் துவக்கி '62 தேர்தலில் தீவிரமாக ஈடுபட்டிருந்த நேரம். 'சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கப் போகிறேன்' என்று முழக்கமிட்டுச் சென்னை நகரில் சம்பத் ஆர்ப்பாட்டமான தேர்தல் ஏற்பாடுகளில் ஈடுபட்டிருந்தார். சென்னை நகரம் எங்கு பார்த்தாலும் கண்ணைக் கவரும் வரவேற்பு வளைவுகளோடு விழாக் கோலந் தாங்கிப் புதுமணப் பெண் போல் காட்சியளித்தது. தமிழ்த் தேசியக் கட்சியின் போர் ஆரவாரத்தைக் கேட்டு, வெளியிலே காட்டிக்கொள்ளாத குலை நடுக்கத்தோடு தி. மு. க. இருந்த நேரம். பாவேந்தரைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுத்துவதற்காகச் சம்பத்தின் தூது வராகத் தஞ்சைவாணன் வந்திருந்தார். வந்த வேலையையும் வெற்றிகரமாக முடித்துக்கொண்டு பாவேந்தரின் இசைவோடு தஞ்சைவாணன் விடைபெற்றார்.

படித்துப் பட்டம் பெற்ற, முற்போக்குக் கருத்துக்களைக் கொண்ட இளைஞர்களைக் கண்டால் பாவேந்தருக்கு மிகவும் பிடிக்கும். பட்டதாரி இளைஞர்களைத் தம்முடன் அழைத்துச் செல்வதிலும், அவர்களை மற்றவர்களிடம் அறிமுகப்படுத்துவதிலும் அவருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி. என்னை மற்றவரிடம் 'பெரிய கவிஞர்', 'புரொபசர்' என்று அவர் வாயால் கூறி அறிமுகப்படுத்தும் போது நான் மிகவும் வெட்கப்படுவேன். பாவேந்தர் தனியாக இருக்கும்போது, ''ஐயா! நான் பெரிய கவிஞனுமில்லை; புரொபசருமில்லை; என்னை ஏன் அளவுக்கு மீறி உயர்த்திக் கூறுகிறீர்கள்'' என்று கேட்பதுண்டு.

உடனே ''நீ சும்மா இரு! உனக்கென்ன?'' என்று கூறி அடக்கிவிடுவார்.

கவிஞர் தஞ்சைவாணன் சென்ற பிறகு நானும் பாவேந்தரும் சாப்பிட அமர்ந்தோம். மீன் குழம்பும் உப்புக் கண்டமும் இலையில் பரிமாறப்பட்டன. நாள்தோறும் மீன் இல்லாமல் பெரும்பாலும் சாப்பிடமாட்டார். புதுச்சேரி கடற்கரை நகராகையால் மிகவும் மீன் மலிவாகக் கிடைக்கும். புதுவை வாசியான பாவேந்தருக்கு மீன் அன்றாட உணவாகிவிட்டது. மீனின் சினையை விரும்பிச் சாப்பிடுவார். இலையில் பொரித்து வைக்கப்பட்டிருந்த மீன் சினை என்ன வென்றே எனக்குப் புரியவில்லை. நான் தடுமாறுவதைப் பார்த்த பாவேந்தர், ''என்ன விழிக்கிற? மீனோட சினை. ரொம்ப நல்லா இருக்கும். சாப்பிடு'' என்றார். நானும் சாப்பிட்டேன்.

இலையில் பரிமாறப்பட்டிருந்த உப்புக் கண்டத்தைக் காட்டி, ''இது என்ன உப்புக் கண்டம்? சொல்லு பார்க்கலாம்'' என்று கேட்டார்.

அதைச் சுவைத்துப் பார்த்தபோது அது ஆட்டுக் கறியாகத் தெரியவில்லை. சுவை மாறுபட்டிருந்ததால் மான் கறியாக இருக்கும் என்று நினைத்து, ''மான் கறியா?'' என்றேன். உடனே பாவேந்தர் ''இல்லை. புலிக் கறி!'' என்றார். எனக்குத் தூக்கி வாரிப் போட்டது.

''என்ன? புலியா? புலிக்கறி எப்படிக் கிடைத்தது?'' என்றேன் நான்.

"புதுக்கோட்டை அரசருக்கு வேண்டிய ஒரு நடிக நண்பர் எனக்கு அடிக்கடி அனுப்புவார். சாப்பிடு! புலிக்கறி சாப்பிட்டால் வீரம் மிகும்'' என்றார். வேறு வழி? சாப்பிடாமல் இலையை விட்டு எழ முடியுமா? பேசாமல் எப்படியோ சாப்பிட்டுத் தீர்த்தேன்.

□

4—2—62

ஞாயிறு

□

3-2-62 சனிக்கிழமை இரவு மந்தை வெளியில் த.தே.க. கூட்டம். சம்பத்தும் கவிஞர் கண்ணதாசனும் பேசினர்கள். நானும் தஞ்சை வாணனும் கவிஞர் சுரதாவோடு கூட்டத்துக்குச் சென்றிருந்தோம். கூட்டம் முடிய இரவு நெடு நேரம் ஆகிவிட்டது. நான் நண்பர் திரு. மயிலைநாதன் வீட்டில் படுத்துக்கொண்டேன். காலையில் எழுந்ததும் சுரதா வீட்டுக்குச் சென்றேன். அன்று நடுப்பகல் அவர் வீட்டில் எனக்கும் மயிலைநாதனுக்கும் விருந்து.

அன்று மாலை 7 மணியளவில் பாவேந்தரைக் காணப்புறப்பட்டேன். பாவேந்தர் இரா உணவை முடித்துக்கொண்டு அப்போதுதான் வந்தமர்ந்தார். அன்று அவரே விரும்பித் தம் இளமைக்கால நிகழ்ச்சிகளைப் பொறுமையோடு சொன்னார். அவர் சொன்னதை நான் அப்படியே கீழே கொடுத்திருக்கிறேன்:

"என் தந்தை கனகசபை புதுச்சேரியில் கப்பல் வாணிபம் செய்தவர்; மளிகைமண்டி வைத்திருந்தார். மணிலா, வெங்காயம், வெற்றிலை, கோழிமுட்டை, புட்டியில் அடைத்த மிளகுரசம் முதலியவற்றைக் கப்பலில் பிரான்சு முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வார். ஒரு முறை இவருடைய சரக்கை ஏற்றிச்சென்ற கப்பல் கவிழ்ந்ததால் எங்கள் குடும்பமே கவிழ்ந்தது. அப்போது என் தந்தைக்கு வயது எழுபது. பல இலட்சம் வாணிபத்தில் இழப்பு. இப்போது இருக்கும் புதுச்சேரி வீடு நான் தலையெடுத்துவாங்கியது. பள்ளியில் படித்துக் கொண்டிருந்த

காலத்தில் இயல்பாகவே கூர்மையான அறிவு பண்டைத்தவன் என்று என்னை ஆசிரியர்கள் பாராட்டுவார்கள். கணக்கும் கட்டுரையும் அப்போது பள்ளிகளில் முக்கியப் பாடங்களாகக் கருதப்பட்டன. என்னுடைய தொடக்கக் கல்வி திருப்புளிசாமி ஐயாவின் திண்ணைப் பள்ளிக்கூடத்தில் துவங்கியது. திருப்புளிசாமி ஐயா சாத்தானி (பூணூல் சாத்தாத வைணவர்) வகுப்பைச் சேர்ந்தவர். என் மீது அவருக்கு அளவு கடந்த பற்றுண்டு. அவரிடத்திலேயே பல நூல்களைப் பாடங்கேட்டேன். அதன் பிறகு கால்வே கல்லூரியில் தமிழ்ப்புலவர் தேர்வுக்குப் படித்தேன்.

எனக்குக் கணக்கு மிக நன்றாக வரும். நான்தோறும் புலவர் வகுப்பு மாணவர் எல்லாரும் வழக்கமாக ஓரிடத்தில் கூடுவோம். சிலர் கேரம், சிலர் சொக்கட்டான், சிலர் கடுதாசி (சீட்டு) விளையாடுவார்கள். புலவர் வகுப்பு மாணவர்களுள் உருவத்தில் நான் சிறியவன்; படிப்பில் பெரியவன். நான் சிறியவனாக இருந்ததால் என் நண்பர்களுக்குத் தின்பண்டம், சிகரெட் முதலியவை நான்தான் வாங்கிக் கொண்டுவந்து கொடுப்பேன். எங்கள் வகுப்புக்கு நல்ல 'ரிசல்ட்' வரவேண்டும் என்பதற்காக ஆசிரியர்களின் ஒப்புதலோடு தேர்வு நடக்கும்போது கட்டுரைக்குப் பல படிகள் எடுத்து மற்ற மாணவர்களுக்கும் நான் கொடுப்பதுண்டு. அதைப்பார்த்து எழுதிப்பல மாணவர்கள் வெற்றி பெறுவது வழக்கம். ஒருமுறை தேர்வு நடந்து கொண்டிருந்தபோதே திருப்புளிசாமி ஐயா தேர்வுக் கூடத்தின் வாயிலில் வந்து மகிழ்ச்சியோடு ''டே சுப்புரத்தனம்! நீ கட்டுரையில் முதல்வனாக வெற்றிபெற்றிருக்கிறாய். நீ கட்டுரையில் 20க்குப் 18'' என்று தேர்வு முடிவு வெளியாவதற்கு முன்பே வந்து கூச்சலிட்டார். நான் சாடை செய்து அவரைப் பேசாமல் போகும்படி கூறினேன்.

புலவர் தேர்வில் முப்பது பேருக்கு மேல் வெற்றி பெற்றனர். ஆனால் முதன்மையாக நான் வெற்றிபெற்றது மற்றவருக்குத் தெரியாது. நானும் வெளியில் சொல்லவில்லை.

வழக்கமாகப் புலவர் வகுப்பு மாணவர்களாகிய நாங்கள் மாலையில் கூடும் மன்றத்தில் ஒவ்வொருவரும் ''நான் அவரைப் பிடித்தேன்; இவரைப் பிடித்தேன்; எனக்குத் தான் முதல் மதிப்பெண் கிடைக்கும்'' என்று பேசிக் கொண்டார்கள். நான் வாயே திறக்கவில்லை; மனதிற்குள் சிரித்துக் கொண்டேன்.

புதுவைக் கல்வி இயக்குநரின் செயலாளராக இருந்த திரு. கையார் என்பவர் என் தந்தையின் நெருங்கிய நண்பர். அவர் என்னைக் கூப்பிட்டு, ''சுப்புரத்தனம்! தமிழாசிரியர் வேலைக்கு ஒரே ஒரு இடம்தான் காலியிருக்கிறது. அதுவும் நிரவியில்தான். நியாயமாக அந்த இடம் உனக்குத் தான் கிடைக்கவேண்டும். காரணம் நீதான் முதன்மையாகத் தேர்வில் வெற்றிபெற்றிருக்கிறாய். அதுவுமில்லாமல் நீ அரசாங்க உதவித்தொகை பெற்றுப் படித்தவன். சட்டப்படி அரசாங்க உதவித்தொகை பெற்றுப் படித்தவனுக்குத்தான் முதற்சலுகை. உன்னிடத்தில் உள்ள ஒரே குறை நீ உருவத்தில் மிகச்சிறியவன்; பொடியன். நீ நேர்முகத் தேர்வுக்கு வரும்போது இரண்டு மூன்று சட்டையணிந்து, அவைகளுக்குமேல் ஒரு கோட்டும் அணிந்து வரவேண்டும். உன்னை உயரமாகக் காட்டிக் கொள்வதற்காகக் குதியுயர்ந்த பூட்சு போட்டுக் கொண்டு வா. கல்வி இயக்குநரிடம் தைரியமாகப் பேசு! நான் உதவித் தொகை பெற்றுப் படித்தவன்; எனக்குத்தான் வேலை கிடைக்க வேண்டும். இல்லாவிட்டால் நான் ஆளுநரைச் (Governor) சென்று பார்ப்பேன் என்று சொல்லு. நான் அருகில் தான் இருப்பேன்'' என்று கூறினார். வீட்டுக்கு வந்து தந்தையிடமும் சொன்னார். தந்தை என்னைக் கூப்பிட்டு, ''என்ன, கையார் சொன்னபடி சொல்வாயா?'' என்று கேட்டார்.

''என்னப்பா? இதுகூடவா என்னால் சொல்ல முடியாது?'' என்று தந்தையிடம் நான் கூறினேன்.

நேர்முகத் தேர்வும் வந்தது. கையார் சொன்னபடி உடை யணிந்து சீஃபின் (கல்வி இயக்குநரை அங்கு சீஃப் என்றே அழைப்பார்கள்) முன்னால் போய் நின்றேன். கொஞ்சமும் அஞ்சாமல் கையார் சொல்லிக் கொடுத்ததை அப்படியே ஒப்புவித்தேன். சீஃப் அருகிலிருந்த செயலாள ரான கையாரைப் பார்த்து, ''அப்படி ஒரு சட்டம் இருக் கிறதா?'' என்று கேட்டார். கையார் சட்டத்தை உடனே எடுத்துக் காட்டினார்.

''சரி நீ போ! வேலை உனக்குத்தான்'' என்று சீஃப் சொன்னார். கையார் அன்று மாலையே அலுவலில் சேர் வதற்குரிய ஆணையைக் கையோடு வாங்கி வந்து வீட்டில் கொடுத்தார்.

கையார் கொடுத்த ஆணையைச் சட்டைப் பையில் போட் டுக்கொண்டு வழக்கம் போல் புலவர் வகுப்பு நண்பர்கள் கூடும் மன்றத்துக்குச் சென்றேன். அங்கிருந்த நண்பர் கள் 'வேலை எனக்குத்தான்; உனக்குத்தான்' என்று தம் பட்டம் அடித்துக் கொண்டிருந்தனர். அந்த மன்றம் இருந்த வீட்டின் சொந்தக்கார அம்மாள் வடை சுட்டுக் கொண்டிருந்தார். அங்கு சென்று நான் மகிழ்ச்சியோடு வடை சாப்பிட்டேன். கடைசியாக எல்லாரும் புறப்படும் நேரத்தில் என் ஆணையை எடுத்துக் காண்பித்தேன். நண் பர்களில் ஒரிருவர் தவிர எல்லாருமே மகிழ்ச்சியடைந்தார் கள். சில நண்பர்கள் என்னை அவர்கள் வீட்டுக்கு அழைத் துச் சென்று விருந்து வைத்தார்கள். ஆதிமூலம் என்ற நண்பரின் தந்தை எனக்குக் கடிகாரம் ஒன்று பரிசாகக் கொடுத்தார். வேறு சில நண்பர்கள் சட்டை, சால்வை முதலியவை பரிசாக அளித்தார்கள். இது என் மாணவப் பருவ வாழ்க்கை வரலாறு.''

□

□

5—2—62

திங்கள்

□

எனக்குக் கல்லூரி வகுப்புகள் பிற்பகல் மூன்று மணியோடு முடிவடைந்துவிட்டன. மாணவர் விடுதியில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு தியாகராய நகருக்குப் புறப்பட்டேன். பாவேந்தர், பங்களா முற்றத்தில் (Portico) பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்தார்: நானும் மற்றொரு நாற்காலியை அவரருகில் எடுத்து போட்டு உட்கார்ந்தேன். முதன்முதலில் ஆசிரியர் பணிசெய்த நிரவி வாழ்க்கையைப் பற்றிக் கூறும்படி கேட்டேன். அவரும் நேற்று விட்ட இடத்திலிருந்து தொடங்கினார்.

"நிரவியில் ஆசிரியர்பணி ஏற்றுக்கொண்டபோது எனக்கு வயது 18 முடிந்து சில திங்கள்கள் ஆகியிருந்தன. நிரவி பிரெஞ்சு ஆளுகைக்குட்பட்ட ஒரு சிற்றூர். அங்கு வன்னியரும் பிள்ளைமாரும் குடியிருந்தனர். நான் உருவத்தில் மிகவும் சிறியவனாக இருந்த காரணத்தால், என்னை ஓர் ஆசிரியனாகவே அவ்வூர் மக்கள் பொருட்படுத்தமாட்டார்கள். பள்ளி முடிந்து செல்லும் போது வீதி வழியாக வரும் பெண்கள் 'இதோ போருனே பொடிப்பய, இவந்தா நம்ம ஊர்ப்பள்ளி வாத்தியாராம்!' என்று என் காதில் விழும்படியாகவே சொல்லுவார்கள்.

நிரவி அப்போது நகரத்து நாகரிகம் பரவாத சிற்றூர். புதுவையிலிருந்து என்னைப்பார்க்க நண்பர்கள் யாராவது முழுக்கால் சட்டை அணிந்து வந்தால் ஊர்மக்கள் கூட்டம் கூடிக்கொண்டு பார்ப்பார்கள். பொதுவாகச் சட்டை

களை நாம் தலைப்பக்கம் தானே போடுகிறோம்? அதன்படி கால் சட்டையையும் தலைப்பக்கம்தானே போட்டிருக்க வேண்டும்? எப்படி அதைத் தலைப்பக்கம் போட்டிருப்பார்கள் என்று அவ்வூர் மக்கள் வியப்போடு பார்ப்பதுண்டு. சிலர் இந்த ஐயத்தை என்னிடம் கேட்டுத் தெளிவு பெறுவதும் உண்டு.

என் தமிழ்ப் புலமையில் எனக்கு எப்போதும் நம்பிக்கையும் உறுதியும் உண்டு. எனக்குத் தமிழ் பயிற்றிய மூன்று ஆசிரியர்களும் பெரும் புலமை பெற்றவர்கள். கால்வே கல்லூரியில் எனக்குத் தமிழ்ப் பேராசிரியராக இருந்த சாரம் பூ.ஆ. பெரியசாமிப்புலவர் தமிழ்க்கடல். அவருக்கு ஒப்பாகத் தமிழ்நாட்டில் யாரையாவது சொல்ல வேண்டுமானால் மதுரை அரசஞ்சண்முகனாரைச் சொல்லலாம். இத்தகைய பெரியார்களிடம் தமிழ்கற்ற நான், எப்போதும் எந்தப் புலவரிடமும் அஞ்சியதில்லை. பெரும் புலவர்களின் பகையைச் சில சமயங்களில் நானே விரும்பித் தேடிக் கொள்ளும் வழக்கமும் உண்டு.

பள்ளி முடிந்து திரும்பும் போது, நிரவியின் தெருத் திண்ணைகளில் நான் பல சுவையான காட்சிகளைக் காண்பதுண்டு. அவ்வூர் வன்னியர்கள் வைணவப் பற்று மிக்கவர்கள்; நாமதாரிகள். அவர்களில் சில முதியோர் தெருத் திண்ணையில் அமர்ந்து "பள்ளியானே! பள்ளியானே!" என்று முடியும் ஆழ்வார் பாசுரங்களை உரக்கப் பாடிக் கொண்டிருப்பார்கள். நாள்தோறும் ஒரே பாடலைப் போகும்போதும் வரும்போதும் கேட்டுக் கேட்டு எனக்குப் புளித்துப்போய்விட்டது. நான் அவர்கள் உட்கார்ந்திருக்கும் திண்ணைக்கருகில் வரும் போது, "நீ தான் எப்பவே பள்ளி ஆயிட்டயே. இன்னம் பள்ளி† ஆனேன்; பள்ளி ஆனேன்னு ஏன் கத்திக்கிட்டிருக்கற?" என்று முணு முணுத்துக் கொண்டு போவேன்.

† 'பள்ளி' என்பது வன்னிய சமூகத்தார்க்கு வழங்கும் பல பெயர்களுள் ஒன்று.

நிரவியில் எங்கள் பள்ளியின் எதிரில் இருந்த வீட்டுக்குச் சொந்தக்காரர் விசுவலிங்கம்பிள்ளை என்பவர். அவர் ஊரில் பெரிய மனிதர். அவர் வீட்டுக் குறட்டில் பலகை அடித்திருக்கும். அதுதான் அவ்வூரின் சங்கப்பலகை. விசுவலிங்கம்பிள்ளை மாலை நேரத்தில் யாரையாவது நான்கு பேரைக் கூட்டிவைத்துக் கொண்டு தப்புந்தவறுமாக திருவிளையாடற் புராணம் சொல்லுவார்.

விசுவலிங்கம் பிள்ளையின் ஆசிரியர் இராமசாமிப்புலவர் என்பவர். இப்புலவருக்கு வயது 70 இருக்கும். ஒரு நாள் மாலை நான் பள்ளியிலிருந்து வீட்டுக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது குருவும் சீடரும் குறட்டுப் பலகையில் அமர்ந்து இலக்கியச் சர்ச்சை செய்து கொண்டிருந்தனர். இன்னும் சிலரும் உடனிருந்தனர். விசுவலிங்கம் பிள்ளை என்னைப் புலவருக்குக் காட்டி 'இந்தப் பையன் தான் இங்கே தமிழ் ஆத்தியார்' என்று சொன்னார். புலவர் என்னைக் கூப்பிட்டார். அவர் என்னைக் கூப்பிட்ட தோரணையே, எனக்குச் சுர்ரென்று கோபம் வரும்படி செய்தது. இருந்தாலும் அவருடைய முதுமைத் தோற்றத்துக்கு மதிப்புக் கொடுத்து அடக்கமாகக் குறட்டின் மேல் அமர்ந்தேன். புலவர்

இலைபடர்ந்த பொய்கை யிடத்தமுதல் கண்டு
மூலைசுரந்த அன்னையோ முன்னின்—நிலைவிளம்பக்
கொங்கை சுரந்தவருட் கோமகளோ சம்பந்தா
இங்குயர்ந்தாள் ஆர்சொல் எனக்கு?

என்ற நால்வர் நான்மணி மாலைப் பாடலைப் பாடிப் 'பொருள் தெரியுமா? என்று கேட்டார்.'

''பொருள் தெரியும்'' என்று நான் சொன்னேன்.

''ஞானசம்பந்தருக்கு அன்னையர்களாக இப்பாடலில் இருவர் குறிப்பிடப்படுகின்றனர். ஒருவர் உமாதேவியார்; மற்றொருவர் பாண்டிமாதேவியான மங்கையற்கரசியார்.

இந்த இருவருள் எவர் சிறந்த அன்னை?'' என்று என்னை அடுத்த கேள்வி கேட்டார் புலவர்.

''மங்கையர்க்கரசிதான்'' என்று நான் அழுத்தந் திருத்த மாக விடை கூறினேன்.

''எப்படி?'' என்றார் புலவர்.

''குழந்தை பசியால் அழுமுன்பே 'பால் நினைந்தூட்டும் தாய்' தலையன்புடையவள். குழந்தை அழுவதைக் காதால் கேட்டவுடன் முலைசுரந்து ஊட்டுபவள் இடையன்புடை யவள். குழந்தை பசியால் அழுவதைக் கண்ணால் கண்ட பிறகு பாலூட்டுபவள் கடையன்பினள்." சம்பந்தக் குழந்தை பொய்கைக் கரையிலே பாலுக்காக ஏங்கியழுத தைக் கண்ணால் கண்ட பிறகும் உமாதேவி பாலூட்ட வில்லை. இறைவன் உணர்த்திய பிறகே ஊட்டினாள். இவளை எவ்வாறு தாயென்று சொல்லமுடியும்?

ஆனால் மங்கையர்க்கரசியின் நிலைவேறு. 'சீகாழியில் சம்பந்தக் குழந்தை பாலுக்காக அழுதது' என்று இறந்த கால நிகழ்ச்சியை எதிரில் நின்றவர்கள் எடுத்துரைத்த கணமே பாண்டிமாதேவியின் மார்பகங்கள் விம்மிப் பரந்து பாலைப் பொழிந்தன.

இத்தாய்மைச் சிறப்பு உமாதேவியிடம் இல்லை. மேலும் உமாதேவி இப்பாடலில் 'முலைசுரந்த அன்னை' என்று சாதாரணமாகக் குறிப்பிடப்படுகிறாள். ஆனால் மங்கை யர்க்கரசியோ 'கொங்கை சுரந்த அருட்கோமகள்' என்று குறிப்பிடப் படுகிறாள். 'அருள்' என்னும் அடைமொழியே, அவள் சிறந்த அன்னை என்பதைக் காட்டும்'' என்று விளக்கமாக நான் விடையிறுத்தேன்.

என் விளக்கத்தை அவர் உள்ளம் ஏற்றுக்கொண்டது என் பதை அவர் முகம் காட்டியது. இருந்தாலும் மற்றவர் முன்னிலையில் என்னை மட்டந்தட்ட வேண்டும் என்ற ஒரே

நோக்கத்துக்காகப் பாதையில் சென்று கொண்டிருந்த என்னைக் கூப்பிட்டுக் கேள்வி கேட்டவரல்லரா அவர்? உடனே தமது முகத்தைச் சுருக்கிக் கொண்டு, ''நீ சொன்ன பொருள் தவறு. உனக்குப் பாடம் சொன்னவர் யார்?'' என்று கேட்டார்.

இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்த நான் என் ஆசிரியரின் புலமையைக் குறைத்துப் பேச அவர் தொடங்கியதும் அடிபட்ட புலிபோல் வெகுண்டெழுந்தேன். ''எனக்குப் பாடம் சொல்லிக் கொடுத்த இடம் ரொம்பப் பெரிய இடம். அதெல்லாம் உம்ம கிட்ட ஏன் சொல்லணும்? அவர் கால் தூசிக்குக்கூட நீர் காணமாட்டீர். நீர் இங்கே பாடம் சொல்லிக் கொடுக்கற அழகை நாள்தோறும் பார்த்துக் கிட்டுத்தானே போறேன். இலக்கணப் பிழையில்லாம என்னைக்குச் சொல்லிக் கொடுத்தீர்? உமக்குப் பத்திரிகையிலே பதில் சொல்ற'' என்று சுடச்சுடப் பேசிவிட்டு அங்கிருந்து வெருட்டென்று எழுந்தேன்.

என் சொல்லம்புகளைக் கேட்டு இராமசாமிப் புலவர் திணறிப் போனார். ''நேராக ஊர்த் தலைவர் பிரம்புசாமிப் பிள்ளையிடம் போய், உன்னைப்பற்றிச் சொல்லி ஊரை விட்டே கிளப்புகிறேன் பார்'' என்று சவால் விட்டார். ''முடிந்தால் செய்'' என்று கூறிவிட்டு நான் வீடு திரும்பினேன்.

இரவு எட்டு மணி இருக்கும். நான் சாப்பிட்டுவிட்டு உட்கார்ந்து ஏதோ நூலைப் புரட்டிக் கொண்டிருந்தேன். 'தம்பி!' என்று யாரோ மெதுவாக வாசலிலிருந்து குரல் கொடுப்பது கேட்டது; எட்டிப் பார்த்தேன். இராமசாமிப் புலவர் நின்றுகொண்டிருந்தார். என்னைக் கண்டதும் அவர் அவசர அவசரமாக உள்ளே வந்தார். ''தம்பி! அவர்கள் எல்லாம் என்னிடம் படித்தவர்கள். கிதாப்புக்காக நான் அப்படிப் பேசிட்ட. அந்தப் பாடலுக்கு நீ

சொன்ன பொருள்தான் சரி. நீ இதைப் போய்ப் பத்திரி கையிலெல்லாம் எழுதி என் பிழைப்பைக் கெடுத்திடாதே" என்று கூறி மன்னிப்புக் கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச் சிக்குப் பிறகு நிரவியில் 'பொடிப் பையன்' என்ற பெயர் மறைந்து எனக்கு மதிப்புயர்ந்தது. பின்னர் பிரெஞ்சுத் தமிழகத்தில் தமிழில் ஏதாவது ஐயமென்றால் என்னிடம் தான் வருவார்கள். என்னைக் கலக்காமல் எந்தத் தமிழ் சம் பந்தப்பட்ட நிகழ்ச்சியும் நடைபெறாது.''

கவிஞர் நிரவி வாழ்க்கையைப் பற்றிக் கூறி முடித்த போது இரவு ஒன்பது மணி. கவிஞர் திரைப்படம் பார்க் கப் போகலாமென்று கூப்பிட்டார். அருகிலிருந்த ராஜ குமாரியில் 'Scream of fear' என்ற ஆங்கிலப் படம் பார்த் துத் திரும்பினேம்.

□

7—2—62

புதன்

□

இன்று கல்லூரி விடுதியிலேயே இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு 9 மணியளவில் கவிஞருடைய இல்லம் வந்தேன். கவிஞரும் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கட்டிலில் சாய்ந்து கொண்டிருந்தார். நான் எதிரில் அமர்ந்து எழுதுவதற்காகப் பேனாவை எடுத்தேன். ''என்ன எழுதப் போறியா?'' என்று கேட்டார்.

''ஆமாங்க. உங்க திருமணத்தைப் பற்றிச் சொல்லுங்க'' என்றேன்.

''அப்படியா...சொல்ற'' என்று சொல்லி எழுந்து கால் மேல் கால்போட்டு உட்கார்ந்தார். பிறகு தம் ஆள்காட்டி விரலை மூக்கு நுனியில் சிறிது நேரம் வைத்திருந்தார். பிறகு கூறத் தொடங்கினர்:

''எனக்கு இளமையிலிருந்தே அரசியலிலே ஈடுபாடு அதிகம். காரணம் பாரதியார் தொடர்புதான். யாராயிருந்தாலும், அவனுக்கென்று ஓர் அரசியல் கொள்கை வேண்டும்; அதிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். நான் அப்படித்தான் இருந்து வருகிறேன். என்னால் அரசியல் இல்லாமல் இருக்க முடியாது. என்னுடைய அரசியல் ஈடுபாட்டினாலே எனக்கு இளமையிலிருந்தே அடிக்கடி தொல்லை வருவதுண்டு. ஓரிடத்திலே என்னை நிலையாக வைக்காமல் அடிக்கடி வேண்டுமென்றே மாற்றிக் கொண்டிருப்பார்கள்.

புதுவை அரசியலில் நான் எந்தக் கட்சியில் இருந்தாலும் அது வெற்றிபெறும். கெப்ளே என்பவன் ஆளுங் கட்சித் தலைவன். அவனோடு குட்டியா சபாபதிப் பிள்ளை என்ற பெரிய வழக்கறிஞர் ஒரு முறை தேர்தலிலே போட்டியிட்டார். இந்தப் போட்டியில் நான் பிள்ளை பக்கம் இருந்தேன். பிள்ளை வெற்றிபெற்றார். தேர்தல் முடிந்து ஒரு திங்கள் ஆனதும் என்மீது கெப்ளேயின் ஆட்கள் பொய் வழக்குப்† போட்டு ஒரு மாதம் மூன்று நாள் சிறையிலே தள்ளிவிட்டார்கள்.

திருபுவனை வட்டாரத்தில் எனக்குச் செல்வாக்கு அதிகம். அங்கு 'வாத்தியார்' சொன்னால் சொன்னதுதான். அந்த வட்டாரத்தில் மொத்த ஓட்டு 5015. நான்கு தேர்தல்

† இப்பொய் வழக்குச் செய்தியைப் பற்றிப் பாவேந்தர் தம்முடைய குடும்ப விளக்கு— இரண்டாம் பகுதியில் குறிப்பிடுகிறார்.

ஐயா யிரமக்கட்(கு) ஆம்உரிமை காக்கநான்
பொய்யர் தமையெதிர்த்த போதென்னைப்—பொய்வழக்கால்
சேர்த்த சிறையெனக்கோ தென்றல்வரும் சோலையன்றே?

களில் தொடர்ந்து 5015 ஓட்டுகளையும் சரமாக அடித்து விட்டேன். மேயர் தேர்தலானாலும் சரி, சட்டசபைத் தேர்தல் ஆனாலும் சரி, தெபிதே* தேர்தல் ஆனாலும் சரி, நான் யாரை ஆதரிக்கிறேனோ அவருக்குத்தான் வெற்றி.

அரசியற் காழ்ப்பின் காரணமாக என் மீது சாட்டப்பட்ட பொய் வழக்கு நடந்து கொண்டிருந்த சமயத்தில் எனக்குத் திருமணப் பேச்சு நடந்தது. வழக்கு முடிந்து தண்டனையை அனுபவித்துவிட்டு வந்த பிறகு திருமணம் செய்து கொள்வதாகச் சொன்னேன். அதன்படி சிறையிலிருந்து வெளிவந்து இரண்டு திங்கள்கள் கழித்த பிறகு எனக்குத் திருமணம் நடைபெற்றது. நான் 1891 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ஆம் நாள் பிறந்தேன்†. திருமணத்தின் போது எனக்கு வயது 28 முடிந்துவிட்டது. என் தாயார் பெயர் இலட்சுமியம்மாள்; மனைவியின் பெயர் பழனியம்மாள்.

தமது திருமண‡ வரலாற்றை மிகவும் சுருக்கமாக முடித்துக்கொண்டார் கவிஞர். இன்னும் கொஞ்சம் விரிவாகச்

---

*தெபிதே — இது Deputy என்ற ஆங்கிலச் சொல்லுக்கு நேரான பிரெஞ்சுச் சொல். புதுவையிலிருந்து பிரெஞ்சுப் பாராளுமன்றத்துக்கு அனுப்பப்படும் பிரதிநிதி தெபிதே எனப்படுவார்.

†பாவேந்தரின் பிறந்த நாள் இரண்டு விதமாக அவருடைய நூல்களில் குறிப்பிடப்பட்டுள்ளன. 'பாரதி தாசன் கவிதைகள்' முதற் பதிப்பிலும் (1938), இரண்டாம் பதிப்பிலும் (1940) கவிஞர் மலரிலும் (குயில் நிலையம் 1946) 17-4-1891 தான் பிறந்த நாளாகக் குறிக்கப்பட்டுள்ளது. இப்போது வெளியாகும் பாவேந்தர் நூல்களில் 29-4-1891 பிறந்த நாளாகக் குறிக்கப்படுகிறது. இந்த ஐயத்தைத் தெளிவுபடுத்திக் கொள்ளும் நோக்கத்துடன் நான் பாவேந்தரையே கேட்டேன், 'உங்கள் பிறந்த நாளைச் சரியாகச் சொல்லுங்கள்' என்று. 'என் பிறந்த நாள் 18-4-1891 தான்' என்று அவர் சொன்னார். பிறந்த நாள் ஒன்றும், பள்ளிப் பதிவேட்டில் குறிப்பிடப்படும் பிறந்த நாள் ஒன்றுமாகப் பெரும்பாலோர்க்கு ஆகிவிடுவதுண்டு. பாவேந்தர் பிறந்தநாளைக் குறிப்பிடுவதிலும் அத்தகைய பிழை நேர்ந்திருக்கலாம்; ஆராய்தற்குரியது.

‡திருமணத்தின் போது தமக்கு வயது 28 முடிந்துவிட்டதென்று பாவேந்தர் என்னிடம் குறிப்பிட்டார். அவர் கூறியபடி கணக்கிட்டால் பாவேந்தர் திருமணம் 18-4-1919 லிருந்து 18-4-1920க்குள் நடைபெற்றிருக்க வேண்டும். 1919இல் திருவாளர்கள் கெப்ளேயும் குட்டியா சபா

சொல்லுவார் என்று எதிர்பார்த்தேன். சட்டென்று முடித்துக்கொண்டது எனக்கு ஏமாற்றமாகப் போய்விட்டது. அவரது திருமணச் செய்திகளை மேலும் நுணுகிக் கேட்க எனக்குக் கூச்சமாகவும், ஓரளவு அச்சமாகவும் கூட இருந்தது. எனவே பேசாமல் விட்டுவிட்டேன்.

□

8—2—62

வியாழன்

□

"புதுச்சேரியில் பிரெஞ்சு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் தமிழ் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கும் எப்போதும் போட்டியாகத்தான் இருக்கும். பிரெஞ்சு சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்கு அதிகச் சம்பளமும் தமிழ் சொல்லிக் கொடுக்கும் ஆசிரியர்களுக்குக் குறைந்த சம்பளமும் புதுச்சேரி அரசாங்கம் கொடுத்து வந்தது. எனவே இரண்டு கூட்டத்திற்கும் இடையே காழ்ப்புணர்ச்சி எப்போதும் இருந்துகொண்டிருந்தது.

பதிப் பிள்ளையும் போட்டியிட்ட திருபுவனைத் தேர்தல் நடைபெற்றது. இத் தேர்தல் முடிந்தவுடன் கவிஞர் மீது பொய் வழக்குப் போடப்பட்டது. 1 திங்கள் 3 நாள் காவலில் வைக்கப்பட்டார். சிறையில் இருந்து வெளிவந்து இரண்டு திங்கள்கள் கழித்துத் திருமணம் நடைபெற்றது. சிறைக்குச் செல்வதற்கு முன்பே திருமணம் நிச்சயிக்கப்பட்டு விட்டது என்பது குறிப்பிடத் தக்கது.

பூம்புகார் பிரசுரம் வெளியிட்டுள்ள (குயில் பாடல்கள்—பாவேந்தர் வாழ்க்கைக் குறிப்புகள் பக்கம்—10) நூலில் பாவேந்தர் 1½ ஆண்டுகள் சிறையில் இருந்தார் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கணக்குப்படி பார்த்தால் பாவேந்தருக்குத் திருமணம் 30 ஆம் வயதில் தான் நடந்திருக்கும் என்று ஆகிறது. எனவே இச்செய்தி சரியானதாகப்படவில்லை. இச் செய்தியைப் பற்றிய உண்மையான விளக்கத்தை அறியப் புதுவை அரசாங்கக் குறிப்பேடுகளை ஆய்ந்து திருபுவனைத் தேர்தல் நாளையும், பாவேந்தருக்குச் சிறைத்தண்டனை வழங்கிய வழக்கு மன்ற ஆணையையும் கண்டறிய வேண்டும்.

பிரெஞ்சு ஆசிரியர்கள் கட்சிக்கு வெங்கடகிருஷ்ண நாயுடு என்பவர் தலைவர்; அவர் புதுச்சேரித் தலைமைப்பள்ளியின் முதல்வர் (Principal). தமிழாசிரியர்கள் கட்சிக்கு நான் தலைவன். சமயம் வரும்போது ஒருவரையொருவர் காலை வாரிவிடுவது எங்களுக்குள் வழக்கம்.

ழுய்ல் ஃபெரி (Jules Fery) என்பவர் 19 ஆம் நூற்றாண்டில் பிரெஞ்சு நாட்டில் வாழ்ந்த பெரிய சமுதாய சீர் திருத்தவாதி. கல்வித்துறை சமய வாதிகளின் கையில் இருந்ததை அவர் கண்டித்தார். ''பாதிரிமார் கையில் கல்விக் கூடங்கள் இருப்பதால் ஏழை எளியவருக்குக் கல்வி எட்டவில்லை. கல்வியை எல்லாரும் பெறுவிட்டால் ஏழை ஏழையாகவும், பணக்காரன் பணக்காரனாகவுமே இருக்க நேரிடும். கல்விக் கூடங்களைப் பாதிரிமாரிடமிருந்து பிடுங்கி அரசாங்கமே ஏற்று நடத்தினால் குடியரசின் முழுப் பயனை நாட்டு மக்கள் எல்லாரும் நுகர முடியும்'' என்று அவர் பிரசாரம் செய்தார். பாதிரிமார்கள் அரசாங்கத்திடம் கோள் சொல்லியும், தம் செல்வாக்கைப் பயன்படுத்தியும் ழுய்ல் ஃபெரியை நாடுகடத்தி விட்டனர். ழுய்ல் ஃபெரி வெளிநாட்டில் இருந்து கொண்டே தம் பிரசாரத்தை ஓய்வின்றிச் செய்து வந்தார். பின் நாட்டுத் தலைவராகிக் கல்வியைச் சமய ஆதிக்கத்திலிருந்து மீட்டு அரசாங்கத்தின் பொறுப்பில் கொண்டுவந்தார். அதிலிருந்து பிரெஞ்சு நாடு ழுய்ல் ஃபெரியைக் கல்விச் சீர்திருத்தத் தந்தை என்று போற்றுவது வழக்கம். ழுய்ல் ஃபெரியின் நூற்றாண்டு விழா வந்தது. அவ்விழா பிரெஞ்சு நாடு மட்டுமின்றி, பிரெஞ்சுக் குடியேற்ற நாடுகளிலும் கொண்டாடப்பட்டது. புதுச்சேரியிலும் அவ்விழா எல்லாப் பள்ளிகளின் சார்பிலும் விமரிசையாகக் கல்வித் துறைத் தலைவர் (சீஃப்) முன்னிலையில் கொண்டாடப்பட்டது. அவ்விழாவின்போது ஆடல், பாடல், நாடகம் முதலிய கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நாடகத்திற்காக ழுய்ல் ஃபெரியைப்பற்றி நான் பாடிய பாடல் ஒன்றும் மாணவர்களால் பாடப்பட்டது.

அப்பாடலைப் பாட மாணவர்கள் தொடங்குவதற்கு முன்பே 'இது மதத் துரோகமான பாட்டு. இதைப் பாடினால் கூடியிருப்போர் உள்ளம் புண்படும்' என்று கல்வித் துறைத் தலைவரிடம் கிருஷ்ணசாமி நாயுடுவின் ஆட்கள் கோள் மூட்டினர். ஆனால் தலைவர் அவர்களுடைய பேச்சுக்குச் செவிசாய்க்காமல் நிகழ்ச்சியைத் தொடர்ந்து நடத்துமாறு கட்டளையிட்டார். மாணவர்கள் கீழ்க்கண்ட வரிகளைப் பாடினர்.

வறியோர்க் கெல்லாம் கல்வியின் வாடை
வரவிட வில்லைமத குருக்களின் மேடை
நலுக்கத் தொலைந்ததந்தப் பீடை
நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை

இதைப் பாடியதும் நாயுடுவின் ஆட்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். உடனே இவ்வரிகளை அப்படியே பிரெஞ்சில் மொழிபெயர்த்துத் தரும்படி கல்வியிலாகாத் தலைவர் கேட்டார். அப்படியே மொழிபெயர்த்தும் கொடுத்தனர். அதைப் படித்த தலைவரின் முகம் மகிழ்ச்சியால் மலர்ந்தது. ''இதுதானய்யா நாம் இன்று எல்லாருக்கும் எடுத்துச் சொல்ல வேண்டிய செய்தி. சுப்புரத்தனம் பாடியது சரி'' என்று சொன்னார்.

பிறகு என்னைக் கூப்பிட்டுத் தலைவர் பெரிதும் பாராட்டிய தோடு ''உன்பேரில் பொருமைக்காரர்கள் வேண்டுமென்றே கோள் சொன்னார்கள். நீ மீண்டும் என்னை வந்து பார், அவர்களையெல்லாம் கவனித்துக் கொள்கிறேன்" என்று கூறிச் சென்றார். பிறகு நான் அவரைச் சந்தித்து எனக்குத்தொல்லை கொடுத்தவர்களை யெல்லாம் வேறு இடங்களுக்கு மாற்றும்படி சொன்னேன். அவ்வாறே மாற்றி அவர்கள் கொட்டத்தை அடக்கினார். அத்தலைவர் இருக்கும் வரையில் என் செல்வாக்குக் கொடிகட்டிப் பறந்தது. இந்த நிகழ்ச்சி நடந்தபோது எனக்கு வயது நாற்பது.''

இந்த நிகழ்ச்சியை அவர் கூறிமுடித்த போது இரவு மணி பன்னிரண்டிருக்கும். பாவேந்தர் 'பொன்னடி' என்று குரல் கொடுத்தார். முன்கூடத்தில் இருந்த பொன்னடி எழுந்து ஓடி வந்தார். "இன்று வல்லுணவு எதுவு மில்லை. அதனலே பசியெடுத்துடுச்சு. ஏதாவது சாப்பிடணுமே" என்ருர். உடனே நானும் பொன்னடியும் ராஜகுமாரி திரைப்படக்கொட்டகை அருகில் இருந்த ஒரு விடுதியில் சென்று 'முட்டை ஆம்லெட்' வாங்கி வந்து கொடுத் தோம்; சாப்பிட்டபின் உறங்கினர்.

□

9—2—62

வெள்ளி

□

இன்று மாலை 5 மணியளவில் கவிஞர் இல்லம் சென்றேன். கவிஞர் வெளியிலே புறப்படத் தயாராக இருந்தார். என் னையும் புறப்படும்படி சொன்னர். கவிஞரும், நானும், பொன்னடியும் தேனும்பேட்டை சென்று தமிழ்க்கவிஞர் பெருமன்றத்துக்கு பீரோ செய்வதற்குப் பலகை எடுத் தோம். பலகைக்கு ரூ. 74/-ம் அதை பீரோவாகச் செய் யக்கூலி ரூ. 30/ம் செலவாயிற்று. "இது எதற்கு இப் போது வீண்செலவு?" என்று நான் கேட்டதற்கு, "கவிஞர் பெருமன்றம் சம்பந்தப்பட்ட எல்லா ரெகார்டுகளும் தனி யாக ஓர் பீரோவில் இருக்க வேண்டும்" என்று கூறினர். ஆனல் இத்தத் தமிழ்க்கவிஞர் பெருமன்றம் ஆறு திங்கள் கள் கூட உயிர் வாழவில்லை. இம்மன்றத்தைத் துவக்கிய போது கவிஞர் காட்டிய ஆர்வம் அளவிட முடியாதது. இரண்டு முறை சென்னைக் கவிஞர்கள் இராமன் தெரு இல்லத்தில் கூடிய பொழுது தம் கைச்செலவில் சிற்றுண்டி

வழங்கினர். இம்மன்றத்துக்கு வசூலான மொத்த நன் கொடை ரூ. 425. இதில் பெரிய தொகையாக நன் கொடை போட்ட பிரமுகர் பணம் கொடாமல் சில மாதங் கள் இழுக்கடித்தார். கவிஞர் பொறுமையிழந்தார். நேராக அப்பிரமுகர் இல்லத்துக்கு ஒரு தண்பரோடு சென் ருர். வரவேற்பு அறையில் போய் அமர்ந்து கொண்டு 'அவ என்ன நன்கொடைப் பணம் கொடுக்கருனு இல்லே யான்னு கேளு' என்று ஒரு சத்தம் போட்டார். பிரமுகர் பணத்தைக் கொண்டு வந்து கொடுத்ததோடு மன்னிப்பும் கேட்டுக் கொண்டார்.

பீரோ செய்யப் பலகை எடுத்துக் கொண்டு வீடு திரும்பி யதும் கவிஞரும் நானும் சாப்பிட்டோம்; பிறகு ஓய்வாக வெளியில் வந்து உட்கார்ந்தோம். எங்கள் பேச்சு தமி ழைப் பற்றியும் தமிழ் அறிஞர்களைப் பற்றியும் திரும்பி யது. பாவாணர் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் திரா விட மொழியாராய்ச்சித் துறையில் பணியாற்றியபோது அவருக்குப் பெரிதும் தொல்லை கொடுத்துவந்த ஒரு தமிழ்ப் பேராசிரியரைப் பற்றிப் பேச்சு வந்தது. உடனே அவரைப் பற்றி மிகவும் கடுமையான சொற்களால் பேசத் தொடங்கி விட்டார்.

''இவர் ஒரு தமிழ்த் துரோகி. ஒரு பெரிய இடத்துத் திரு மணத்துக்குப் போயிருந்தபோது இவரும் வந்திருந்தார். விருந்தின்போது என்னையும் சாப்பிடும்படி திருமண வீட் டார் வற்புறுத்தினர். என் உடம்பில் தித்திப்பு நீர் (Sugar) இருப்பதால் நான் விருந்துண்ண மறுத்தேன். பேருக்காவது விருந்தில் உட்கார்ந்து ஒருவாய் சாப்பிட்டு விட்டு எழச் சொன்னர்கள். நானும் கொஞ்சம் சாப் பிட்டுவிட்டு நடுவில் எழுந்தேன். உடனே இவர் என்ன செய்தார் தெரியுமா? எனக்கு முன் எழுந்து ஓடிச்சென்று கையலம்பிக் கொண்டு, எனக்குச் செம்பில் தண்ணீர் மொண்டு கொடுத்தார்; ஒரு செம்பு தண்ணீரை என்

காலில் எடுத்து ஊற்றினர். குயிலில் இவரைப் பற்றிச் சரமாரியாக எழுதி இந்த அளவு அச்சுறுத்தி வைத்திருந்தேன்.

தமிழகப் புலவர் குழு பாவாணருடைய 50 சொற்கள் பற்றிய ஆராய்ச்சி சரியானதென்று முடிவுசெய்து முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதத்தின் மூலம் இராஜா சர். முத்தைய செட்டியாருக்குச் சிபாரிசு செய்ய முயற்சி எடுத்துக் கொண்டது. முத்தைய செட்டியாரைச் சந்திக்கப் புலவர் குழு திருச்சியில் கி.ஆ.பெ. வீட்டில் தங்கியிருந்தது. நான் ஒரு பக்கமாக நாற்காலியில் அமர்ந்திருந்தேன். எனக்கு எதிரில் புலவர் கூட்டம் அமர்ந்திருந்தது. முத்தைய செட்டியார் வந்தார். புலவர்கள் பக்கம் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை. எனக்கு மட்டும் வணக்கம் செலுத்திவிட்டு நேராக உள்ளே சென்றார்.

சிறிதுநேரம் உள்ளே ஏதோ பேச்சு நடந்தது. "கொஞ்சம் பொறுத்துக் கொள்ளுங்கள்; அவசரம் வேண்டாம்'' என்று எனக்குப் பதில் கூறுவதுபோல் உள்ளே இருந்து பேசினார் முத்தையசெட்டியார். பின் புறப்பட ஆயத்தமானார். பாவாணருக்குப் பரிந்துரை செய்ய வந்திருந்த புலவர்கள் யாரும் வாயே திறக்கவில்லை. செட்டியார் வெளியில் வந்து என்னை வணங்கிவிட்டு 'நான் போய் வருகிறேன்' என்று கூறி விடைபெற்றுச் சென்றார். பாவாணருக்குப் பரிந்து குயிலில் நான் எழுதியும், அவர் என்னை வந்து பார்க்கவில்லை. ஒருகால் என் தலையீட்டால் அவருடைய பதவிக்குத் தொல்லை நேரலாம் என்று அவர் நினைத்திருக்கக் கூடும்.''

□

அதன் பிறகு மறைமலையடிகளைப் பற்றி எங்கள் பேச்சுத் திரும்பியது. இக்கட்டுரையின் துவக்கத்தில் குறிப்பிடப் பட்டுள்ள தமிழறிஞரையும் மறைமலையாரையும் தொடர்பு படுத்திப் பாவேந்தர் ஒரு செய்தி குறிப்பிட்டார்.

''காந்தியடிகள் 'விதேசித் துணியெரிப்புப் போராட்டம் நடத்திக் கொண்டிருந்த நேரம். இப்போராட்டம் மறை மலையாருக்குச் சிறுபிள்ளைத் தனமாகப்பட்டது. வெளி நாட்டுத் துணிகளைக் கடற்கரையில் போட்டுக் கொளுத்து வதைக் கண்டஞ்சி ஆங்கிலப் பேரரசு இந்தியாவை விட்டு ஓடிவிடும் என்று நினைப்பது முட்டாள்தனம் என்று பத்திரி கையில் எழுதினார். அப்போது சென்னை மாநில முதல மைச்சராக இராஜகோபாலாச்சாரியார் இருந்தார். அவர் இவரை மறைமலையாரிடம் அனுப்பி மாதம் ரூ. 500/– சம் பளத்தில் நல்ல வேலை கொடுப்பதாகவும், காங்கிரசைத் தாக்கி எதுவும் எழுதவேண்டாமென்றும் கேட்டுக் கொண் டார். மறைமலையார் இவரை நோக்கி, "போ!போ! இது மாதிரி வேலைக்கு இனிமே வராதே" என்று கூறி அனுப்பி விட்டார்.

மறைமலையாருக்கு வடமொழியும். தமிழும், ஆங்கிலமும் கூடிய செறிந்த புலமை வாய்த்திருந்தது. அத்தகைய புலமை பெற்றோர் அவருக்குப் பிறகு யாரும் தோன்ற வில்லை. அவரிடமிருந்த குறை, சைவத்தை நிலைநாட் டவே தம் வாழ்வைச் செலவிட்டதுதான்."

□

அதன்பிறகு இலக்கியப் பரிசுகளைப் பற்றி எங்கள் பேச்சுத் திரும்பியது. ''ஆண்டுதோறும் ரூ. 5000/-வட்டி வரும் படி நிலையான ஒரு தொகையைச் சேர்த்து, ஒரு பரிசுத் திட்டத்தை நிறுவ வேண்டும். அதற்குப் 'பாரதிதாசன் பரிசு' என்று பெயர் வைக்கவேண்டும். அந்த ஐயாயிரம் ரூபாயையும் ஆண்டுதோறும் வெளியாகும் நல்ல ஒரு தமிழ்க் கவிதை நூலுக்குப் பரிசாக வழங்க வேண்டும்'' என்று நான் சொன்னேன்.

''ஆமாம்! ஆனால் இதை இந்த நாட்டு மக்கள் அல்லவா செய்யவேண்டும்?'' என்று கூறினார் பாவேந்தர்.

அதன் பிறகு இருவரும் இரண்டாவதாட்டம் திரைப்படம் பார்ப்பதற்காகச் சென்றோம். வழக்கமாக நாங்கள் ஆங்கிலப் படம் பார்க்கத்தான் செல்வது வழக்கம். ஆனால் இன்று 'நெஞ்சில் ஓர் ஆலயம்' என்ற தமிழ்ப் படம் பார்க்கச் சென்றோம். சென்னையில் பாவேந்தரோடு வெளியில் செல்லும் நேரங்களில், அவரைச் செலவு செய்யும்படி நான் அனுமதிப்பதில்லை. போதிய அளவு என் சட்டைப் பையில் பணமிருந்தால்தான் அவரோடு வெளியில் செல்வேன். இல்லாவிட்டால் செல்லமாட்டேன். இது அப்போது நான் கண்டிப்பாகக் கடைப்பிடித்த கொள்கை.

படம் புதுமையாக இருப்பதாகச் சொல்லி நான் தான் அவரை அழைத்துச் சென்றேன். பையில் ஏழெட்டு ரூபாய் பணம் இருந்தது. டிக்கெட்டுக்கும் டாக்சிக்கும் போதும் என்று நினைத்தேன். கொஞ்சம் காலம் தாழ்த்திச் சென்றதால் டிக்கெட் கிடைக்கவில்லை. வெளியிலே 'பிளேக்'கில் வாங்கிக் கொண்டு கொட்டகைக்குள் நுழைந்தோம். கையில் நான் கொண்டு வந்திருந்த பணம் கிட்டத்தட்டச் செலவாகிவிட்டது. இடைவேளையில் வெளியில் எழுந்து வந்தோம். கவிஞர் தாகமாக இருக்கிறது என்று சொல்லி உள்ளே இருந்த கடைக்குச் சென்று 'கோகோ கோலா' கேட்டார். அவனும் சட்டென்று உடைத்துக் கையில் கொடுத்து விட்டான். 'என்னவிலை?' என்று கடைக்காரனைக் கேட்டேன். அவன் 'அறுபது காசு' என்று சொன்னான். என் சட்டைப் பையில் இருந்த சில்லரைகளைப் பொறுக்கி எண்ணிப் பார்த்தேன். ஐம்பது காசு தான் இருந்தது. எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. 'உங்களிடத்தில் காசு இருக்கிறதா?' என்று கவிஞரைக் கேட்டேன். அவரும் 'நான் பணம் எதுவும் எடுத்து வரவில்லையே! இப்போது என்ன செய்வது?' என்று கலவரத்தோடு கேட்டார்.

காசைப் பற்றி நான் கவலைப் படவில்லை. அருகில் உள்ள யாரிடமாவது வாங்கிக் கொடுத்துவிடலாம். ஆனால்

அந்த இடத்தில் பாவேந்தருக்காக மற்றவரிடத்தில் கை நீட்டிக் காசு வாங்க நேரிட்டு விட்டதே என்று திகைத் தேன்.

'எதற்கும் உங்கள் சட்டைப் பையைத் தேடிப் பாருங்கள்' என்று அவரிடம் சொன்னேன். தேடிப் பார்த் தார். என்ன வியப்பு! சரியாகப் பத்துக்காசு அவர் சட்டைப் பையில் இருந்தது. அப்பாடா! அந்தக் காசை வாங்கிக் கடைக்காரன் கையில் அறுபது காசையும் கொடுத்துவிட்டேன்.

உள்ளே படம் ஓடிக் கொண்டிருந்தது. நடுநடுவே கதை யின் நிகழ்ச்சிகளை விமர்சனம் செய்தார். ''கதாநாயகன் காதலியிடம் புகைப்படத்தைக் கொடுக்க மறுக்கிறான். இது Immoral'' என்றார்.

'முத்தான முத்தல்லவோ' என்ற பாட்டு திரையில் பாடப் பட்டபோது 'இது பாட்டாம்!' என்று கூறிவிட்டுச் சிரித் தார். படம் முடிந்து வெளியில் வந்தோம். வெளியில் நின்று கொண்டிருந்த ஒரு டாக்சி டிரைவரைப் பார்த்து, ''ஏப்பா! தி.நகர் வர்ரியா?'' என்று கேட்டார்.

"இல்லீயுங்க. டவுனுக்குப் போற'' என்று அவன் சொன்னான்.

''டவுனுக்குப் போறவ இங்க ஏ நிறுத்திக்கிட்ட. போற தானே?... முருகு... இவ டாக்சி நம்பரைக் குறிச்சுக்க'' என்று சொல்லி அவனிடம் சண்டைக்குப் போய்விட்டார். கவிஞரைச் சமாதானப் படுத்தி வேறு ஒரு டாக்சியில் ஏறி இருவரும் வீடுவந்து சேர்ந்தோம்.

□

14—2—62

புதன்

□

இன்று கவிஞர் தமிழழகனும், காலஞ்சென்ற குழந்தைக் கவிஞர் நாக. முத்தையா அவர்களும் பாவேந்தர் இல்லத்துக்கு வந்திருந்தனர். தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தை எவ்வாறு வளர்ப்பது? எவ்வாறு செயற்படுத்துவது? என்பதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தோம். தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தில் உலகின் பலநாடுகளில் இருக்கும் தமிழ்க் கவிஞர்களையும் திரட்டிப் பங்குபெறச் செய்யவேண்டும் என்று முடிவுசெய்தோம். அன்றே மலேநாட்டு (மலேசியா சிங்கப்பூர்)க் கவிஞர்களுக்கு அறிக்கை ஒன்றும் எழுதப் பட்டது.

அன்று எண்சீர் விருத்தம்பற்றி எங்களுக்கு நல்ல விளக்கம் கொடுத்தார். "இந்த நூற்றாண்டில் எண்சீர் விருத்தத்தில் பல உத்திகளையும், கையாண்டு அதை நன்கு விளம்பரப் படுத்தியிருக்கிறேன். இன்று கவிதை எழுத வேண்டும் என்று நினைப்பவர்கள், எண்சீர் விருத்தத்தைத் தான் எழுதிப் பழகுகிறார்கள். அந்த அளவு அதை நான் கவிஞர்களுக்கு எளிமைப்படுத்திக் கொடுத்திருக்கிறேன். இதைப் போலவே சிறு சிறு கருத்துக்களைக் கருவாகக் கொண்ட கட்டளைக் கலித்துறைகள் எழுதி அதையும் நன்கு விளம்பரப்படுத்த வேண்டும் என்பது என் விருப்பம்" என்று கூறினார். கூறியபடியே இரண்டு நாட்களில் அழகிய கட்டளைக் கலித்துறை ஒன்று அவர் கற்பனையில் வெளிப்பட்டது.

□

4—3—62

ஞாயிறு

□

இன்று விடுமுறையாகையால் காலைச் சிற்றுண்டியை முடித்துக்கொண்டு நேராகப் பாவேந்தர் இல்லம் வந்தேன். என்னைக் கண்டதும் ''என்ன வெளியில் போகலாமா? கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்று சொன்னார். பொன்னடி சகானீஸ் அருகில் சென்று டாக்சி கூட்டி வந்தார். குயில் பத்திரிகைக் காகிதக் கோட்டா அப்போதுவந்திருந்தது. அது மூன்று திங்களுக்கு ஒரு முறை வந்து கொண்டிருந்தது, என்று எண்ணுகிறேன். அதை எடுக்க ரூ 5000 வேண்டும். பாவேந்தர் கையில் பணமில்லை. அது சம்பந்தமாக இரண்டு மூன்று பேரைப் பார்த்தோம். ஒவ்வொருவரும் பாவேந்தரைப் பார்த்தவுடன் எழுந்து நின்று கைகூப்பிவணங்குவர்; அடக்கமாக எதிரில் நின்று சிற்றுண்டியும் சுவைநீரும் வழங்குவர்; பணப்பேச்சை எடுத்தால் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி மெதுவாகக் கழன்று கொள்ளுவர். பணத்துக்காக ஒரு பெருங் கவிஞன் இவ்வாறு அவமானப் பட்டதை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை; மிகவும் வேதனையாக இருந்தது.

இந்தச் சமயத்தில் செக்நாட்டுத் தமிழ் அறிஞரான பண்டாரகர் காமில் ஸ்வலபில் அவர்கள் தம் நாட்டுப் பிரபலப் பத்திரிகையான 'நோவி ஓரியண்டில்' பாவேந்தர் பாடல்கள் சிலவற்றை மொழி பெயர்த்து வெளியிட்டிருந்தார். அதில் பாவேந்தர் படமும், வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளும் கூட வெளியிடப்பட்டிருந்தன. அந்த இதழின் படி ஒன்றைப் பாவேந்தருக்கு அவர் அனுப்பிவைத்ததோடு, ஒரு கடிதமும் எழுதியிருந்தார்*. அதில் பாவேந்தர்

*காண்க: பிற்சேர்க்கை.

எழுதிய நூல்கள் அனைத்திலும் ஒவ்வொரு படி திரட்டி அனுப்பும்படி கேட்டிருந்தார். அவருக்கு அனுப்புவதற்குச் சில நூல்களின் படிகள் கிடைக்காமல் இருந்த காரணத்தால் நானும் பாவேந்தரும் பாரிநிலையம் சென்றோம். அன்று ஞாயிற்றுக்கிழமையாக இருந்தாலும் கணக்கெடுப்புக்காகப் பாரி நிலையம் உள்ளே திறந்து வைக்கப்பட்டிருந்தது. பாரிநிலையம் மாடியின் மேல் உள்ளது. அதன்மாடிப் படி செங்குத்தானது. அதன்மேல் பாவேந்தரால் ஏற முடியவில்லை; மூச்சு வாங்கியது. எனவே நான் மட்டும் மேலே சென்று அதன் உரிமையாளரான திரு செல்லப்பன் அவர்களிடம் பாவேந்தர் வந்திருப்பதாகச் சொன்னேன். அவர் கீழே இறங்கி வந்தார்; தேவையான நூல்களைக் கட்டாகக் கட்டிக் கொடுத்தார். அதைப் பெற்றுக் கொண்டு பாவேந்தரும் நானும் இல்லம் திரும்பினோம்.

பாவேந்தர் இல்லத்தில் இடைவேளை உணவு சாப்பிட்டு விட்டு ஓய்வெடுத்துக் கொண்டேன். மாலையில் அவர் அறைக்குள் நுழைந்தபோது, அவருடைய மீசையைப் பற்றி முதலில் நான் எழுதிக்கொடுத்திருந்த பாடலைத் திருத்திக் கொண்டிருந்தார்.

நான் அப்போது கவிதைத் துறையில் கற்றுக் குட்டி. என் பாட்டில் பல பிழைகள் இருந்தன. அப்பிழைகளையெல்லாம் திருத்தி முடித்தபின், தாம் திருத்தியதற்குச் சான்றாக மூன்று இடத்தில் கையெழுத்திட்டுத் தேதியும் குறிப்பிட்டார். அச்சுவடியை இன்றும் பொன்னே போல்போற்றிப் பாதுகாத்து வருகிறேன்.

பொதுவாக மரபுக் கவிதை எழுதுபவர்களிடம் காணப்படும் பிழைகள் இரண்டு. ஒன்று குற்றியலுகரப் பிழை; மற்றொன்று 'எந்தன் உந்தன்' பிழை. இன்று மிக்க விளம்பரம் பெற்றிருக்கும் பெருங்கவிஞர்களின் நூல்களைப் புரட்டினாலும் இப்பிழைகள் மலிந்திருக்கக் காணலாம். ஒரு பெருங்கவிஞரிடம் இதைப்பற்றிக் குறிப்பிட்டுக் கேட்ட

போது ''இருத்தால் என்ன? குற்றியலுகரம் புணர்ந்தால் தானே கெடும்? நான் பிரித்துத்தானே எழுதியிருக்கிறேன்" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

என்னுடைய பாடல்களில் இருந்த இவ்விரு பிழைகளையும் கோடிட்டுக் காண்பித்துப் பள்ளி மாணவனுக்குப் பாடம் நடத்துவதுபோல் அவ்வளவு எளிமையாக இலக்கணப் பாடம் நடத்தினார். குற்றியலுகரத்தின் வகைகளையும், புணர்ச்சி விதியையும் எழுதிக்காட்டிப் பொறுமையோடு விளக்கினார்.

என் + தன் — என்றன்
உன் + தன் — உன்றன்
எம் + தம் — எந்தம்
உம் + தம் — உந்தம்

'எந்தன் உந்தன்' என்ற சொற்களே தமிழில் இல்லை. இவையெல்லாம் தெரியாமல் கவிதை எழுத வரக்கூடாது என்று கடுமையாகவே சொன்னார். இவ்விலக்கணப் பாடம்* அவர் நடத்தியபோது கவிஞர் பொன்னடியும் என் அருகிலிருந்தார்.

'எந்தன் உந்தன்' இலக்கண விவகாரத்தில் பாவேந்தர் எப்போதுமே கடுமையாக இருந்திருக்கிறார் என்ற செய்தி அவர் நடத்திய 31-3-59 குயில் ஏட்டில் தலையங்கமாகவே வெளியாகியுள்ளது. அது வருமாறு:

குயில்
புதுச்சேரி, தி. வ. ஆண்டு க கூ கூ 0 பங்குனி கஅ

கவிஞர் நினைவிற்கு!

'எந்தன்' 'உந்தன்' எனத் தமிழில் சொற்களேயில்லை இதை முன் ஒருமுறை விளக்கியுள்ளோம். இவ்வா.

* பாவேந்தர் நடத்திய இலக்கணப்பாடம்— அவர் கையெழுத்துப்படி— பிற்சேர்க்கையில் உள்ளது. காண்க.

றுள்ள பிழைச் சொற்களைப் படித்தவர்களே எழுதுவ தென்றால், இராசகோபாலாச்சாரிக்கும் இவர்கட்கும் என்ன வேறுபாடு?

'எம்' என்பது பன்மைச் சொல். அதனோடு பன்மைக் குறிய 'தம்' என்பதுதான்சேரும்.எனவே எந்தம் என்று எழுத வேண்டும். உந்தம் என்பதும் அப்படியே.

'என்' என்பதும் 'உன்' என்பதும் ஒருமைக்குறியவை. இவற்றோடு ஒருமைக்குறிய 'தன்' சேரவேண்டும். எனவே 'என்றன்' 'உன்றன்' என எழுதவேண்டும்.

□

11—3—62

ஞாயிறு

□

புலியும் மானும் ஒரே நீர்த்துறையில் தண்ணீர் குடித்த தாகச் சில புராண வரலாறுகள் கூறுவதுண்டு. அத் தகைய ஒரு நிகழ்ச்சி இலக்கிய மேடையில் ஒரு முறை நடைபெற்றது; வடஆர்க்காடு மாவட்டத் தலைநகரான வேலூரில் நடைபெற்றது. பரம நாத்திகரான பாவேந் தர் தலைமையில் பழுத்த ஆத்திகரான கிருபானந்தவாரி யார் பேசினர். இந்நிகழ்ச்சி பற்றி இன்று பாவேந்தரிடம் கேட்டேன். ''கொள்கையில் இருதுருவங்களாக விளங் கிய நீங்கள் ஒரே மேடையில் பேச எவ்வாறு ஒப்புக் கொண்டீர்கள். கருத்து மோதல் ஏற்படவில்லையா?'' என்று கேட்டேன்.

''இல்லை. இரண்டு துருவங்களையும் தமிழ் என்னும் பொதுக் கொள்கை ஒன்று படுத்திவிட்டது. அவர் தமிழைப் பற்றி எவ்வளவு சிறப்பாகப் பேச வேண்டுமோ அவ்வளவு

சிறப்பாகப் பேசினர். 'உங்களுக்கெல்லாம் தமிழை நான் வாரிக் கொடுக்கிறேன்; எனக்கெல்லாம் தமிழை வாரிக் கொடுப்பவர் பாரதிதாசனர்'. என்று என்னைப் பாராட்டிப் பேசினர். பின்னர் 'கனியிடை ஏறிய சுளையும்' என்ற பாடலை இசையோடு பாடி அதிலுள்ள பல நயங்களைச் சுவைக்கச் சுவைக்க எடுத்துரைத்தார். இதில் ஒரு சிறப்பு என்னவென்றால் கிருபானந்தவாரியாரே விரும்பிக் கேட்டு என் தலைமையில் வந்து பேசினர். தமிழ் அவருடைய வாயில் கொஞ்சி விளையாடியது. முடிவுரையில் அவருடைய தமிழ்ப் புலமையையும், பேச்சாற்றலையும் நன்கு பாராட்டிப் பேசினேன்'' என்று பாவேந்தர் கூறினர்.

இந்த வேலூர் கூட்ட நிகழ்ச்சியைப் பற்றி வேறொரு கூட்டத்தில் கவிஞரிடம், "என்ன வாரியார் எப்போதும் முருகனைப் பற்றியே பேசி ஆத்திகப் பிரசாரம் செய்கிறார். நம்மையெல்லாம் (சுயமரியாதைக்காரரை) மடை தோறும் திட்டுகிறார். நீங்கள் எப்படி அவரைப் பாராட்டிப் பேசலாம்?'' என்று யாரோ எழுத்து கேள்விகேட்டார்கள். இதைப்பற்றியும் பாவேந்தரிடம் கேட்டேன்.

"ஆமாம் கேட்டார்கள், நம்ம கட்சியிலே பேசினா நீங்க பணமா கொடுக்கறீங்க? அதனால பணம் கொடுக்கிறவர்கள் கூட்டத்திலே ஆதரிச்சுப் பேசுகிறார். அது அவர் பிழைப்பு என்று பதில் சொன்னேன்'' என்று குறிப்பிட்டார்.

□

20—3—62

செவ்வாய்

□

இன்று மாலை பாவேந்தர் கலகலப்பாக இல்லை. தாம் எழுதிய ஓர் வண்ணப்பாடலைப் பார்த்துத் திருத்திக்

கொண்டிருந்தார். இன்று எங்கள் பேச்சும் சுறுசுறுப்பாக இல்லை. பாவேந்தர் மகிழ்ச்சியாக இருக்கும்போது அவரே ஆர்வத்துடன் பல செய்திகளைச் சொல்வார். மற்ற நேரங்களில் நாம் கேட்டாலும் ஏதோ பதிலுக்குச் சில சொற்கள் சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்து விடுவார். அப்போது அவர் மனநிலை சரியில்லை என்பதைப் புரிந்து கொண்டு நான் எழுந்து வந்து விடுவேன். இன்று அவருடைய உள்ளநிலை மூட்டம் போட்டதுபோல் தெளிவில்லாமல் இருந்தது. எனவே, அவர் இன்று கூறிய கருத்துக்களும் ஒன்றுக்கொன்று தொடர்பின்றி இருந்தன. இன்று அவர் கூறியவற்றுள் இரண்டு செய்திகள் குறிப்பிடத்தக்கன. ஒன்று வண்ணப்பாவைப் பற்றியது.

பாவேந்தர் கி.பி.1919 இல் திரிபுவனையில் ஆசிரியர் பணி செய்து கொண்டிருந்தார். மாணிக்க வாத்தியார் என்பவர் இவருக்கு மிகவும் வேண்டிய நண்பர். மாணிக்க வாத்தியாரின் உறவினர் ஒருவர் பத்து வண்ணங்கள் எழுதிப் பாவேந்தர் பார்வைக்கு அனுப்பி வைத்திருந்தார். நிறையப் பிழைகள். வண்ணப்பா அசை எண்ணி எழுதவேண்டும். ஓரிடத்தில் பிழையென்றால் எல்லாவிடத்தும் உதைக்கும். எனவே அப்பாடல்களைப் பல நாள் வைத்திருந்து, பல முறை படித்துப் பொறுமையோடு திருத்தி அனுப்பினாராம். அப்போதிருந்து வண்ணப் பாவைப் பற்றி நன்கு ஆய்ந்து அதில் தாம் பயிற்சியும், புலமையும் பெற்றதாகப் பாவேந்தர் குறிப்பிட்டார்.

மற்றொரு செய்தி பாவேந்தரின் உடல்நலக் குறைவு பற்றியது. *கி. பி. 1958-59 ஆம் ஆண்டுகளில் பாவேந்தர் என்புருக்கி நோயினால் தாக்கப்பட்டார். சில நோய்கள் சில வயதில் வரும்போது தொல்லை கொடுப்பதில்லை. என்

*பாவேந்தர் என்னிடம் கூறும்போது தாம் என்புருக்கி நோயில் தாக்கப் பட்டது 1958-59 ஆம் ஆண்டுகளில் என்று குறிப்பிட்டார். அவர் புதுவையிலிருந்து நடத்திய குயில் ஏட்டில் 19-10-59 இல் மார்புச் சளியின் காரணமாகப் புதுவைத் தலைமை மருத்துவமனையில் சேர்க்கப் பட்டதாகச் செய்தி வெளியிடப்பட்டிருந்தது.

புருக்கி இளமையிலும், மஞ்சட் காமாலை முதுமையிலும் வந்தால் அவற்றில் இருந்து தப்பிப் பிழைப்பது கடினம். முதுமையில் தாக்கிய என்புருக்கி இவரை ஒன்றும் செய்ய வில்லை. அந்நோய் இவருக்குத் துவக்க நிலையிலும் இருந்திருக்கலாம். புதுச்சேரியில் பிரெஞ்சு அரசாங்கப் பணியில் இருப்பவர்களுக்கு மருத்துவமெல்லாம் இல வசம். அரசாங்க மருத்துவமனையில் ஓர் அரசாங்க அலு வலர் சேர்க்கப்பட்டால் (அவர் ஓய்வு பெற்றவராளுலும் சரி.) அவர் நோய் தீரும் வரையில் சம்பளத்தில் அல்லது ஓய்வூதியத்தில் 1/3 பங்குபிடித்துக் கொள்வார்கள். ஆனல் மருத்துவமனையில் நோயாளிக்குச் செலவிடும் தொகை அவர்கள் பிடித்துக் கொள்ளும் தொகையைப் போல் பத்து மடங்கு இருக்குமாம்.

என்புருக்கி நோயினல் தாக்கப்பட்ட போது பாவேந்தரும் புதுவை அரசாங்க மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இவருக்கு நாள்தோறும் மருத்துவமனையில் கொடுக்கப் பட்ட முட்டைகளையும் பழங்களையும் தின்னமுடியாமல் வீட்டுக்குக் கொடுத்து அனுப்புவாராம். உடல் நலம் தேறி வீடு திரும்பியதும், ஓராண்டு ஒரு பிரெஞ்சுச் சமை யல்காரன் இவருக்கு முறையாக உணவு சமைத்துப் போட்டானும். பாவேந்தருக்கு என்புருக்கி வந்தபோது வயது 68. என்புருக்கி நோய் வந்து தப்பிப் பிழைத்தவர் கள் பிறகு மிகவும் எச்சரிக்கையோடு இருப்பார்கள். தொடர்ந்து புகைப்பிடிப்பவர்கள் கூட இந்த நோயைச் சாக்கிட்டு அக்கொடிய பழக்கத்தை விட்டுவிடுவார்கள். ஆனல் பாவேந்தர் எதையும் விடவில்லை. சென்னைத் தியாகராயர் நகரில் இருந்தபோது இவர் சிகரெட்டும் சுருட்டும் மாற்றி மாற்றி ஓயாமல் குடித்துக் கொண்டிருப் பார்; போதாக் குறைக்குப் பொடியும் போடுவார். தாம் பூலம் சுவைக்கும் வழக்கமும் அவரிடம் அப்போது இருந்தது.

□

26—3—62

திங்கள்

□

தமிழகச் சட்டசபைத் தேர்தல்கள் முடிவுற்றன. கடந்த ஒருவார காலமாகத் தேர்தல் ஆரவாரங்களிடையே பாவேந்தரைப் பார்க்க முடியவில்லை. நான் மாலை 4 மணி யளவில் பாவேந்தர் இல்லம் சென்றேன். என்னைக் கண்ட தும், ''உன் தம்பியைப் பார்க்கப் போகணும்; புறப்படு'' என்றார். என்தம்பி இளங்கோவன் அப்போது ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தான். பாவேந்தருக்குச் சர்க்கரைநோய் இருந்ததால் வாரம் ஒரு முறை அவருக்கு வேண்டிய இன்சுலீன் ஊசிமருந்து, வேறு தேவையான மாத்திரைகள் ஆகியவற்றை எடுத்து வைத்திருந்து அவனே வீட்டிற்குக் கொண்டுவந்து கொடுப்பான். சில சமயங்களில் பாவேந்தரே அவன் விடு திக்குச் சென்று வாங்கிக் கொண்டு வருவதும் உண்டு. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் இவருக்கு மிகவும் வேண்டிய மற்றொரு மாணவரும் அப்போது இருந்தார். அவர் பெயர் துரைசாமி; வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்தவர். கவிதை எழுதுவார்; அடக்கமும் அளவு கடந்த தமிழ்ப்பற்றும் உடையவர். தற்போது மலேசியா வில் மருத்துவராகப் பணிசெய்து கொண்டு சிறப்பாக வாழ்கிறார்.

நானும் பாவேந்தரும் என் தம்பியின் விடுதியை அடைந் தோம். அன்று மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியின் ஆண்டுவிழா. பாவேந்தரும் நானும் விருந்தில் கலந்து கொண்டோம். பிறகு மகிழ்ந்தைப் பெற்றுக்கொண்டு வீடு திரும்பினோம்.

வீடுவந்து சேரும்போது இரவு மணி பத்திருக்கும். பாவேந்தர் படுக்கையில் சாய்ந்து கொண்டார். நான் எதிரில் இருந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு சுவடியை விரித்து வைத்தேன். ''என்ன எழுதப் போறியா?'' என்று கேட்டார்.

''ஆமாம்! இன்று உங்கள் வாழ்க்கையில் மிக முக்கியமான ஒரு நிகழ்ச்சியைப் பற்றிச்சொல்ல வேண்டும். கி.பி. 1946 ஆம் ஆண்டில் உங்களுக்கு நடைபெற்ற நிதியளிப்பு விழா‡ பற்றிக் கூறவேண்டும்'' என்று கேட்டேன். அவரும் கூறத்தொடங்கினார்:

"என்னுடை நிதியளிப்பு விழாவில் மகிழ்ச்சி தரக்கூடிய செய்திகளும் உண்டு; வேதனை தரக்கூடிய செய்திகளும் உண்டு. எனக்கு நிதியளிக்க அல்லும் பகலும் ஓய்வு ஒழிச்சல் இன்றி ஒரு சல்லிக்காசுப் பயனையும் எதிர்பாராமல் உழைத்தவர் சிலருண்டு; எதிர்த்தவர் பலருண்டு. பொருமையால் புழுங்கியவர்களும் உண்டு. இவ்வாறு புழுங்கிய தமிழறிஞர்களுள் சாமி. சிதம்பரம் ஒருவர். சாமி.சிதம்பரம் சுயமரியாதை இயக்கக் காலத்தில் பெரியாருக்கும் அண்ணாவுக்கும் தமிழ் புகட்டிய அறிஞர்.

என்னுடைய 'எதிர்பாராத முத்தம்' காவியத்தை முதன் முதலில் வெளியிட்டவர் காஞ்சிபுரம் திரு. பொன்னப்பன் அவர்கள். அந்த நூல் அச்சாகிக் கொண்டிருந்தபோது, பொன்னப்பன் அதற்கு ஆங்கிலத்தில் ஒரு முன்னுரை தரும்படி அண்ணாத்துரையைக் கேட்டார்; அண்ணாத்துரை கொடுக்க மறுத்துவிட்டார். சாமி. சிதம்பரம் தமிழில் அதற்கு ஒரு முன்னுரை வழங்கினார். அதில் என்னை மட்டம் தட்ட வேண்டும் என்பதற்காகவே ஒரு செய்தியைக் குறிப்பிட்டிருந்தார்.

---

‡வரலாற்றுச் சிறப்புள்ள இந்த நிதியளிப்புவிழா அழைப்பிதழ் 1-10-69 சுரதா இதழில் வெளிவந்துள்ளது. பிற்சேர்க்கையில் காண்க.

நிதியளிப்பு விழா முடிவில் நான் பேசியபோது, ''என்னை மக்கள் ஏன் போற்றுகிறார்கள்? பாராட்டுகிறார்கள்? பொற்கிழியளிக்கிறார்கள்? என்னுடைய அஞ்சாமைதான் காரணம். மடமையை ஆதரித்தும் என்னை எதிர்த்தும் பேசுபவர்களைக் கண்டு நான் அஞ்சாமல் திட்டுவேன். நீங்களும் திட்டுங்கள். தமிழனை, தமிழன் பண்பாட்டினை இகழ்பவர்களை நீங்களும் திட்டுங்கள்.

''நண்பர் சிலரும் நமக்கு உறவுபோல் இருந்து நம் காலை வாரி விடுவார்கள். இதோ எதிரில் அமர்ந்திருக்கும் சாமி. சிதம்பரம் அத்தகைய நண்பர்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. என் நூலுக்கு இவர் கொடுத்த முன்னுரையில் பஃறொடை வெண்பா 14 வரிகளுக்கு மேல் கிடையாது என்றும் பாரதிதாசன் அதற்கு மேல் எழுதியிருக்கிறார் என்றும் சொல்லிக் குற்றம் சாட்டியிருக்கிறார். இதன் உள்நோக்கம் என்ன? எதையாவது சொல்லி என்னுடைய புகழ்மீது சேற்றை அள்ளிப் பூசவேண்டும் என்பது அவர்நோக்கம். இவரை நாமெல்லாரும் தமிழறிஞர் என்று ஒரு முகமாக ஒத்துக் கொண்டிருக்கிறோம். சமண ராமாயணம் ஒன்று தமிழில் எழுதப்பட்டுள்ளது. அது பல ஆயிரம் வரிகள் கொண்ட பஃறொடை வெண்பாவால் ஆகிய நூல். இதைச் சாமி. சிதம்பரம் அறிந்திருந்தால் அப்படி எழுதியிருக்க மாட்டார்'' என்று அஞ்சாமல் எடுத்துரைத்தேன். அப்போது மேடையில் காஞ்சி பொன்னப்பனும் அமர்ந்திருந்தார். இரா.பி.சேதுப்பிள்ளைபோன்ற தமிழறிஞர்களும் வந்திருந்தனர். விழாத் தலைமை தாங்கிய ச.சோ. பாரதியார் சாமி. சிதம்பரத்தைப் பார்த்து 'என்னையா உம்மைக் கவிஞருக்கு நண்பரென்று நினைத்திருந்தோம். சமயத்தில் காலை வாரியிருக்கிறீரே!' என்று கேட்டார். சாமி. சிதம்பரம் கூட்டத்தை விட்டு எழுந்து போய்விட்டார்.

மறுநாள் காலை 10மணியளவில் நான் தங்கியிருந்த இடத்துக்குச் சாமி. சிதம்பரம் வந்தார். 'பஃறொடை வெண்பாவின் இலக்கணம்பற்றிப் பிறகுதான் அறிந்து கொண்

டேன்' என்று கூறி என்னிடம் மன்னிப்புக் கேட்டுக்கொண் டார்," என்று இந்நிகழ்ச்சியை முடித்தார் பாவேந்தர்.

''சமண ராமாயணம் என்று தமிழில் ஒரு நூல் இருக்கி றதா?'' என்று பாவேந்தரை நான் கேட்டேன்.

"மைசூர்க் கோலாரில் ஒரு பௌத்தர்† இருக்கிறார். அவர் சுயமரியாதைக்காரர்; பெரியாரின் நண்பர். அவரிடம் இந்தச் சமண ராமாயணத்தைப் பார்த்தேன். அந் நூலுக் குத் 'தசரத காவியம்' என்பது பெயர். பல நிகழ்ச்சிகள் மூலக்கதையினின்றும் வேறுபடுகின்றன. இதில் இராம னுக்குப் பத்தாயிரம் மனைவியரும், அனுமனுக்கு ஆயிரம் மனைவியரும் உண்டு. துளசி ராமாயணக் கதை உனக்குத் தெரியுமா? துளசி ராமாயணத்தில் இராமன் காட்டுக்குச் செல்லும்போது பூமிதேவி சீதையைத் தன்னிடத்தில் மறைத்துக் கொண்டு 'டியூப்லிகேட் சீதை' யைக் கொடுத் தாள்'' என்று கூறினர்.

□

3—4—62

சனி

□

இன்று பாவேந்தர் 1957 இல் பெங்களூரில் நடைபெற்ற குறள் மாநாட்டு நிகழ்ச்சி பற்றிக் கூறினர். அவர் கூறிய செய்தியைக் கீழே கொடுத்திருக்கிறேன்:

---

†அந்தக் கோலார் நண்பர் திரு. அப்பாத்துரை என்று பின்னல் விசா ரித்து அறிந்தேன். அவர் புத்த சமயத்தைச் சார்ந்தவர்; 'தமிழன்' என்ற பத்திரிகை நடத்தியவர்.

''நான்கு ஆண்டுகளுக்கு முன் பெங்களூரில் நடைபெற்ற குறள் மாநாடு ஒன்றுக்கு நான் தலைமை தாங்கினேன். அந்த மாநாட்டில் உரைவேந்தர் ஒளவை சு. துரைசாமி பிள்ளை, டாக்டர் மா. இராசமாணிக்கம், மயிலை மடம் தமிழ்க் கல்லூரித் தலைவர் துரைசாமி ஐயா ஆகிய தமிழறிஞர்களும் கலந்து கொண்டனர். அப்போது அந்த மாநாட்டில் குழப்பம் செய்வதற்கென்றே ஓர் ஆத்திகக் கூட்டம் வந்திருந்தது.

நான் துவக்கவுரையாற்றிக் கொண்டிருந்தேன். அப்போது உடம்பெல்லாம் பட்டை பட்டையாகத் திருநீறு பூசிய ஒரு தடித்த சைவர் எழுந்து நின்று, 'பெரியார் இராமாயணத்தை எரிக்க வேண்டுமென்கிறார். ராதா இராமாயணத்தை இழிவுபடுத்திக் கீமாயணம் நடத்துகிறார். இராமன் கடவுள் அல்லனே? இவ்வாறெல்லாம் செய்வது முறையா?' என்று தொடர்பில்லாமல் கேள்விகள் கேட்டார். அவர் கேள்வி கேட்ட முறையிலிருந்தே அவர் கலவரம் செய்வதற்காகவே வந்த வீரசைவர் என்பதை நான் புரிந்து கொண்டேன்.

எப்போதுமே கருத்துச் சண்டையென்றாலும் கைச்சண்டையென்றாலும் விரும்பி வரவேற்கும் பண்புடையவன் நான். வாலை மிதித்தால் வரிப்புலி சும்மா இருக்குமா? எனக்குக் கோபம் கொப்பளித்தது. கேள்வி கேட்ட அந்தச் சைவரைப் பார்த்து 'நீர் உண்மையான சைவரா?' என்று கேட்டேன்.

'ஆமாம்! அதிலென்ன ஐயம்?' என்றார் அவர்.

'சிவஞான சித்தியார் படித்திருக்கிறீரா?' என்று அவரை நான் அடுத்த கேள்வி கேட்டேன்.

'படித்திருக்கிறேன்' என்று மழுப்பலோடு கூறினார் சைவர்.

'அருள்நந்தி சிவாச்சாரியார் ஒரு வைணவனை முன்னிலைப் படுத்திக் கூறிய பாடல் தெரியுமா?' என்று அடுத்த கேள்வி கேட்டேன். நான் நூலுக்குள் இறங்கியவுடனே அச் சைவருக்கு உதறல் எடுக்கத் தொடங்கி விட்டது.

'மாயை கடவுளுக்குக் கிடையாது. மாயையில் சிக்கி, மாயமான் பின்னால் ஓடி, மனைவியை இழந்து தவித்த இராமன் கடவுள் ஆகமாட்டானென்று சிவஞான சித்தி யார் தெளிவாகக் கூறுகிறது' என்று எடுத்து விளக்கிக் கீழ்க்கண்ட அப்பாடலையும் சொன்னேன்:

மாயமான் தன்னைப் பொய்மான்
எனஅறி யாத ரக்கன்
மாயையில் அகப்பட் டுத்தன்
மனைவியை இழந்தான் தன்னை
மாயைக்குக் கர்த்தா என்பை
மதிகெட்டங் கவனைக் கொன்று
நாயனுர் தமைப்பூ சித்தான்
கொலைப்பழி நணுகி டாமே.

இப்பாடலை எடுத்துக் கூறி, 'இராமன் கடவுளல்லன் என்பதற்குச் சைவர்கள் எல்லாரும் உயர்வாக மதித்துப் போற்றும் சிவஞான சித்தியாரில் உள்ளங்கை நெல்லிக் கனிபோல் சான்றிருக்கிறது. அருள்நந்தி சிவாச்சாரியார் சுயமரியாதைக்காரரா? சைவ ஆகமங்கள் என்ன கூறு கின்றன என்பதைத் தெரிந்து கொள்ளாமல் உடம்பெல் லாம் பட்டை பட்டையாகத் திருநீற்றைப் பூசிக்கொண்டு வந்தால் போதுமா?' என்று சரமாரியாகப் பேசினேன். கேள்வி கேட்ட சைவர் திணறிப்போய் செய்வதறியாமல் உட்கார்ந்து கொண்டார். நிகழ்ச்சி முடிந்து நான் மேடையை விட்டு இறங்கியதும் அவரும் அவருடன் வந்த வேறு சில சைவர்களும் என்னிடம் வந்து, 'உங்கள் புலமையை அறியாமல் நாங்கள் இந்தக் கேள்வியைக் கேட்டு விட்டோம்; எங்களை மன்னித்துக் கொள்ளுங்கள்' என்று கூறினர்.

5—4—62

திங்கள்

இன்று பாவேந்தருடைய திரைப்படத் துறை வாழ்க் கையைப் பற்றிக் கேட்டேன். அவர் சேலம் மாடர்ன் தியேட்டர்ஸில் திரைப்படங்களுக்குக் கதை, வசனம் எழுதிக் கொண்டிருந்தபோது நடந்த ஒருசில நிகழ்ச்சி களை நினைவு கூர்ந்து சொன்னார். அந்நிகழ்ச்சிகளை அவர் கூற்றிலேயே கொடுத்திருக்கிறேன்:

''நான் 1947 ஆம் ஆண்டு முதல் 1953 ஆம் ஆண்டு வரை மாடர்ன் தியேட்டர்ஸில் சில திரைப்படங்களுக்குக் கதை, வசனம் எழுதிக் கொண்டிருந்தேன். சுபத்ரா, சுலோசனா† போன்ற புராணப்படங்களுக்கு முதலில் கதை வசனம் எழுத மறுத்தேன். பிறகு இராவணன், இந்திரசித்து போன்ற திராவிட வீரர்களின் வீரத்தைப் புலப்படுத்த வேண்டுமென்பதற்காகவே அவற்றுக்கு எழுத ஒத்துக் கொண்டேன். மாடர்ன் தியேட்டர்ஸ் உரிமையாளர் திரு. டி.ஆர். சுந்தரம் மிகவும் கண்டிப்பானவர்; சிறந்த திறமை சாலி; பணத்திலும் கருரானவர். எவ்வளவு பெரிய நடிக ரும், எழுத்தாளரும், அவர் எதிரில் உட்கார்ந்து பேசி நான் பார்த்ததில்லை. என்னைத் தவிர வேறு எவரையும் அவர் 'அண்ணா' என்று கூப்பிட்டு நான் கேட்டதில்லை. அவரிடம் சவுக்கடிபட்ட பிரபல நடிகர்களுண்டு. அவர் எதிரில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் நடைமுறை வேலைகள் இயந்திரம் போல் நடந்து கொண்டிருக்கும்.

†சுபத்ரா, சுலோசனா இரண்டிற்கும் பாவேந்தரே கதை,வசனம் எழுதி னார். ஆனால் ஜலகண்டாபுரம் ப.கண்ணன் பெயர் போட்டு அவை வெளியிடப்பட்டன.

'டேய்!' என்று அவர் குரல் கொடுத்தால் மரம் செடிகள் கூட நடுங்கும். அவர் சேர்வராயன் மலைக் காட்டுராஜா. அவரைப் போல் நிர்வாகத் திறமை மிக்க ஒருவரை நான் பார்த்ததில்லை. சுறுசுறுப்பு ஒழுங்கு, கட்டுப்பாடு ஆகிய வற்றின் மொத்த உருவமவர். எவரையும் மதித்துப் பேச மாட்டார். எவரையும், எப்போதும் எதிர்பார்த்து வாழாத வாழ்க்கை அவர் வாழ்க்கை. ஆங்கிலேயனைப் போல் திட்டமிட்டுச் செயலாற்றிய அவரை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

இத்தகைய ஆற்றலும் செல்வாக்கும் மிக்க டி.ஆர். சுந்தரத் தின் எதிரில் கால்மேல் கால் போட்டு உட்கார்ந்து கொண்டு, விரலிடுக்கில் சிகரெட் புகைந்து கொண்டிருக் கும் கையை நீட்டி 'என்ன சுந்தரம்?' என்று ஒருமையில் பேசும் துணிச்சல் என்னைத் தவிர வேறு எவனுக்கும் இருந்ததில்லை. நான் படத்துக்கு எழுதிக் கொண்டிருந்த போது, சேலம் சீரங்கபாளையத்தில் இருக்கும் மாடர்ன் தியேட்டர்ஸ் ஒத்திகைக் கூடத்தின் (Rehearsal Hall) மேல் மாடியில் தங்க ஓர் அறையும், என் உணவு மற்றத் தேவைகளைக் கவனித்துக் கொள்ள ஓர் ஆளும் கொடுத்தி ருந்தார்.

நான் உண்ணும் உணவு முறைகளை அறிந்து, எனக்கு விருப்பமான மீனும், புலால் உணவும் நாள்தோறும் அனுப்பி வைப்பார். என்னுடைய 'எதிர்பாராத முத்தம்' காப்பியத்தைப் படமாக எடுப்பதற்கு வேண்டிய பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்தன. எதிர்பாராத முத்தம் கதைக்கும், அதற்கு வசனம் எழுதுவதற்கும் ஆக ரூ 10, 001/- என்று நானும் சுந்தரமும் நேரில் பேசி முடித்துக் கொண்டோம். இன்னும் எழுத்து வடி வில் ஒப்பந்தம் எதுவும் ஆகவில்லை. பொதுவாகப் படங்களுக்கு நடிகர்களையும் எழுத்தாளர்களையும் டி.ஆர். எஸ். தம்மிடமிருந்த ஒரு மேலாளர் (Manager) மூலமா கவே ஒப்பந்தம் செய்வது வழக்கம். அவ்வாறு ஒப்பந்தம்

ஆகும் போதெல்லாம் அந்த மேலாளர் நடுக்கொள்ளை அடிப்பது வழக்கம். இது டி.ஆர். சுந்தரத்துக்குத் தெரியாது.

நான் ஓர் அவசர வேலையாகப் புதுவை சென்றிருந்த போது பணம் தேவைப்பட்டது. உடனே டி.ஆர்.சுந்தரத்துக்குக் கடிதம் எழுதி ரூ1000/-முன் பணமாகக் கொடுக்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அவர் பத்து நூறு ரூபாய் நோட்டுக்களைத் தன் மேலாளரிடம் கொடுத்து எனக்கு அனுப்பி விடுமாறு கூறினார். அவர் அவற்றுள் ஒரு நோட்டை எடுத்துக் கொண்டு மீதி ரூ 900/-த்தையும் எனக்கு அனுப்பி வைத்தார். அதில் ரூ 100/- எடுத்துக் கொண்டதாக ஒரு குறிப்பும் எழுதி வைத்திருந்தார். நான் அந்தக் குறிப்பைப் பத்திரமாக எடுத்துவைத்துக் கொண்டேன்.

நான் சேலம் வந்ததும் நேராக டி.ஆர். சுந்தரம் பங்களாவிற்குப் போனேன். ஒப்பந்தம் எழுதிக் கையெழுத்துப் போட்டு விட்டு வெளியே வந்தேன். மற்ற எழுத்தாளர்கள் செய்வது போல், நானும் அந்த மேலாளரை உடன் அழைத்துச் செல்லாததால் அவருக்கு என்மேல் எரிச்சல்! நடுக்கொள்ளைக்கு வாய்ப்பில்லாமல் போய்விட்டதே என்று கோபம். இந்தச் செய்தியை முன்கூட்டியே சொல்லாமல் இருந்ததற்காக எனக்குப் பணியாளாக இருந்த சிறுவனை அந்த மேலாளர் நையப் புடைத்து விட்டார். அந்தப் பையன் அழுதுகொண்டு நேராக டி.ஆர்.எஸ். பங்களாவுக்கு வந்தான். பங்களா வாசலில் காவல் காத்துக்கொண்டிருந்தவன் அந்த மேலாளரின் கையாள். அவன் அந்தச் சிறுவனை உள்ளே விட மறுத்து விட்டான். நான் வெளியே வந்ததும் அப்பையன் அழுது கொண்டே நடந்ததைச் சொன்னான். என் சினமெல்லாம் அச்சிறுவனை உள்ளேவிட மறுத்த வாயிற்காவலன் மேல் திரும்பியது. என் கோபம் தீரும்வரை அவனை விளாசினேன். அவன் அடி பொறுக்காமல் கூக்குரலிட்டதும்

உள்ளே இருந்த டி.ஆர்.எஸ். வெளியிலே வந்தார். நான் அடித்து முடிக்கும் வரையில் எதுவும் பேசாமல் அப்படியே நின்று பார்த்துக் கொண்டிருந்தார். ஏன்? என்று என்னை எதுவும் கேட்கவில்லை.

நான் என் அறைக்குத் திரும்பியதும் டி.ஆர்.எஸ். ஓர் ஆளை அனுப்பி, வாயிற்காவலனை அடித்ததற்குக் காரணம் கேட்டிருந்தார். நான் நடந்தவற்றை யெல்லாம் விரிவாக அந்த ஆளிடம் சொல்லி, முன்பணத்தில் ரூ 100-எடுத்துக் கொண்டு மேலாளர் முதலில்எழுதி வைத்திருந்த குறிப்பையும் கொடுத்தனுப்பினேன். அடுத்த நாளே அந்த மேலாளர் வேலையிலிருந்து நீக்கப்பட்டார்.

ஐம்பெருங் காப்பியங்களுள் ஒன்றான வளையாபதியை மாடர்ன் தியேட்டர்ஸார் படமாக எடுக்க முடிவு செய்தார்கள். நான் அதற்குக் கதை வசனம் எழுதினேன். அப்படத்தை டி.ஆர். எஸ். டைரக்ட் செய்யவில்லை. டைரக்டர் ரகுநாத் இயக்கினர். டி.ஆர்.சுந்தரத்துக்கு உடல் நிலை சரியில்லாமல் இருந்த காரணத்தால் அவர் ஓய்வெடுத்துக் கொள்ள கே.எல்.வி. வசந்தாவோடு ஃபிஜித் தீவு சென்றிருந்தார் டைரக்டர் ரகுநாத் வளையாபதியில் நான் எழுதிய திரைக்கதை வசனத்தின் சில பகுதிகளை என்னைக் கேட்காமல் திருத்தியும், வெட்டியும் எறிந்து விட்டார். இதைக் கேட்டதும் எனக்கு அடக்க முடியாத சினம் மூண்டது.

டி.ஆர்.எஸ். ஃபிஜியிலிருந்து திரும்பி வந்து விட்டார், வளையாபதிக்குப் பின் ஒப்பந்தம் செய்யப்பட்ட படமொன்றுக்குச் சில காட்சிகள் வசனம் எழுதியிருந்தேன். மொத்தம் மாடர்ன் தியேட்டர்ஸ் நிறுவனத்துக்கு நான்கு படங்கள் கதை வசனம் எழுத ரூ 40, 000/-க்கு ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தேன். அந்த ஒப்பந்தங்களை 'கேன்சல்' செய்யும்படி டி.ஆர்.சுந்தரத்துக்குக்கடிதம் எழுதினேன். அடுத்த படத்துக்காக நான் வசனம் எழுதியிருந்த சில காட்சி

களின் கையெழுத்துப்படியை வாங்கி வரும்படி சொல்லி ஓர் ஆளை டி.ஆர்.எஸ். அனுப்பியிருந்தார். அத்தக் காட்சி களை எழுதியதற்காக ரூ 3000/- வாங்கி வரும்படி அந்த ஆளிடம் சொல்லி அனுப்பினேன். அவனும் சென்று ரூ 3000/- க்கு ஒரு காசோலை வாங்கிக் கொண்டு வந்தான். அதற்குள் புதுவை செல்லப் பெட்டி படுக்கைகளைக் கட்டி வைத்துவிட்டேன்.

பின்னர் ஒரு குதிரை வண்டியில் பெட்டி படுக்கையை ஏற்றினேன். வந்த ஆளோடு நானும் ஏறி, வண்டிக்காரனை சேலம் ஸ்டேட் பேங்கிற்கு ஓட்டச் சொன்னேன். பேங்கில் காசோலையை கொடுத்துப் பணமாக்கிக் கொண்டேன். திரைக்கதை வசனம் எழுதியிருந்த கையெழுத்துப்படிகளை அந்த பேங்கின் கூடத்தில் வீசியெறிந்தேன். அவன் ஒவ்வொரு தாளாகப் பொறுக்கி எடுத்துக் கொண்டு சென்றான். அதன்பிறகு நான் மாடர்ன் தியேட்டர்ஸ் வாயிற் படிகளை மிதிக்கவில்லை."

இந்த நிகழ்ச்சியைப் பாவேந்தர் சொல்லி முடித்தபோது என் உள்ளம் மிகவும் சங்கடப்பட்டது. அந்தக் காலத்தில் ரூ 40,000/- சாதாரணத் தொகையா? இவ்வளவு பெருந் தொகையை உணர்ச்சி வசப்பட்டு அனுவசியமாக உதறி யெறிந்து விட்டு வந்த பாவேந்தர் செயலை மானவீரம் என்று சொல்வதா? அல்லது பயித்தியக்காரத்தனம் என்று சொல்வதா? என்று என்னால் முடிவு கட்ட முடியவில்லை. இன்றையத் திரைப்பட எழுத்தாளர்கள் இயக்குநர்களின் விருப்பப்படி எதை வேண்டுமானாலும் எப்படி வேண்டு மானாலும் கேட்காமலே மாற்றிக் கொள்ள இசைவளிக் கிறார்கள். இவர்களெங்கே? பாவேந்தர் எங்கே?

□

13—4—62

செவ்வாய்

□

இன்று பாவேந்தர் கூறிய செய்தி எனக்குச் சற்று வியப்பிற்குரியதாக இருந்தது. ஏனென்று சொன்னால் இன்று கூறப்படும் நிகழ்ச்சியில் சம்பந்தப்பட்டுள்ள கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை அவர்கள் நாடறிந்த பெருங் கவிஞர்; குழந்தையுள்ளம் படைத்தவர். இந்த நூற்றாண்டில் வாழ்ந்த சமகாலப் பெருங் கவிஞர் இருவரின் சந்திப்பு இப்படி முடிந்து விட்டதே என்று படிப்போர்க்கு வருத்தம் எழாமல் இருக்க முடியாது. அந் நிகழ்ச்சி பற்றிப் பாவேந்தரே கூறுகிறார். கேளுங்கள்:

''பதினைந்து ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி இது. நாகர்கோயிலில் ஒரு மாநாடு நடைபெற்றது. தமிழ் எழுத்தாளர் மாநாடோ... இலக்கிய மாநாடோ... எனக்குச் சரியாக நினைவில்லை. அம்மாநாட்டுத் தலைவர் டி. கே. சி. அதில் சீனிவாசராகவன் கலையைப் பற்றிப் பேசினார். மாநாடு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனுடைய திரைப்படக் கொட்டகையில் நடைபெற்றது. நான் என். எஸ். கே. வீட்டில் தங்கியிருந்தேன். அம் மாநாட்டில் காலை நிகழ்ச்சியாக எனது பேச்சு இருந்தது. தேசிக விநாயகம்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். மாநாட்டில் கலந்துகொள்ள வந்திருந்த இலக்கிய அறிஞர்களை வரவேற்றுப் பேசிய அவர் என்னைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'புதுவைக் குயில்' வந்திருக்கிறது. அது இங்கு அளவோடு கூவ வேண்டும். அதிகமாகக் கூவினால் கூண்டில் பிடித்து அடைத்து விடுவார்கள்' என்று கூறினார். நான் பொறுமையோடு கேட்டுக் கொண்டிருந்தேன்.

நான் பேசத் தொடங்குவதற்கு முன்பு தலைவர் எனக்கு ஐந்து நிமிடங்கள் ஒதுக்கியிருப்பதாகச் சொன்னார். நான் என்னுடைய தலைப்பைப் பற்றிப் பேசுவதற்கு முன்பு 'நான் புதுவையிலிருந்து வந்திருக்கிறேன். என் பேச்சுக்கு ஐந்து நிமிடமாம்; அதுவும் நான் ஜாக்கிரதையாகப் பேச வேண்டுமாம்; இல்லாவிட்டால் என்னைக் கூண்டில் அடைத்து விடுவார்களாம்' என்று தொடங்கினேன். ஐந்து நிமிடம் ஆனதும் தேவி என்னை உட்காரும்படி கையமர்த் திக்காட்டினர். உடனே நான் கோபத்தோடு மேடையை விட்டு இறங்கி என். எஸ். கே. வீட்டுக்குச் சென்று விட்டேன். அங்கு திரளாகக் கூடியிருந்த மக்கள் நான் இறங்கிச் செல்லும்போது கூச்சலிட்டுத் தடுத்தனர். ஒரு பெருங் கூட்டம் எழுந்து என்னைத் தொடர்ந்து என்.எஸ். கே வீட்டுக்கு வந்து விட்டது. பகலில் மாநாட்டு நிகழ்ச்சி கள். எல்லாம் முடிவுற்றன. இரவு என். எஸ். கே.யின் கலை நிகழ்ச்சி நிகழவிருந்தது.

திரளாகக் கூடியிருந்த மக்களைப் பார்த்துக் கலைவாணர், 'தோழர்களே! இந்நிகழ்ச்சிக்கு நான் தலைவன்; கவிஞர் பாரதிதாசன் சொற்பொழிவாளர். கவிஞர் பேசியதுபோக நேரம் மிச்சமிருந்தால் என்னுடைய கலைநிகழ்ச்சி நடை பெறும்' என்று கூறிவிட்டு அமர்ந்து கொண்டார். மக்கள் எனக்கு வேண்டிய அளவு சிறப்புச் செய்தனர். மேசை நிறைய மாலைகள் குவிந்தன.

நான் மேடையில் என் ஆத்திரம் தீரும் வரையில் பேசி னேன். 'என்னைக் கூண்டில் அடைக்க எவனும் பிறக்க வில்லை. மட்டரகமான எண்ணங்களையெல்லாம் மாற்றிக் கொள். நீ படித்திருக்கும் அளவு உன்னிடத்தில் பண் பில்லை. உள்ளூர் என்ற தைரியமா?' என்று பேசினேன். பிறகு ஒரு மணி நேரம் என் தலைப்பையொட்டிப் பேசி னேன். மக்கள் அமைதியாகக் கேட்டனர். அதன் பிறகு என். எஸ். கேயின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது.''

□

23—4—62

வியாழன்

□

பாவேந்தர் எப்போதும் உணர்ச்சிவயப்படக் கூடியவர். உணர்ச்சி வயப்படாதவன் கவிஞனாக இருக்க முடியாதே! இதனால் பாவேந்தரோடு பழகுபவர்கள் மிகவும் எச்சரிக்கையோடு அவரிடம் பழக வேண்டியிருந்தது. நன்றாகப் பழகிக் கொண்டிருப்பார். யாராவது நம்மைப் பற்றித் தவறான முறையில் கோள் சொன்னால் ஆராயாமல் அப்படியே நம்பி விடுவார். அடுத்தமுறை அவரைப் பார்க்கச் சென்றால் 'போ வெளியே! பல்லை உடைச்சிடுவேன்' என்று கூச்சலிடுவார். இது அவர் இயல்பு.

எளிதில் யாரையும் நம்பும் அவர் யார் என்ன சொன்னாலும் செலவைப் பற்றிப் பொருட்படுத்தாமல் உடனே கையிலிருக்கும் காசைச் செலவு செய்யத் தொடங்கி விடுவார். யார் தடுத்தாலும் கேட்கமாட்டார். இது நமக்குத் தேவையா? தேவையில்லையா? என்பதைப் பற்றிச் சிந்திக்க மாட்டார்.

பாவேந்தர் தம்முடைய வீட்டில் எப்போதும் நல்ல இனத்தைச் சேர்ந்த கோழிகள், புறாக்கள் வளர்ப்பது வழக்கம். 'வீடு என்று இருந்தால் ஒரு பசுமாடு, கோழிகள், புறாக்கள் எல்லாம் இருக்கவேண்டும்' என்று கூறுவார். புதுச்சேரி வீட்டில் கூட 'காமலாபுரம் குட்டைப்பசு' ஒன்று எப்போதும் இருக்கும்; புறாக்கள் இருக்கும். சென்னை இராமன் தெரு வீட்டிலும் பாவேந்தர் கோழிகள் வளர்த்து வந்தார்.

ஒரு நாள் பாவேந்தரைப் பார்ப்பதற்காக ஒரு விலங்கு மருத்துவர் (B.V.Sc.) வந்திருந்தார். அவர் கோழி களைப் பார்த்துவிட்டு, "கோழிகளையெல்லாம் இப்படி வளர்க்கக் கூடாது. அவைகளுக்கு நோய் வந்துவிடும். அவைகள் உட்காருவதற்கும், இரையுண்ணுவதற்கும் கோழிப் பண்ணைகளில் இரும்பில் செய்த சாமான்கள் இருக்கின்றன'' என்று பேச்சுவாக்கில் சொன்னார். அடுத்த நாள் வெளியில் சென்ற பாவேந்தர் கோழிப் பண்ணையிலிருந்து அந்தப் பொருள்களையெல்லாம் வாங் கிக்கொண்டு வந்துவிட்டார். அவற்றின்விலை ரூ.50/-க்கு மேல் இருக்கும். அப்போது பாவேந்தருக்கு இருந்த பணத்தொல்லையில் அவர் ரூ. 50/- செலவிடவேண்டிய தில்லை. அவர் வீட்டிலிருந்த கோழிகளும் பேசாமல் நிலத் திலேயே இரையெடுத்துக் கொண்டு உடல் நலத்தோடு நன்றாகத் தான் இருந்தன. பாவேந்தரை யார் தடுக்க முடியும்?

பாவேந்தருக்குப் புறாக்களையும் கோழிகளையும் வளர்ப்ப தில் அளவு கடந்த விருப்பம். இவை கூடி இரையுண்ணும் அழகை விருப்பத்தோடு பார்த்துக் கொண்டிருப்பார். இந்த விருப்பத்தின் வெளிவுதான் அவர் நமக்குப் படைத்துக் கொடுத்த 'புறாக்கள் கோழிகள்' பற்றிய அழகான பாடல்கள்.

□

24—4—62

சனி

□

இன்று பாவேந்தர் இல்லத்தில் பல அறிஞர்களைச் சந்திக் கும் வாய்ப்பு எனக்கு ஏற்பட்டது, அவர்களுள் குறிப்பிடத் தக்கவர்கள் காலஞ்சென்ற தமிழ்மறவர் பொன்னம்பலனார்

புதுவை பா.முத்து, அறிவழகன் ஆகியோர். பாவேந்தரின் புதுவை மாணவர்களுள் கவிஞர்கள் வாணிதாசன், சிவப்பிரகாசம் எம்.பி., பா. முத்து ஆகிய மூவரும் முக்கிய மானவர்கள். இந்தப் பா.முத்து. புதுவைத் துறைமுகத்தில் ஏதோ ஓர் அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருந்தார். அவர் அடிக்கடி சென்னை வந்து பாவேந்தரைப் பார்த்துச் செல்வது வழக்கம். வரும் போதெல்லாம் வெளி நாட்டில் இருந்து இறக்குமதியாகும் ஹார்லிக்ஸ், ஓவல், சிகரெட் ஆகியவற்றைக் கொண்டு வந்து கொடுப்பார். இன்றும் கொண்டு வந்திருந்தார். பாவேந்தர் இவரிடத்தில் மிகுந்த அன்போடு பழகுவார். பாவேந்தரின் 'அழகின் சிரிப்பைப்' பின்பற்றி 'இயற்கை இன்பம்' என்ற பெயரில்இவர் ஒரு நூல் எழுதியிருக்கிறார். பாவேந்தரைப் பார்க்க வந்திருந்தபோது இவருக்கு வயது நாற்பது இருக்கும். இப்போது இவர் உயிருடன் இல்லை.

சுயமரியாதை இயக்கத்தில் பொன்னம்பலனார் இருவர். ஒருவர் பூவாளூர் அ. பொன்னம்பலனார்; மற்றொருவர் தமிழ்மறவர் பொன்னம்பலனார். இன்று பாவேந்தரைப் பார்க்க வந்திருந்தவர் தமிழ்மறவர் பொன்னம்பலனார். வேலூர் கண்டர் உயர்நிலைப் பள்ளியிலும். சேலம் நகரவைப் பள்ளியிலும் நீண்டநாள் தமிழாசிரியராகப் பணியாற்றியவர். இறுதி நாட்களில் திருச்சி மாவட்டத்தில் முசிரி, பொன்பரப்பி ஆகிய ஊர்களில் பணியாற்றினார். இவர் நூற்றுக்கு நூறு பெரியாரின் கொள்கைகளைக் கடைப்பிடிப்பவர். இவர் எந்தக் காரணத்துக்காகவும், எவருக்காகவும் — ஏன், அரசாங்கத்துக்குக் கூட — தம் கொள்கைகளை விட்டுக்கொடுக்காதவர். இதனால் வாழ்க்கையில் இவருக்கு எதிர்ப்புகளும் தொல்லைகளும் அதிகம். ஆனால் இவர் எந்த எதிர்ப்பையும் சமாளித்து, வெற்றியே கண்டவர். யாரும் எளிதில் உடைக்க முடியாத நெற்றுக்

கொட்டை. கவிஞர் பொன்னடியான்* தமிழ்மறவர் பொன்னம்பலனரின் தயாரிப்பு. முசிரியில் நடந்த மாணவர் கிளர்ச்சியில் பொன்னம்பலனுக்கு ஆதரவாக இருந்து, கிளர்ச்சியை முன்னிருந்து நடத்தியவர் பொன்னடியான். இதனால் பள்ளிப்படிப்புப் பாதிக்கப்பட்டு இருந்தபோது, பொன்னடியானைப் பாவேந்தரிடத்தில் கொண்டு வந்து ஒப்படைத்தவர் பொன்னம்பலனரே.

பொன்னம்பலனர் தம் அடைமொழிக்கேற்பத் தோற்றத்தில் தமிழ் மறவராகவே காட்சியளிப்பார். எப்போதும் கருப்புச் சட்டைதான் போடுவார்; பள்ளிக்கும் கருப்புச் சட்டையோடு தான் வருவார். பெரியார் 'எப்போதும் கத்தி வைத்துக் கொள்ளுங்கள்' என்று அறிக்கை விட்ட பிறகு, எப்போதும் தமது கருப்புக் கோட்டுப் பையில் 'பிச்சுவா' ஒன்றை வைத்துக் கொண்டிருப்பார். அளவு கடந்த தனித் தமிழ்ப்பற்று உடையவர். மறந்தும் பிற மொழிச் சொற்களைத் தம்பேச்சில் கலக்க மாட்டார். தனித் தமிழிலேயே பேச வேண்டும் என்பதில் பாவாணரைப் போல் இவரும் கண்டிப்பானவர். சேலத்தில் இருந்த போது உணவு விடுதிகளுக்குச் சென்றால் சுவைமுறுக்கு (ஜிலேபி), சுவைக்கட்டி (மைசூர்ப்பாகு), சுவைக்களி (அல்வா) கார்க்கலவை (மிக்சர்) என்று தான் கேட்பார். 'ஓ என் சகோதரரே' என்று தொடங்கும் பாவேந்தரின் 'சஞ்சீவிபர்வதத்தின் சாரல்' வரிகளைத் தேர்வுத்தாளில் கொடுத்துக் கேள்வி கேட்டதற்காக அரசாங்கம் இவர் மீது நடவடிக்கை எடுத்தது. சேலம் நகராட்சிப் பள்ளியில் இவர் பணியாற்றிய போது இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

தமிழ்மறவர் பொன்னம்பலனரின் தொடர்பு பாவேந்தரின் இலக்கியப் போக்கில் பெரிய பாதிப்பை உண்டாக்கி, அவ

*பொன்னடியான் என்ற பெயர் 'பொன்னம்பலனருக்கு அடியவன்' என்பதைக் குறிப்பிட வைத்துக் கொண்டதாகும். பொன்னம்பலனரின் இயற்பெயர் 'கனகசபை'.

ருடைய பாடல்களை அடியோடு மாற்றி விட்டது. பாவேந்தரே இதை என்னிடம் குறிப்பிட்டார். பாவேந்தரும் தமிழ்மறவரும் முதன் முறையாக ஒரு திருமணத்தில் சந்தித்தனர். மறவர் பாவேந்தரைப் பார்த்து,

'கனியிடை ஏறிய சுளையும்—முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய ருசியும்'—

என்ற வரிகளை எடுத்துச் சொல்லி' ''இதில் ருசி என்ற வடசொல் எதற்கு? ருசிக்குத் தமிழில் 'சுவை' என்ற அழகான சொல்லிருக்கிறதே. 'பாகிடை ஏறிய சுவையும்' என்றிருந்தால்நன்றாக இருக்குமே'' என்று கூறினராம். பாவேந்தர் அதற்கு ஒப்பியதோடு அடுத்த பதிப்பில் மாற்றியும் விட்டார். பொன்னம்பலனார் தொடர்பால் ஏற்பட்ட தனித் தமிழ்ப்பற்றுதான் 'தமிழியக்கம்' என்ற அருமையான நூல் தோன்றக் காரணம். பொன்னம்பலனார் தொடர்புக்குப்பின் எழுதப்பட்ட எல்லா நூல்களுமே பிறமொழிக் கலப்பின்றி எழுதப்பட்டன. பாவேந்தர் நூல்களில் பயிற்சியுடைய எல்லாருக்கும் இவ்வுண்மை தெரியும். 'சித்திரநிகர் பெண்டிர்களைச் சீரழிக்கும் பாரத நற்புத்ரர்களைப் பற்றியன்றே பூலோகம் தூற்றுவது!' போன்ற மணிப்பிரவாள நடை, பாவேந்தரிடமிருந்து அடியோடு விடைபெற்றுச் சென்று விட்டது.

பொன்னம்பலனார் தம் மகளுக்குக் கல்லூரியில் எம்.எஸ்சி. படிப்புக்கு இடம் வாங்குவதற்காக வந்திருந்தார். வந்தவர் பாவேந்தர் வீட்டில் வந்து தங்கினார். அன்று இரண்டு தமிழேறுகளும் முக்காரமிட்டுக் கொண்டிருந்தன. அன்று சில சொல்லாராய்ச்சிகளும் நடந்தன. 'முவ்வுரம்'என்பது தான் 'மும்மரம்' ஆயிற்றென்றும், மனம் வாக்கு காயம் ஆகிய மூன்றுமே முவ்வுரங்கள் என்றும் பாவேந்தர் கூறினார். பஞ்ச பூதங்களையும் முகப்பது 'முகம்' என்றும், சுதுவுவது 'கதவு' என்றும் பொன்னம்பலனார் சொன்னார்.

அன்று பேராசிரியர் நமச்சிவாய முதலியாரைப் பற்றி இரு வரும் வியந்து பேசிக் கொண்டிருந்தனர். அவர்கள் பேச்சி லிருந்து பேராசிரியர் நமச்சிவாய முதலியார் பற்றிச் சில அரிய செய்திகளை அறிந்து கொண்டேன். முதன் முதலா கப் 'பொங்கல் விழாவே தமிழரின் தனிப்பெரும் பண்டிகை என்பதைப் பேசியும், எழுதியும் கொண்டாடியும் அறிமுகப் படுத்தியவர் நமச்சிவாயரே. இவர் வாழ்ந்த நாளில் ஆண்டுதோறும் தம் வளமனையான கடலகத்தில்† பொங் கல் விழாக் கொண்டாடுவாராம். அவ்விழாவுக்கு வரு வோர்க்கு ஒவ்வொரு ஆப்பிள்பழம் கையுறையாக வழங்கு வாராம். முதன் முதலாக உதகமண்டலத்தில் 'வளமனை' வாங்கிய தமிழறிஞர் இவரே. அந்த நாளில் உந்துவண்டி யொன்று சொந்தமாகக் கொண்டிருந்த தமிழாசிரியர் இவர். தமிழாசிரியர்கள் சம்பளத்தை அரசாங்கத்துக்குப் பரிந்துரை செய்து ரூ 45/-லிருந்து ரூ 75/-ஆக உயர்த்திய வரும் இவரே. ஆவணக்களரி, அச்சகம் முதலிய இடங்க ளில் தமிழாசிரியர்கள் அமர்த்தப்பட வேண்டும் என்று கூறுவாராம். 'ஏழைக் குடும்பத்தைச் சேர்ந்த மக்கள் பொறியியல், மருத்துவம் போன்ற கல்விகளைக்கற்க அர சாங்கம் வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். செல்வர் வீட்டுப் பிள்ளைகள் சட்டப்படித்து விட்டுத் தமி ழுக்குத் தொண்டுசெய்ய வேண்டும்' என்று அடிக்கடி சொல்வாராம். நமச்சிவாயர், தமிழர் என்றும் நினைவு கூரத்தக்க தமிழறிஞர். பொங்கல் விழாவைத் தோற்று வித்து விளம்பரப் படுத்திய அவரை நாம் பொங்கல் நாளில் கூட நினைப்பதில்லை.

□

இன்று எனக்குக் கல்லூரி விடுமுறை ஆகையால் பகல் முழுதும் பாவேந்தரோடு கழித்தேன். அன்று மாலை

†கடலகம் நமச்சிவாயர் வீடு; வங்கக் கடலைப்பார்த்துக் கட்டியது. தற் போது இவ்வீடு அவர் குடும்பத்தாரிடம் இல்லை. இதில் உணவு விடுதி இப்போது உள்ளது. இது கடற்கரையில் சென்னை வானொலி நிலையத் திற்கு அருகில் உள்ளது.

பொன்னம்பலனாரோடு நானும் பொன்னடியும் வெளியில் கிளம்பினோம். ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் பயிற்சி யாளராக (House surgeon) இருந்த செல்வி. ஞானம் என்ற பெண்ணைப் பார்ப்பதற்காகச் சென்றோம். அந்தப் பெண் பொன்னம்பலனாரின் நெருங்கிய நண்பரின் மகள்.

செல்லும் வழியில் பொன்னம்பலனார் எங்களோ நோக்கி "புரட்சிப் பாவேந்தரை† நீங்கள் கண்ணுங் கருத்துமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவர் இந்நாட்டின் சொத்து. தனியாக அவரை உந்து வண்டிகளில் ஏறிச் செல்லும்படி அனுப்பாதீர்கள். அவருடன் யாராவது துணையாகச் செல்லவேண்டும். அவர் குழந்தையைப் போன்றவர்'' என்றெல்லாம் கூறிக் கொண்டு வந்தார்.

□

30—4—62

வெள்ளி

□

இன்று பாவேந்தர் இல்லத்தில் தமிழ்க் கவிஞர் பெருமன்றத்தின் செயற்குழுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. கவிஞர் வேழவேந்தன், தமிழழகன் ஆகியோர் வருகை தந்திருந்தனர். இச்செயற்குழுக் கூட்டம் தமிழ்க் கவிஞர் பெருமன்றச் சார்பில் சித்திரை முதல்நாள் 'குயில்' கவிதை இதழை வெளியிட முடிவு செய்தது.

கூட்டத்துக்கு வந்திருந்த கவிஞர்கள் சென்ற பிறகு நானும் பாவேந்தரும் உணவருந்திவிட்டுப் பேசிக்

†பொன்னம்பலனார் பாரதிதாசனரை எப்போதும் "புரட்சி பாவேந்தர்'' என்றே குறிப்பிடுவார். 'கவிஞர்' என்ற சொல்லைப் பயன்படுத்த மாட்டார். கவிஞர் வடசொல் என்பது அவர் கருத்து.

கொண்டிருந்தோம். எங்கள் பேச்சு, கவிஞர்களின் சில விநோதமான நடவடிக்கைகளின்பால் திரும்பியது. பாரதி கடையம் அக்ரகாரத்தில் கழுதைக் குட்டியை அணைத்து முத்தமிட்டது பற்றியும், இரவு நேரங்களில் கடற்கரையில் படுத்துக் கொண்டு வானத்தை விடியும் வரையில் வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தது பற்றியும் பாவேந்தர் கூறினார். ஆங்கில நாட்டுப் புரட்சிக் கவிஞனான ஷெல்லி†யைப் பற்றி நான் ஒரு செய்தி சொன்னேன். நீராடிக் கொண்டிருந்த ஷெல்லி திடீரென்று எதையோ நினைத்துக் கொண்டு அருகிலிருந்த தன் இல்லத்துக்கு அப்படியே பிறந்த மேனியாகத் திரும்பி வந்தான். வரவேற்பு அறையில் ஷெல்லியின் மனைவி மேரி தன் நண்பர் களோடு உரையாடிக் கொண்டிருந்தாள். அவர்களைச் சட்டை செய்யாமல் இவன் தன் அறையை நோக்கிச் சென்று கொண்டிருந்தான். மனைவி 'என்ன இது?' என்று கூச்சலிட்ட பிறகுதான் தன் நிலையை ஷெல்லி அறிந்தான். இதை நான் கூறியதும் தம்முடைய வாழ்க்கையிலும் இவை போன்ற நிகழ்ச்சிகள் உண்டு என்று பாவேந்தர் சிலவற்றைக் குறிப்பிட்டார்.

''பாண்டிச்சேரி சட்டசபையின் மாடிப்படி வழியில் அழகான ஓர் ஓவியம் வைக்கப்பட்டுள்ளது. அது ஒரு பிரெஞ்சு ஓவியரால் தீட்டப் பட்டது. 'மனச்சாட்சியின் தீர்ப்பு' என்பது அப்படத்தின் பெயர். ஒருவன் கொலை செய்துவிட்டுக் குருதிக் கறைபடிந்த கத்தியோடு போகிறான். இடது கையில் மெழுகுவர்த்தியைத் தாங்கிய ஒரு பெண் தேவதை சூற்றவாளியைத் தண்டிப்பதற்காக வலது கையில் ஒரு வாளை ஓங்கிய வண்ணம் இருக்கிறது. இந்தப் படத்தை நான் எத்தனையோ முறை பார்த்துச் சுவைத்திருக்கிறேன். என்றாலும் ஒவ்வொரு முறையும் படியேறும் போதெல்லாம் அப்படியே படத்தின் எதிரில்

†ஷெல்லியைப்பற்றிய இந்தச் செய்தி சிறந்த பிரெஞ்சு எழுத்தாளனை ஆண்ட்ரூ மொராய், ஷெல்லியைப் பற்றி எழுதியுள்ள 'ஏரியல்' என்ற வாழ்க்கை வரலாற்று நூலில் கூறப்பட்டுள்ளது.

நின்று விடுவேன். பின்னல் வருபவர்கள் எனக்கு உணர்த்தி திரும்தான் அவ்விடத்தை விட்டு நகருவேன். பார்ப்பவர் உள்ளத்தைத் தன்பால் ஈர்க்கும் ஆற்றல் அப்படத்துக்கு உண்டு.

□

ஒரு முறை நான் தஞ்சைக்குப் புகைவண்டியில் பயணம் செய்து கொண்டிருந்தேன். வண்டி மாயவரம் சந்திப்பை அடைந்தது. மாயவரம் சந்திப்பில் வண்டி அரைமணி நேரத்துக்கு மேல் நிற்பது வழக்கம். எனவே சந்திப்புக்கு வெளியே உள்ள ஒரு நல்ல விடுதியில் உணவு சாப்பிட்டு விட்டு வரலாம் என்று கிளம்பினேன், நான் உணவு சாப்பிட்டுவிட்டுப் புகைவண்டிச் சந்திப்புக்குத் திரும்பி வந்து கொண்டிருந்த போது இரவு மணி 9 இருக்கும். அப்போது மாரியம்மன் திருவிழா என்று எண்ணுகிறேன். அம்மனைப் பூப்பல்லக்கில் ஏற்றி ஊர்வலமாகக் கொண்டு வந்தனர். பூவின் அலங்காரமும், மணமும் என்னை மெய் மறக்கச் செய்து விட்டன. போதாதற்கு நாதஸ்வர இசை வேறு. கைப்பையைச் சுமந்த வண்ணம் விடிய விடிய அப்பல்லக்கின் பின்னாலேயே சுற்றிக் கொண்டிருந்தேன். பிறகு விடியற்காலம் 5 மணிக்கு வேறு வண்டி பிடித்து ஏறித் தஞ்சை சென்றேன். நான் அப்போது காரைக்காலில் ஆசிரியராகப் பணிபுரிந்து கொண்டிருந்தேன். மாயவரத்தில் கிட்டப்பா என்ற பூக்கடைக்காரர் எனது நண்பர். அவர் சந்தனமும் விற்பார். நான் மாயவரம் போகும்போதெல்லாம் அக்கடையில் அமர்ந்து பொழுதைக் கழிப்பேன்.

□

ஒரு முறை தேனிப்பேட்டைப் பொருட்காட்சியைக் காண்பதற்காக என் நண்பர்களோடு சென்றிருந்தேன். அந்நண்பர்களுள் சக்தி கிருஷ்ணசாமியும் ஒருவர். பொருட்காட்சியில் ஒரு சிற்பக் கடை இருந்தது. எல்லோராச் சிற்பங்களின் மாதிரிகள் அங்கு விலைக்கு வைக்கப்பட்டி

ருந்தன. அவற்றுள், கண்ணுடியைப் பார்த்து ஒரு பெண் நெற்றியில் பொட்டு வைத்துக் கொள்வது போல ஒரு சிற்பம் இருந்தது. அச்சிற்பத்தின் கலையழகு என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. அதையே பார்த்துக் கொண்டிருந்தேன். எவ்வளவு நேரம் நான் அப்படியே நின்று கொண்டிருந்தேனோ தெரியாது. என்னோடு வந்த நண்பர்கள் கடைகளையெல்லாம் ஒரு முறை சுற்றிப் பார்த்துவிட்டு மீண்டும் அதே இடத்துக்கு வந்தனர். நான் அந்தச் சிற்பக் கடையிலேயே நிற்பதைப் பார்த்து விட்டு என்னைக் கூட்டிச் சென்றனர்.

'இரத்தக் கண்ணீர்' 'பராசக்தி' முதலிய சர்ச்சைக்குரிய படங்களை எடுத்த நேஷனல் பிக்சர்ஸ் உரிமையாளரான திரு. பெருமாள் வீட்டில் நான் அப்போது தங்கியிருந்தேன். வீடு திரும்பிய பிறகும் அச்சிற்பத்தின் கலையழகைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தேன். அதைக் கவனித்த பெருமாள் செட்டியார் ஓர் ஆளைத் தேனும் பேட்டைப் பொருட்காட்சிக்கு அனுப்பி அச்சிலையை விலை கேட்டு வரச்சொன்னார். ஆனால் அச்சிலையைக் கடைக்காரன் விலைக்குக் கொடுக்க மறுத்துவிட்டான்.''

○

பாரதியாரும் பாவேந்தரும்

3

பார்த்தவர்களை மலைக்க வைக்கும்படியான தோற்றம் பாவேந்தர் தோற்றம். அவர் குனிந்திருந்ததை யாரும் பார்த்திருக்கமுடியாது, நின்றாலும் உட்கார்ந்திருந்தாலும் அவருடைய தெற்சும் தலையும் நிமிர்ந்தே இருக்கும். ஆனால் பாரதியைப் பற்றிப் பேசும்போது மட்டும் அவர் தோற்றத்தில் ஓர் ஒடுக்கமும், பேச்சில் ஓர் அடக்கமும் தோன்றியதை நான் கவனித்திருக்கிறேன்.

ஒருநாள் பாவேந்தரோடு நான் பேசிக்கொண்டிருந்த போது ''பாரதியாருக்கும் உங்களுக்கும்இருந்த தொடர்பு பற்றிக் கூறுங்கள்'' என்று கேட்டேன். உடனே பாவேந்தர், ''பாரதியார் பற்றி நானே ஒரு நூல் எழுதிக் கொண்

டிருக்கிறேன். எனவே பாரதியார் பற்றி என்னிடம் எது வும் கேட்காதே. என்னைப் பற்றி மட்டும் கேள்,'' என்று கூறினார். அதற்குப் பிறகு பாரதியார் பற்றி அவரிடம் நான் எதுவும் கேட்டதில்லை. என்னோடும், மற்றவர்க ளோடும் பேசிக்கொண்டிருந்த நேரத்தில் அவரே தற்செய லாகக் கூறிய சில செய்திகளை மட்டும் அவர் கூறியது போலவே கீழே தொகுத்துக் கொடுத்திருக்கிறேன்.

□

"பாரதியார் கி.பி. 1908 இல் புதுச்சேரி வந்தார். அவர் புதுச்சேரி வந்து ஓரிரண்டு ஆண்டுகள் கழித்துத்தான் அவ ருக்கும் எனக்கும் பழக்கம் ஏற்பட்டது. பாரதியாரோடு பழக்கம் ஏற்பட்ட நேரத்தில் நான் இருபது வயதுக்காளை. சரியாகச் சொன்னால் முரட்டுக்காளை. நான் அரசியல் கழ கம், சண்டைக் கழகம் (மற்களம்), புலவர் கழகம் ஆகிய எல்லாவிடத்திலும் இருப்பேன். என் தோற்றமே பார்ப்ப தற்கு முரட்டுத் தனமாகத்தான் தெரியும். கையில் தங்கக் காப்பும் கழுத்தில் கருப்புக் கயிறும்,மேனி தெரியும் மல் ஜிப் பாவுமாக எப்போதும் 'வஸ்தாது' போல் திரிந்து கொண் டிருப்பேன். என் நடையுடை பாவனைகளில் ஒரு பண்பட்ட நிலை அப்போது ஏற்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். மற்களத்தில் முறையாகப் பயிற்சி செய்யத் தொடங்கியிருந்ததால், உடற்கட்டும் நன்றாக இருந்தது.

பாரதியாரின் தோற்றமும், வெளிப்படையான போக்கும் என்னை அவர்பால் இழுக்கத் தொடங்கின. அவர் தொடர்பு என் பழக்க வழக்கங்களிலும், சிந்தனையிலும் என்னை அறியாமலே சில மாற்றங்களை ஏற்படுத்திக் கொண்டிருந்தது. அதைக் காலப் போக்கில் நானும் உணரத் தொடங்கினேன். பழமைப் போக்கிலும், செக்கு சுற்றும் கவிதைப்பாணியிலும் ஊறிப் போயிருந்த எனக்கு பாரதியாரின் அஞ்சாமையும், எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும் காலத்துக்கு ஒவ்வாததை அலட்சியமாக

உதறும் துணிச்சலும், பிறர் என்ன நினைப்பார்கள் என்பதைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமல் தான் நினைத்ததைச் செய்யும் உள்ள உறுதியும் மிகவும் பிடித்தன. உண்மையிலேயே பாரதியாரின் இப்பண்புகள் அப்போது இளைஞனை என்னை மிகவும் வசீகரித்தன. பள்ளி நேரம் போக ஒய்வு நேரங்களில் பாரதியாரோடு இருப்பேன். அரவிந்தர், வ.வெ.சு. அய்யர், பாரதி ஆகியோர் ஓயாமல் பேசிக் கொண்டிருப்பர். அவர்கள் பேச்சில் அடிபடாத செய்தி எதுவுமில்லை. நான் அருகில் அமர்ந்து அவர்கள் பேசுவதைக் கேட்டுக் கேட்டு எவ்வளவோ தெரிந்துகொண்டேன். பாரதியார் எதைப் பேசினாலும் ஒரு கவிஞனுக்குரிய மிடுக்கோடுதான் பேசுவார்.

இப்புரட்சிக்காரர்களின் பேச்சைக்கேட்டு இளைஞனை என் உள்ளத்திலும் அப்போது தேசிய உணர்வும் புரட்சிக் கருத்துக்களும் வேர்விடத் தொடங்கின. அந்தச் சமயத்தில் ஒரு வங்காள இளைஞனும் எங்களுடன் இருந்தான். அவன் அரவிந்தரின் தீவிரச் செயல்களால் ஈர்க்கப்பட்டுப் புதுச்சேரி வந்து தங்கியவன். அப்போது வங்காள ஆளுநராக இருந்த ஒரு வெள்ளையரைச் சுட்டுக் கொல்வதற்காக ஒரு துப்பாக்கியை அந்த இளைஞனுக்குக் கொடுத்துதவினேன். நான் இளமைத் துடிப்பில் அப்போது செய்த பல துணிச்சலான செயல்களைக் குடும்ப விளக்கின் 'விருந்தோம்பல்' பகுதியில் ஒரு முதியவர் கூறுவதுபோல் வெளிப்படுத்தியிருக்கிறேன். என் இளமைத் துடிப்பையும், துணிச்சலையும் ஒருமுகப்படுத்திக் கவிதைத் துறையில் திருப்பிவிட்டவர் பாரதியார்தாம்.

ஒருநாள் என்வயதுக்கேற்ற நண்பர் சிலருடன் அரவிந்தர் தங்கியிருந்த மாடி வீட்டின் கைப்பிடிச் சுவரின் மீது அமர்ந்து புகைப் பிடித்துக் கொண்டிருந்தேன். அப்போது பாரதியாரும் அரவிந்தரும் வேறுசில நண்பர்களுடன் வந்து கொண்டிருந்தனர். அவர்கள் வந்தது எனக்குத் தெரியாது.

என்னையும் என்னோடு புகைப்பிடித்துக் கொண்டிருந்த என் சகாக்களையும் பார்த்த அரவிந்தருக்கு ஒரு மாதிரியாக இருந்திருக்கும் போல் இருக்கிறது. என்னைப் பாரதியாருக்குக் காட்டி, ''யாரது? சுப்புரத்தனமா?'' என்று கேட்டாராம். அதற்குப் பாரதியார் ''ஆமாம். சுப்புரத்தனந்தான். எல்லா செட்டிலேயும் இருப்பான்; ஆனால் பெரியபுலவன்'' என்று விட்டுக் கொடுக்காமல் கூறினாராம். அதைக் கேட்ட பிறகு பாரதியாரின் மீது அளவுகடந்த மதிப்பு எனக்கு ஏற்பட்டு விட்டது.

பாரதியார் பழைய கட்டுத் திட்டங்களையெல்லாம் உதறி விட்டுப் பாமர மக்களுக்கும் புரியும்படி மிக எளிய முறையில் கவிதை எழுதியது புதுவையில் இருந்த பழம் புலவர்களுக்குப் பிடிக்கவில்லை. அவர்கள் யாரும்பாரதியை மதிப்பது கிடையாது. பாரதியாரும் அவர்களைச் சட்டை செய்ய மாட்டார். எனக்குத் தமிழ் பயிற்றிய ஆசிரியர்களுள் ஒருவரான பங்காரு பத்தருக்குப் பாரதியாரைக் கட்டோடு பிடிக்காது. ஏன்? அவரைப் பாரதியாரின் எதிரி என்றே சொல்லலாம். எப்போதுபார்த்தாலும் வருவோர் போவோரிடமெல்லாம் பாரதியாரின் பாட்டை எடுத்து வைத்துக் குறைசொல்லிக் கொண்டிருப்பார்; எதிர்ப்பிரசாரம்செய்து கொண்டிருப்பார். ''இவனெல்லாம் இங்கிலீஸ் படிச்சுப் புட்டுத் தமிழ்ப்பாட்டு எழுதறானுங்க. சுட்டுக்கு முன்னாலே வல்லெழுந்து மிகுங்கற சாதாரண இலக்கணமே தெரியல. 'அங்கு கண்டான்'னு எழுதறான். இவனெல்லாம் கவியாம்'' என்று என்னைக் கூப்பிட்டுச் சொல்லித் திட்டுவார். நான் இதைப் பற்றிப் பாரதியாரிடம் சொன்னால், "அங்குக் கண்டான் என்று எழுதினால் நன்றாகவா இருக்கிறது?'' என்று என்னைத் திருப்பிக் கேட்பார்.

"நன்றாக இல்லாவிட்டால் என்ன? இலக்கணப் பிழையில்லாமல் நாம் எழுத வேண்டாமா?'' என்று நான் கேட்பேன். பாரதியார் பதிலுக்கு ஒரு சிரிப்புச் சிரிப்பார். அவ்வளவுதான்.

நான் பள்ளியில் படிக்கும் காலத்திலிருந்தே நிறையக் கவிதை எழுதுவேன். பாரதியாரைச் சந்திப்பதற்கு முன் பாகவே நூற்றுக் கணக்கான தனிப்பாடல்களும் கீர்த்தனை களும் பழைய பாணியில் எழுதி முடித்திருத்தேன். மயிலம் முருகன் மீது நிறைய பக்திப் பாடல்கள் எழுதியிருந்தேன்.

சுப்பிரமணியர் துதியமுது வெளியாகியிருந்த நேரத்தில் ஒருநாள் வீட்டுத் திண்ணையில் அமர்ந்து புகைப்பிடித்துக் கொண்டிருத்தேன். மயிலத்திலிருந்து ஒரு பக்தர் கூட்டம் உடம்பெல்லாம் திருநீறிலங்க சைவத் திருக்கோலத்தோடு என் வீட்டு வாசலுக்கு வந்து மிகவும் அடக்கமாக, ''கவி ஞர் கனக. சுப்புரத்தனம் வீட்டில் இருக்கிறாரா?'' என்று கேட்டது. நான் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டுப் புகைச் சுருட்டைக் காலிலே போட்டு அணைத்துவிட்டு எழுந்து நின்று,'' ஏன்? நான்தான்!'' என்று சொன்னேன். வந்த வர்கள் அதிர்ச்சியடைந்தார்கள் என்பது அவர்கள் முகங் களிலிருந்து தென்பட்டது. அவர்கள் என்னை வயது முதிர்ந்த ஒரு சிவனடியார் •கோலத்தில் கற்பனை செய்து கொண்டு வந்திருக்க வேண்டும். என் தோற்றமும் செய லும் அவர்கள் எண்ணி வந்ததற்கு மாறுக இருக்க வேண் டும். கீர்த்திக்கேற்ற மூர்த்தியாக நான் அவர்களுக்குத் தென்படவில்லை. எதுவும் பேசாமல் திரும்பிச் சென்று விட் டனர்.

என்னுடைய பதினாறுவது வயதில் நான் இன்பச் சுவை பொருந்திய லாவணிப்பாட்டு† ஒன்று எழுதியிருந்தேன். அது ஒரு காதலன் தன் காதலியை அங்கம் அங்கமாக வருணித்துப் பாடுவதுபோல் அமைந்தது. கொஞ்சம் வண்டை வண்டையா இருக்கும். ஒரு நாள் பாரதியாரின் வீட்டு மாடிமேல் என் நண்பர்கள் சிலரோடு இருந்தேன். எல்லாரும் 'விடைப் பசங்க'. என் லாவணியை அவர்

†லாவணி என்பது நாட்டுப்புறங்களில் 'டேப்' என்னும் தட்டையை ஒலித்துக்கொண்டு பாடப்படும் ஒருவகைப் பாடல். கும்மியைப்போல் இருக்கும். இன்றும் காமன் பண்டிகைகளில் லாவணி பாடுகிறார்கள்.

களிடம் இசையோடு பாடிக் காட்டிக் கொண்டிருந்தேன். அவர்கள் மெய்மறந்து கேட்டுக்கொண்டிருந்தார்கள். அப் பாடல் முழுதும் இப்போது எனக்கு நினைவில் இல்லை. நினைவில் உள்ள சில வரிகளை மட்டும் பாடுகிறேன். (கவிஞர் பாடினார்)

நீலமலர் தன்னையும்
கோலக்கெண்டை மீனையும்
நிகர்க்குதேஇவள் நேத்ரம்
என்ன காத்ரம்?
நான்எம் மாத்ரம்? — இந்த
வாலிபப்பெண்ணைப் புணர
வேண்டுமே கொக்கோக சாத்ரம்.

ஏக காலத்திலிரு
சூரியன் புறப்பட்டா
எப்படித் தானிருக்கும் ஓது?
அதுபோல் காதில்
இருப்ப தேது?

ஒப்பாலாயிரம் பெறும்
கொப்பு முதல் நகைகள்
இழையாலாயிரம் பெறும் தாவணி
மற்றும் பூவணி — கனக
சுப்பு ரத்னம் சொன்னான்
அடியா லாயிரம்பெறும் லாவணி.

இந்தப் பாட்டில் ஈடுபட்டு நான் பாடிக்கொண்டிருந்த போது பாரதியார் மாடிப்படியேறி வந்தது எங்களுக்குத் தெரியாது. வந்தவர் லாவணி முடியும் வரையில் மாடிப் படியிலேயே நின்று கேட்டுக் கொண்டிருந்தார். பாட்டு முடிந்ததும் 'சபாஷ்' என்று கூறிக்கொண்டு மேலே வந்தார். என்னை முதுகிலே தட்டிக்கொடுத்து, "சுப்புரத்தனம் உன்பாட்டிலே நிறைய விஷயம் இருக்குது" என்று கூறிப்

பாராட்டினர். வெட்கம் கலந்த நாணத்தோடு நான் சிரித்தேன்.

□

பாரதியாரைப் பற்றிப் பாவேந்தர் வாயிலிருந்து நான் அறிந்து கொண்ட செய்தி இவ்வளவுதான். ஆனல் பாரதி யாரின் வாழ்க்கை வரலாற்றை எப்படியாவது விரைவில் எழுதிமுடித்துவிட வேண்டுமென்று அடிக்கடி சொல்லிக் கொண்டிருந்தார்.

பாவேந்தர் இறந்தவுடன் அடுத்தவாரம் வெளியான ஆனந்தவிகடனில், அவர் பாரதியாரைப் பற்றி எழுதிய கட்டுரை ஒன்று வெளியாகியது. பாவேந்தரின் படத்தோடு அக்கட்டுரையை வெளியிட்டிருந்தார்கள்; புதுவையில் இருந்த பாரதியின் குடும்ப வாழ்க்கையை அதில் மிக அழ காக எழுதியிருந்தார். சென்னைத் தியாராகய நகர் இரா மன் தெருவில் பாவேந்தர் வாழ்ந்தபோது, ஆனந்த விக டன் ஆசிரியர் திரு. எஸ். எஸ். வாசனே ஒரு முறை நேரில் வந்து பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றைத் தொடர்ந்து விகடனில் எழுதும்படி கேட்டுக் கொண்டாராம். பாவேந்த ரும் இசைந்து ஒரு கட்டுரை அனுப்பிவைத்தார். பிறகு என்ன நினைத்தாரோ தொடர்ந்து எழுத மறுத்து விட் டார். தொடர்ந்து எழுதியிருந்தால் பாரதி வரலாற்றின் நுட்பமான சில பகுதிகள் நமக்கு வெளிச்சமாகியிருக்கும். பாரதி வரலாற்றை ஆயிரம் பேர் எழுதியிருக்கலாம். இன் னும் எழுதலாம். ஆனல் ஒரு கவிஞன் தான் மதித்துப் பழ கிய மற்றொரு பெருங்கவிஞனைப் பற்றி எழுதும் எண்ண ஓட்டங்கள் மற்றவர் சிந்தனைக்கு எட்டாதவையாவும், படிப்போர்க்கு வியப்பூட்டுபவையாவும் இருக்கும். அத்த கைய வரலாற்றுக் காவியம் நமக்குக் கிட்டாமல் போனது பேரிழப்புத்தான். தாம் ஆனந்த விகடனில் எழுத மறுத்து விட்ட செய்தியைப் பாவேந்தரே ஒருமுறை என்னிடம் கூறினர். 'ஏன் மறுத்து விட்டீர்கள்?' என்று நான் கேட்ட தற்கு முகத்தைச்சுளித்துக் கொண்டாரே தவிர மறுமொழி

ஏதும் கூறவில்லை. இன்றுள்ள அரசியல் தலைவர்களும், கவிஞர்களும் கல்கி, குமுதம், ஆனந்த விகடன் போன்ற விற்பனை மிகுந்த இதழ்களில் கடைசிப்பக்கம், ஒரு பக்கம் அரைப்பக்கம் எழுதக் கிடைத்தால் போதுமென்று ஏங்கும் நிலையைக் காண்கிறோம். ஆனால் வீடுதேடி வந்த இளம்பரத்தைப் பாவேந்தர் துச்சமாக மதித்தது வியப்பிற்குரியதன்றோ?

○

நினைவில் நின்றவை

4

நான் சென்னையில் கல்லூரி மாணவனாக இருந்த ஆண்டு கி. பி. 1961 — 62. அப்போது பாவேந்தருக்கு 72ஆம் வயது நடந்து கொண்டிருந்தது. அந்த வயதிலும் அவர் நல்ல உடல் நலத்தோடு இருந்தார்; சுறுசுறுப்போடும் இயங்கிக்கொண்டிருந்தார். அவர் தோற்றம் பார்த்த வுடன் உள்ளத்தில் நிலைத்துவிடும். கம்பீரமான தோற்றம். அவர் உயரம் 5' 10" இருக்கும். கொஞ்சம் முற்றிய மாந் தளிர் மேனி. உருண்டையான பெரிய முகம். மிரட்டும் பார்வை. அடியகன்ற அவருடைய பெரிய மூக்கின்மீது பழைய மோஸ்தர் வட்ட ஃப்ரேம் போட்ட கண்ணாடி ஏ போதும் உட்கார்ந்திருக்கும். சிந்தனையாளர்களு உரிய பரந்த நெற்றிமேடும் தலைமயிரும் சந்திக்குமி

மட்டும் லேசான நரை. ஆனால் தலைமுடி அடர்த்தியாகவும் கறுப்பாகவும் இருந்தது.

இளமையிலிருந்தே மற்களப் பயிற்சியால் திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கட்டுடம்பு. அவர் புறங்கழுத்து பொலி காளையின் திமிலைப்போல் எடுப்பாக இருக்கும். சட்டை யணியாமல் வெற்றுடம்போடு இருக்கும் நேரத்தில் கோதாவில் இறங்கத் தயாராய் இருக்கும் மல்யுத்த வீர னைப்போல் காட்சியளிப்பார். திரண்ட பலாப்பழ வயிற் றுக்குக் கீழே வேட்டியைத் தாழ இறக்கி விட்டுப் பிரம்பு பின்னிய சாய்வு நாற்காலியில் ஓய்வாகப் படுத்திருக்கும் அவர் தோற்றம், காண்போருக்குச் சென்னை அண்ணா மேம்பாலத்தை (Fly over) நினைவுபடுத்தும். வயதின் காரணமாக ஏற்படும் சுருக்கம் அவர் மேனியின் மீது இன் னும் கால்வைக்கவில்லை.

பாவேந்தர் தோற்றத்தில் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டி யது அவர் மீசை. பாவேந்தரின் மேலுதட்டுக்கும் மூக்கிற் கும் இடைப்பட்ட தூரம் 1½ அங்குலம் இருக்கும். எனவே அவர் மீசை மிகப் பெரிதாகவும், ஒரு கறுப்பு வெளவால் தன் இறக்கைகளை விரித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பது போலவும் இருக்கும். பாவேந்தர் மீசையின் மீது அதிக கவனம் செலுத்துபவர். சென்னையிலிருந்தபோது வயதின் காரணமாக அவர் மீசை உதிர்ந்து அடர்த்தி குறைந்து காணப்பட்டாலும், அதை ஒழுங்காக வெட்டிவிட்டுப் பேணிக் காத்து வந்தார்.

பாவேந்தரின் மகனை கோபதி (மன்னர் மன்னன்) தந்தை யாரின் உருவ அமைப்பை அப்படியே ஏற்றுப் பிறந்திருக் கிறார். ஆனால் பாவேந்தருக்குப் பக்கத்தில் அவரைக் கொண்டுபோய் நிறுத்தினால், ஒரு பீரங்கிக்குப் பக்கத்தில் துப்பாக்கியை நிறுத்தியதுபோல்தான் இருக்கும். பாவேந் தரின் பார்வையும், அங்க அசைவுகளும் அவருடைய மூத்த மகளான சரசுவதியிடத்தில் அப்படியே காணப்படு

கின்றன. சிங்கம் நடக்கும்போது தன் தலையை இரண்டு பக்கமும் கம்பீரமாகத் திரும்பிப் பார்த்துக்கொண்டே நடக்கும். பாவேந்தர் எதிரில் இருப்பவர்களிடம் எதைப் பற்றியேனும் ஆழ்ந்து பேசும்போது தம் தலையை இரண்டு பக்கமும் திருப்பிப் பார்த்துக் கொண்டே பேசுவார். இந்த அம்மையாரும் அப்படியே பேசுகிறார்.

பாவேந்தர் சென்னையில் வாழ்ந்தபோது, அவருடைய பொருள் வருவாய் எப்படியிருந்தாலும் மிகவும் வசதியோடு தான் வாழ்ந்தார். குடியிருக்க எல்லா வசதிகளோடுங் கூடிய வளமனை. கொஞ்சநாள் சொந்தமாகக் கார் கூட வைத்திருந்தார். எடுபிடிக்கு ஆட்களும் உண்டு. சத்திரம் போல நாள்தோறும் நான்கைந்து பேருக்காவது வீட்டில் சமாராதனை நடந்து கொண்டிருக்கும். நிலையான விருந்தாளிகளாக இரண்டுபேர் எப்போதும் இருப்பார்கள்.

நான் சென்னையில் இருந்தபோது பாவேந்தரின் மனைவியார் பழனியம்மாள் பெரும்பாலும் புதுவையிலேயே இருந்தார்கள். தாயாரம்மாள் என்ற சமையல்காரியும், அவருக்கு ஒத்துழைக்க பட்டு என்ற வேலைக்காரியும் வீட்டில் இருந்தனர். தாயாரம்மாளுக்கு வயது ஐம்பதிருக்கும்; சுவையாகச் சமைப்பார். பாவேந்தரைத் தேடி யார் எந்த நேரத்தில் வந்தாலும், அவர் என்ன சமைக்கச் சொல்கிறாரோ அதைச் சமைக்க வேண்டும். நாள்தோறும் புலால் உணவில்லாமல் அவரால் இருக்க முடியாது. குறைந்தது மீனும் கத்தரிக்காயுமாவது குழம்பு வைக்க வேண்டும். இறால் (Prawn) தொக்கு அடிக்கடி செய்யச் சொல்லி விரும்பிச் சாப்பிடுவார். அவருக்குப் பருப்புரசம் பிடிக்காது. நிறைய மிளகை உடைத்துப்போட்டுக் கறிவேப்பிலை மிதக்கக் காரமாக வைக்கும் மிளகுரசம்தான் பிடிக்கும். மூன்று நேரமும் புலால் உணவே உண்டாலும் அதைச் செரிக்க வைக்கும் உடல்வளம் அவருக்கு 72ஆவது வயதிலும் இருந்தது வியப்பிற்குரியது.

பாவேந்தர் யார் வீட்டில் விருந்து சாப்பிட்டாலும், சுவை யாக சமைத்துப் போட்ட அவ்வீட்டுப் பெண்களைப் பாராட் டாமல் வருவதில்லை. அதுவும் இன்ன பொருள் இப்படிச் சுவையாக இருந்தது என்று விமர்சனம் செய்யாமல் வர மாட்டார். இந்தச் செய்தியைப் பாவேந்தரோடு தொடர்பு கொண்ட பல நண்பர்களின் வீட்டில் சொல்லக் கேள்விப் பட்டிருக்கிறேன்.

வீட்டில் இருக்கும்போது லுங்கியும் முண்டா பனியனும் போட்டிருப்பார். வெளியில் கிளம்பும்போது வேட்டியும் ஸ்லாக் சர்ட்டும் அணிந்து கொள்வார். கூட்டங்களுக்குச் செல்லும்போது வெள்ளை மல்ஜிப்பாவும் துண்டும் அணிந்து செல்வார். முக்கியமான விழாக்களுக்குச் செல் லும்போது பூப்போட்ட காஷ்மீர் வுல்லன் அங்க வஸ்தி ரத்தை மூலைவாக்கில் மடித்துக் கழுத்தின் இரண்டு பக்க மும் தொங்கும்படி போட்டுக் கொள்வார். இந்தக் கோலம் இவருக்கு மிகவும் பிடித்த திருக்கோலம். தலைக்குப் பூசிக் கொள்வதற்காக இவருக்குப் பெங்களூரிலிருந்து ஒருவர் தாழம்பூத் தைலம் கொண்டுவந்து கொடுத்துக் கொண் டிருந்தார்.

பாவேந்தர் நண்பர்களிடத்தில் குழந்தையைப் போல் ஒட் டுறவோடு பழகுவார்; அதே சமயம் குழந்தையைப் போல் எந்த நேரமும் அவர் கோபித்துக் கொள்ளுவார். பாவேந் தரைப் பார்க்க வந்தவர்களும், அவரிடம் முன்னுரை— வாழ்த்துப்பா வேண்டி வந்தவர்களும் பல வேறுபட்ட அனுபவங்களை என்னிடம் கூறியிருக்கிறார்கள். அவை யெல்லாம் பாவேந்தர் அப்போதிருந்த மனநிலையைப் பொறுத்தது. அவருக்கு யாரையாவது பிடித்துவிட்டால், அவர்மீது அளவு கடந்த பரிவைக்காட்டித் திக்குமுக்காடச் செய்வது அவர் வழக்கம். நான் அவரோடு தொடர்பு கொண்டிருந்த மூன்றாண்டுகளில் ஒரே ஒரு முறை தான் என்னிடம் கோபித்துக்* கொண்டார்.

* இராசிபுரம் கவிஞர் மாநாட்டுக்கு வரும்போது; இந் நிகழ்ச்சி பற்றிப் பின்னால் குறிப்பிட்டிருக்கிறேன்.

பாவேந்தரிடம் அடிக்கடி காணப்படும் ஒரு பழக்கமுண்டு. யாராவது வியப்பிற்குரியதாக ஒரு செய்தியை அவரிடம் கூறினால் உடனே தமது கைக்கையின் ஆட்காட்டி விரலை மூக்கின் நுனியின் மேல் கொண்டு போய் வைத்துக் கொள்வார். உணர்ச்சி வசப்பட்டு மற்றவர்களிடம் பேசும்போது தமது உள்ளங்கையை மேலிருக்கும்படி திருப்பிக்கொண்டு, ஆள்காட்டி விரலை மட்டும் நீட்டித் தமக்கு முன்னாலிருக்கும் மேசை விளிம்பில் வைத்துக் கொண்டு பேசுவார்.

தாகூரிடம் ஒரு விநோதமான பழக்கமுண்டு, அவருடைய கையெழுத்துப் படியில் மைசிந்தி விட்டால், அல்லது எழுத்தில் பிழை ஏற்பட்டு விட்டால் அதை ஓர் ஓவியமாக மாற்றிவிடுவார். அவரைப் போலவே கையெழுத்துப் படியில் மைசிந்தி விட்டால் அதைப் பூவாக மாற்றும் பழக்கம் பாவேந்தருக்கும் உண்டு. அவ்வாறு அவர் மாற்றிய கையெழுத்துப்படி† யொன்று என்னிடம் இருக்கிறது.

பாவேந்தரின் ஏகாந்தத்தை யாராவது திடீரென்று சென்று கலைத்தாலோ, அவரை அநுவசியமாகச் சீண்டி விட்டாலோ அவருக்குக் குபீரென்று கோபம் வரும். அப்படி இரண்டொரு நிகழ்ச்சியைப் பார்த்திருக்கிறேன். சென்னை இராமன் தெருவில் அவர் குடியிருந்த பங்களாவின் உரிமையாளர் ஒரு ரெட்டியார்; வசதியானவர்; பாவேந்தரின் மீது மிக்க மதிப்புடையவர். ஒரு நாள் அதிகாலையில் ஆழ்ந்த சிந்தனையோடு பாவேந்தர் ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். அன்று சமையற்காரத் தாயாரம்மாள் ஊரிலில்லை. பாவேந்தர் அதிகாலையில் காஃபி அருந்தும் வழக்கத்தை நினைவில் கொண்டு வீட்டுக்கார ரெட்டியார் கையில் சூடான காஃபியோடு பாவேந்தரின் அறையில் நுழைந்தார். அவரைப் பார்த்த பாவேந்தருக்குச் சுரீரென்று கோபம் வந்துவிட்டது. ''என்னைக் கேட்காமல் உங்களை யாரிங்கே காஃபி கொண்டு வரச்

†காண்க: பிற்சேர்க்கை (பாவேந்தர் நடத்திய இலக்கணப் பாடம்)

சொன்னது?'' என்று அதட்டலோடு கேட்டார். ரெட்டியார் முகவாட்டத்துடன் திரும்பிச் சென்று விட்டார்.

பாவேந்தர் குடியிருந்த பங்களா மேன் மாடியில் ஒரு தெலுங்குத் திரைப்படடைரக்டர் குடியிருந்தார். பாவேந்தர் வீட்டில் பணிபுரிந்து கொண்டிருந்த பொன்னடியை அவர் ஏதோ ஒரு காரணத்திற்காகக் கூப்பிட்டுச் சற்றுக் கடுமையான சொற்களைப் பயன்படுத்தித் திட்டிவிட்டார். இதைக் கேட்ட பாவேந்தருக்கு வயதையும் மீறிய பெருஞ் சினம் வந்துவிட்டது. வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு வெளியிலே ஓடிவந்தார். மாடியிலே இருந்த தெலுங்கு டைரக்டரைக் கூவியழைத்து 'இறங்கி வாடா கீழே' என்று போர்க் கோலத்தோடு நின்றார். அவரைச் சமாதானப்படுத்தி உள்ளே அழைத்துச் செல்லப் பெரும் பாடாய்ப் போய்விட்டது.

பாவேந்தர் சென்னையில் வாழ்ந்தபோது வெளியில் எங்கே சென்றாலும் வாடகைக் காரில் (taxi) தான் செல்வது வழக்கம். பாண்டிபஜாருக்குக் கீழே இருக்கும் ராஜகுமாரி திரைப்படக் கொட்டகைக்குச் செல்வதாக இருந்தாலும் பொன்னடியைப் போய் வாடகைக்கார் கூட்டி வரும்படி சொல்லுவார். அப்போது குறைந்த மீட்டர் கட்டணம் எட்டணாதான். அதைக் கொடுத்துவிட்டு இறங்கிக் கொள்வார். தளர்ச்சியின் காரணமாக அவரால் அப்போது அதிகம் நடக்க முடியாது. எங்காவது நானும் அவரும் வெளியில் செல்லும்போது, நான் வாடகைக் காரைக் கூப்பிட்டால் 'வேண்டாம்; எதற்கு வீண் செலவு? ஆட்டோ ரிக்ஷாவில் போகலாம். அது நல்லா காற்றோட்டமா இருக்கும்; ஜிகுஜிகுன்னு போகும்' என்று குழந்தை போலக் கூறுவார். என் கைப்பணம் அதிகம் செலவாகக் கூடாது என்பதற்காக அவர் அவ்வாறு கூறுகிறார் என்பதை நான் அறிந்து கொள்வேன். 'பரவாயில்லை ஐயா! காரிலேயே போகலாம்' என்று நான் வற்புறுத்திச் சொன்னபிறகு ஏறிக் கொள்வார். காரில் எப்போதும்

முன்சீட்டில் காரோட்டிக்குப் பக்கத்தில் தனியாகவே உட்கார்ந்து கொள்வது வழக்கம். தவிர்க்க முடியாமல் எங்காவது மாடிப்படியில் ஏற வேண்டுமானால் 'முருகு, இங்க வா!' என்று சொல்லித் தாங்கலாக என் தோள் மேல் கை போட்டுக் கொண்டு வருவார். பாவேந்தர் எப்போதும் தூய்மையாக இருப்பார். நாள்தோறும் முகத்தை வழித்துக் கொண்டு பளிச்சென்று காட்சியளிப்பார்.

பாவேந்தரின் பொருளாதாரக் கொள்கை திட்டமில்லாதது. கையில் எவ்வளவு பணமிருக்கிறது, எவ்வளவு செலவு செய்ய வேண்டும், என்று அவர் சிந்திப்பதில்லை. நான் அவரோடு நெருங்கிப் பழகிய சில மாதப் பழக்கத்திலிருந்து அவர் எப்போதும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று முடிவுக்கு வந்தேன். அவர் பணத்தை ஒரு பொருட்டாக எப்போதும் மதித்ததில்லை. சென்னையில் அவர் வாழ்ந்தபோது அவர் படுக்கை அறை எப்போதும் திறந்தே இருக்கும். அந்த அறையில் பாதுகாப்பாகப் பொருள்களை வைப்பதற்கு இரும்புப் பீரோவோ, பெட்டியோ கிடையாது. பயணத்தின்போது பயன்படும் ஒரு தோல்பெட்டி (Leather suitcase) மட்டுமே இருக்கும். அதுவும் பூட்டப்படாமல் இருக்கும். ஒருநாள் எதற்காகவோ அதை நான் திறந்தபோது கட்டுக்கட்டாக ரூபாய் நோட்டுகள் இருந்தன. 'என்னய்யா! இவ்வளவு பணம் இதிலே இருக்கிறது' பூட்டாமல் வைத்திருக்கிறீரே?' என்று கட்டிலின் மீதமர்ந்திருந்த பாவேந்தரைக் கேட்டேன்.

"ஏ.....ஏ.....பூட்டணுப்? யசர் எடுக்கரு?'' என்று அசிரத்தையாக விடையிறுத்தார். தேவை ஏற்படும்போது தான் பணத்தைப் பற்றி நினைப்பார். மற்ற நேரங்களில் அதைச் சட்டை செய்ய மாட்டார். பேண மாட்டார்.

திட்டமிட்ட பொருளாதாரக் கொள்கையும் சேமிக்கும் பழக்கமும் அவருக்கிருந்திருந்தால் பல லட்சம் அவர்

வாழ்க்கையில் சேர்ந்திருக்கும். கி.பி. 1946 ஆம் ஆண்டு அவருக்கு நிதியளிப்பு விழாவில் ரூ. 24,500 வழங்கப் பட்டது. அக்காலத்தில் கால் லட்சம் என்பது சாதாரணத் தொகையன்று. கணிசமான பெரிய தொகை. பாவேந்தர் வாழ்ந்த காலத்தில் கவிதை, உரைநடை, நாடகம் என்று கிட்டத்தட்ட 60 நூல்கள் அவர் படைப்புக்களாக வெளி வந்தன. அவற்றுள் மிகவும் குறிப்பிடத்தக்கவை பாரதி தாசன் கவிதைகள் (முதல் தொகுதி), பாண்டியன் பரிசு, எதிர்பாராத முத்தம், அழகின் சிரிப்பு, தமிழியக்கம் என் பன. புதுவைப் பெருமாள் கோயில் தெரு வீட்டை விலைக்கு வாங்கிய நேரத்தில் ஏற்பட்ட பண நெருக்கடி யால் மிகக் குறைந்த தொகைக்கு (ரூ. 4000/- என்று நினைக்கிறேன்) இந்த நூல்களின் பதிப்புரிமையைப் பதிப் பகத்தாருக்கு விற்றுவிட்டார். பிறகு இந்த நூல்களுக் கும் பாவேந்தருக்கும் எந்தவிதப் பொருளாதாரத் தொடர் பும் இல்லை. ஆனால் இந்த நூல்களின் விற்பனையை வேறு எந்தத் தமிழ்க்கவிதை நூலும் எட்டிப் பிடிக்கவில்லை என் பது குறிப்பிடத்தக்கது. பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி அவர் வாழ்ந்த காலத்திலேயே 15 பதிப்புகள் வெளிவந்துவிட்டது. இந்த வெற்றி எந்தத் தமிழ்க் கவிஞனுக்கும் இதுவரை கிட்டவில்லை. இவ்வளவும் நான் எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இந்நூல்களின் விற் பனையில் பாவேந்தர் எவ்வளவு ஏமாளியாக நடந்து கொண்டார் என்பதைக் குறிப்பிடத்தான். தாம் கதை வசனம் எழுதிய வளையாபதி திரைப்படத்தில் சில வரி களை மாற்றி விட்டார்கள் என்பதற்காக மாடர்ன் தியேட் டர்ஸாரின் ரூ. 40,000 ஒப்பந்தத்தைத் தூக்கி எறிந்து விட்டு வந்த செயல் பணவிஷயத்தை அவர் எவ்வளவு லேசாக எடுத்துக் கொண்டார் என்பதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டு.

ஆபத்துக் காலங்களில் எளியவருக்குப் பொருள் கொடுத்து உதவும் தாராள நோக்கும் அவரிடத்தில் உண்டு. பாவேந் தர் சென்னையில் குடியிருந்தபோது வீட்டில் வேலை செய்து

கொண்டிருந்த பட்டு என்னும் வேலைக்காரி தன் மகனுக்குத் திருமண ஏற்பாடு செய்து கொண்டிருந்தாள். திடீரென்று ஒருநாள் அவள் அழுதுகொண்டு பாவேந்தரிடம் வந்தாள். பாவேந்தர் என்ன என்று விசாரித்தார். மகனுடைய திருமணத்துக்காகச் சேர்த்து வைத்திருந்த பணத்தையும் வேறு சில பொருள்களையும் தன்னுடைய குடிசையில் புகுந்து யாரோ திருடிக் கொண்டு போய்விட்டதாகச் சொல்லி அழுதாள். திருமணத்துக்கு முகூர்த்தம் வைத்தாயிற்று. உடனே பாவேந்தர் அவளிடத்தில் நூறு ரூபாயைக் கொடுத்ததோடுகுறித்தபடி திருமணத்தை நடத்தத் தம் பங்களாவையும் ஒழித்துக் கொடுத்தார். படிக்காத அப் பட்டுவிற்குப் 'பாவேந்தர்' என்ற சொல் வாயில் நுழையாது. 'பாவேந்து கொடுத்துது! மகராசன்! நல்லா இருக்கணும்!' என்று கண்ணில் நீர் ததும்ப அடிக்கடி அவள் சொல்ல நான் கேட்டிருக்கிறேன்.

இவர் இரக்க குணத்தையும் தாராள நோக்கையும் பயன் படுத்திக் கொண்டு சிலபேர் இவரிடம் நிரந்தர விருந்தாளிகளாகத் தங்கியிருப்பதுண்டு. அவர் சென்னையில் வாழ்ந்த போது வாட்டசாட்டமான ஓர் ஆள் அவரைத் தேடி வந்தார். உயரமான தோற்றமும், மூக்குக் கண்ணுடியோடும் எடுப்பான முகமும் கொண்ட அவர் பெரிய வசய்ச்சாலக் காரர். சரளமாக ஆங்கிலம் பேசவும் எழுதவும் வல்லவர். பாவேந்தர் கவிதைகளையெல்லாம் ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க வேண்டுமென்றும், உலக அரங்கில் அவர் புகழைப் பரப்ப வேண்டுமென்றும் சரமாரியாகப் பேசினர். தம்மை அனுமதித்தால் உடனிருந்து அப்பணிகளைச் செய்யத் தயார் என்றும் குறிப்பிட்டார். பாவேந்தர் யாரையும் எளிதில் நம்பிவிடும் பழக்கமுடையவர். மாற்றி அணிய வேறு உடைகூட இல்லாத நிலையில் வந்த அவரைப் பாவேந்தர் தம் இல்லத்தில் வைத்துக் கொண்டு உணவும் உடையும் கொடுத்துப் பல திங்கள்கள் ஆதரித்து வந்தார். எங்கு போனாலும் அவரைத் தம்முடைய நேர்

முகச் செயலாளர் (P.A) என்று சொல்லி உடன் அழைத்துச் செல்லுவார். சில சமயம் அவர் காக்கி உடையணிந்து பாவேந்தருடைய மெய்க்காப்பாளர் (Body gaurd) போலவும் செல்வதுண்டு. காலப் போக்கில் அவர் ஒரு 'வெற்றுள்' என்பதை அறிந்துகொண்ட பாவேந்தர் அவரை வெளியேற்றிவிட்டார்.

பத்திரிகைத்துறை என்பது தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் ஒரு குறிப்பிட்ட இனத்தார்க்கே கைவந்த துறையாக நீண்ட காலம் இருந்து வந்ததை யாவரும் அறிவோம். ஒரு பத்திரிகையைத் துவக்கி, வளர்த்து நிலை பெறச் செய்ய வேண்டுமானால் முதலில் அதை நடத்துபவனே விளம்பரமான ஒரு சிறந்த எழுத்தாளனாக இருக்க வேண்டும். இரண்டாவதாக ஒரு சொந்த அச்சகமும் முதலீடும் வேண்டும், மூன்றாவதாகப் பத்திரிகையை மக்கள் நடுவில் விளம்பரப்படுத்தி விற்பனை செய்யும் வாணிபத் தந்திரமும் வேண்டும்.

திராவிட இயக்கம் வளர்ச்சி நிலையில் இருந்தபோது (கி.பி.1940முதல் 1960வரை) நிறைய நாளிதழ்களும், தாளிகைகளும் வெளிவந்தன. ஒவ்வொரு தலைவரும் ஒவ்வொரு பத்திரிகையைத் தமக்கென்று சொந்தமாகத் துவக்கி இழப்பையும் பொருட்படுத்தாமல் நடத்தி வந்தனர். அவற்றுள் விடுதலை, குடியரசு, திராவிடநாடு, முரசொலி, பொன்னி, மன்றம், திராவிடன், தென்றல் ஆகியவை குறிப்பிடத்தக்கவை. அண்ணாவும், கலைஞரும், கண்ணதாசனும் பரபரப்போடு இப்பத்திரிகைகளை நடத்திவந்தனர். எல்லா இதழ்களும் பாவேந்தர் படைப்பை விரும்பி வெளியிட்டன. 1942-43 இல் திராவிட நாட்டில் பாவேந்தர் பாட்டு தொடர்ந்து வரும். அவர் பாடல் எழுதாத வாரத்தில் அவருடைய பழையபாடலைத் தேடி எடுத்துத் திராவிடநாடு வெளியிடும்.

பாவேந்தர் தமிழ்நாட்டிலும் புதுவையிலும் நடைபெற்ற எல்லா அரசியல்-கலை ஏடுகளிலும் எழுதினர். இவர் நண்பர்கள் உதவியோடும், தாமாகவும் சில இதழ்கள் நடத்திவந்தார். தமிழ்நாட்டில் முதன் முதலாகக் கவிதை இதழ் நடத்தியவர் பாவேந்தரே. கி.பி. 1935 இல் வெளியான 'ஸ்ரீ சுப்பிரமணிய பாரதியின் 'கவிதா மண்டலம்' என்ற இதழே அது. முழுக்க முழுக்கக் கவிதையில் வெளிவந்த அவ்வேட்டில் விளம்பரங்கள் கூடக் கவிதையிலே வெளியாயின. திரு. தம்புசாமி முதலியார் என்பவர் அதன் பதிப்பாசிரியர்; பாவேந்தர் ஆசிரியர்.

திரு. நோயல் நடத்திய 'புதுவை முரசு'க்கும் பாவேந்தருக்கும் நெருங்கிய தொடர்புண்டு. பாவேந்தர் பத்திரிகைத் துறைப்பட்டறிவை இந்த இதழில் தான் கூர்மையாக்கிக் கொண்டார். பாவேந்தரின் நிதியளிப்பு விழா முடிவுற்றதும் சூட்டோடு சூடாக 1947 ஆம் ஆண்டு குயில் திங்களிதழ் நூல்வடிவில், உயர்ந்த தாளில் வண்ணப் படங்களோடு வெளிவந்தது. அத்தகைய ஒரு கவிதை இதழ் தமிழில் மறுபடித் தோன்றவே இல்லை; பாவேந்தராலும் வெளியிட முடியவில்லை.

பாவேந்தரின் முதல் குயில் சில இதழ்களோடு தன் குரலை ஒடுக்கிக் கொண்டது. குயிலின் உரிமை காரணமாகப் பாவேந்தருக்கும் T.N. இராமனுக்கும் ஏற்பட்ட வழக்கும் பின்னர் குயில் பாவேந்தரை வந்தடைந்ததும் யாவரும் அறிந்த செய்திகள். பிறகு பத்தாண்டுகள் கழித்துக் குயில் மீண்டும் 1.6.58 லிருந்து புதுவைச் சோலையில் கூவத் தொடங்கியது. அதன் இசை தொடர்ந்து இரண்டாண்டு ஏழு திங்கள் தமிழ் இலக்கிய உலகில் ஒலித்துக் கொண்டிருந்தது. பாவேந்தர் பாண்டியன் பரிசைத் திரைப் படமாக்கும் முயற்சியோடு சென்னை வந்ததும் குயில் நின்று விட்டது. மீண்டும் 15-4-62 இல் சென்னையிலிருந்து துவங்கியது. எட்டு இதழ்கள் வெளிவந்தன. பாவேந்தரின் பத்திரிகைத் துறை அனுபவம் இத்துடன் முற்றுப்

பெற்றது. இக்குயிலைப் பாவேந்தர் வருவாய் கருதி நடத்தவில்லை; ஒரு கொள்கை வெறியோடு நடத்திவந்தார். இக்குயில் ஏடு அன்றைய படித்த, தமிழ் ஆர்வமிக்க இளைஞரிடையே கவிதை உணர்வுடையவரைத் தேர்ந்தெடுத்து ஊக்கியது. பாரதிதாசன் பரம்பரையை வளர்த்தது. பாவேந்தரின் மன உளைச்சலுக்குக் குயில் சிறந்த வடிகாலாகவும் விளங்கியது. அவர் பேனா முனையில் காயம்படாத அரசியல் தலைவர்களோ, தமிழறிஞர்களோ புதுவையிலும் தமிழகத்திலும் இல்லையென்று சொல்லலாம். அவருடைய துணிச்சல் எல்லையில்லாதது. அவரைப் போல் வேறு யாரும் அப்படி எழுதித் தமிழ்நாட்டில் தப்ப முடியாது. அவர் குயிலில் எழுதிய உரைநடைத் தொடர்கள் நறுக்கிய கருப்புத் துண்டுகள்; செய்யுளை விடச் செறிவானவை. அவருடைய கூரிய சொற்கள் சுளீரென்று குதிரைச் சாட்டை உடம்பின் மீது வீழுவது போல் இருக்கும்.

கவிஞர்களின் படைப்பாற்றலைப் பற்றி உலகில் இரு வேறு பட்ட கருத்துக்களைக் கூறுவர். சிறந்த கவிஞர்களின் படைப்புக்கள் அவர்களுடைய வாழ்க்கையின் முற்பகுதியிலேயே முற்றுப்பெற்று விடுகின்றன என்பது ஒரு சாரார் கருத்து. முதிர்ந்த நிலையிலும் உயர்ந்த படைப்புக்கள் தோன்றுவதுண்டு என்பது மற்றையோர் கருத்து. கீட்ஸ் தமது 24 ஆம் வயதிற்குள் இறவாத இலக்கியங்களை எழுதிவிட்டு இறந்தான். ஷெல்லி தமது 28 ஆம் வயதுக்குள் உலகப் புகழ் பெற்ற புரட்சிக் கவிதைகளை எழுதி முடித்தான். 30 ஆம் வயதுக்குள் பைரனின் உயர்ந்த படைப்புக்கள் வெளிவந்து விட்டன. நம் நாட்டுப் பாரதியும் தமிழ்க்கவிதைத் துறையில் மாபெரும் புரட்சிகளைச் செய்துவிட்டுத் தமது 39 ஆம் வயதில் உயிர் நீத்தார்.

ஆனால் கெதே தமக்கு உலகப்புகழைச் சேர்த்த மாகாவிய மான 'பாஸ்து'வைத் தமது முதிர்ந்த வயதான 80இல் எழுதி முடித்தார். அவர் தமது 74ஆம் வயதில் ஒரு 17

வயதுப் பெண்ணை மணக்க முடியாத வேதனையில் உணர்ச்சி வசப்பட்டு எழுதிய காதற்கவிதை தான் ஜெர்மானிய இலக்கியத்தில் சிறந்த காதற் கவிதையாக இன்றும் மதிக்கப்படுகிறது.† மில்டன் தமது அமரகாவியமான 'சுவர்க்க நீக்கத்தை' வயது முதிர்ந்து கண்ணிழந்த நிலையிலே எழுதி முடித்தார்.

பாவேந்தர் நிலை எப்படி? வயது ஏற ஏற ஒரு கவிஞனது படைப்பாற்றல் குறைந்து கொண்டு வருவதாகக் கூறுகிறார்களே! பாவேந்தரிடத்தில் அக்கூற்றுப் பொய்யாகிறது. அவருடைய உயர்ந்த படைப்புகள் (Masterpieces) எல்லாமே நாற்பது வயதுக்கு மேல் எழுதப்பட்டவை. சாகும் வரையிலும் அவர் உணர்வுகள் மிகக் கூர்மையாக இருந்தன. பெரியார், இராஜாஜி ஆகியோரின் மூளையைப் போல் இவர் மூளையும் சாகும்வரை ஓர் சிந்தனைப் பட்டறை. உயிர் ஓயும் வரையில் பாவேந்தர் ஓயாமல் எழுதிக் கொண்டிருந்தார். தமது முதிர்ந்த வயதில் எவ்வளவு இளமையுணர்ச்சி பொங்க அதே சமயம் நுட்பத்தோடு கவிதை எழுதியுள்ளார் என்பதைப் படித்துப் பாருங்கள்:

---

†Goethe was now seventy-four. He was more affable than he had been in middle age, more gracious and more cordial.....At Marienbad Goethe found a girl of seventeen, Ulrike Von Leventzov, whose acquiantance he had made two years before. She was winning and graceful. He had found her attractive then, he had found her more attractive now; and, indefatigable amorist as he was, he fell violently in love with her. Ulrike was flattered by the attentions of this great and famous man and certainly found him fascinating. He proposed marriage to her, and it looks as though she didnot refuse him, since he wrote to his family (to their dismay) to announce that marriage would shortly take place. But Ulrike's mother refused to consent to a match which, if she had any sense, must have seemed to her preposterously ill-assorted. Goethe was affended, unhappy and deeply mortified. He left Marienbad. In the carriege on the way home he wrote a poem, *Elegie*, in which he described the emotion to which his love for Ulrike had given rise and his passionate regret for what he had lost.

—W. Somerset Maugham in Points of View.

இளமையின் விளக்கம்:

சாவெப் படிஇருக்கும் சாற்றென்ருள்! நாம்பிரிந்தால்
நோவெப் படிஇருக்கும் நோக்கென்ருள்—மேவுதமிழ்
எவ்வா றினிக்கும்என்ருள். எட்டிஇழுத் தணைத்தே
இவ்வா றினிக்கும்என்ருன் சேய்.‡

'பாவேந்தர் சாதாத்துண்டு போட்ட வரையில் எழுதிய கவிதைகள் நன்ருக இருந்தன. சரிகைத்துண்டு போட்ட பிறகு எழுதிய கவிதைகள் நன்ருக இல்லே' என்று ஒரு நண்பர் என்னிடம் அடிக்கடி கூறுவதுண்டு. 'நல்ல கவிதை வரவேண்டுமானுல் வறுமை வேண்டும். பாரதி தாசனிடத்தில் நிறையப் பணத்தைக் கொடுத்து அவரைப் பாட விடாமல் செய்கிறீர்கள்' என்று பாவேந்தருக்கு நிதி யளித்த காலத்தில் பெரியார் சில நண்பர்களிடத்தில் குறிப்பிட்டாராம். வாழ்க்கை வசதியும் வயது முதிர்ச்சி யும் நல்ல கவிதைக்கு இடையூறுகள் என்பதை என்னுல் ஒத்துக் கொள்ள முடியவில்லே. வயது முதிர்ச்சியால் அறிவு நுட்பமாகிறது; படைப்பாற்றலும் குறைவதில்லே. ஆனுல் ஐம்பது வயதுக்கு மேல் பொதுவாக எல்லாருக்கும் வாழ்க்கைச் சிக்கல்கள் அதிகமாகின்றன. மனச்சுமை அழுத்துகிறது. ஊன்றிச் சிந்திக்க (Concentration of mind) வாய்ப்புக் குறைகிறது. ஆனுல் பாவேந்தர் சிக் கல்களுக்கு நடுவிலும் சிந்தித்தார்.

பெரும்பாலும் தமிழ்ப்புலவர்களில் சிலர் இயற்றமிழோடு நின்று விடுவர்; சிலருக்கு இசைத்தமிழில் மட்டுமே ஈடு பாடு இருக்கும்; வேறுசிலர் இசை நாடகத்தமிழில் ஈடு பாடு கொண்டிருப்பார். பாரதி கூட இயல், இசை இரண் டிலுமே அதிக கவனம் செலுத்தினர். நாடகத் துறைப் பக்கம் செல்லவில்லே. ஆனுல் பாவேந்தருக்கோ முத்தமி ழிலும் ஈடுபாடு இருந்தது. இளமையிலிருந்தே இவருக்கு

‡29—12—56 குயிலில் எழுதியது.

நாடகப்பித்து இருந்தது. பள்ளியில் ஆசிரியராகப் பல ஊர்களிலும் இருந்த போது மாணவர்கள் நடிப்பதற்காக நிறைய நாடகங்கள் எழுதியிருக்கிறார். இவர் தமது மக்களான சரசுவதியும் கோபதியும் நடிப்பதற்காக வென்றே கவிதை நாடகம் எழுதியிருக்கிறார்.

இவர் எழுதியுள்ள 'இரணியன் அல்லது இணையற்ற வீரன்' என்ற நாடகம் கி.பி. 1948 ஆம் ஆண்டு தமிழக அரசினால் தடை செய்யப்பட்டது, 5-9-48இல் காஞ்சி சீர்திருத்த நாடக சபையினர், வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த திருவத்திபுரத்தில் இத்தடையை மீறி நாடகம் நடத்தினர். அன்று பிற்பகல் காவல் துறையினர் 'இந்நாடகம் தடை செய்யப்பட்டிருக்கிறது; பொது மக்கள் இதனைப் பார்க்கக் கூடாது' என்று தண்டோரா போட்டு விளம்பரம் செய்தனர். என்றாலும் நாடகம் பார்க்க ஐயாயிரம் பேர் கூடிவிட்டனர். காவல் துறையினர் வேடமிட்டிருந்த நிலையில் அப்படியே நடிகர்களைக் கைது செய்தனர்.

ஒரு முறை சென்னையில் இந்நாடகத்தை நடத்துவதற்காகப் பாவேந்தர் முயற்சி செய்து வந்தார். புதுவையிலிருந்து பள்ளி விடுமுறை நாட்களில் சென்னை சென்று ஒத்திகை நடத்திவிட்டு வருவாராம். இவ்வொத்திகை சென்னையில் அண்ணாப்பிள்ளை தெருவில் நடந்தது. அப்போது நாடகத்தில் பங்குபெற்று நடிப்பதற்காகத் திருவாளர்கள் குருசாமி.‡ திருவாசகமணி, திருமதி சத்தியவாணி முத்து ஆகியோர் பாவேந்தரிடத்தில் பயிற்சி பெற்றனராம்.

கி.பி. 1944ஆம் ஆண்டில் பாவேந்தரே சில நண்பர்களின் துணையோடு ஒரு நாடகக் குழுவை அமைத்து 'இன்ப இரவு' என்ற நாடக நிகழ்ச்சியை நடத்தினார். பாவேந்தரின் இயல், இசை, நாடகப் படைப்புகள் அதில் இடம்

‡திரு. குருசாமி இரணியன்; திருவாசகமணி பிரகலாதன்.

பெற்றனர். பொன்னி ஆசிரியர் முருகு சுப்பிரமணியமும் நாமக்கல் மு. செல்லப்ப ரெட்டியாரும் நாடகக் குழுவின் பொறுப்பாளர்களாக இருந்தனர். சென்னையில் இருந்த போது தமது 70 ஆம் வயதிலும் தேர்தல் பிரசார நாடகத் துக்குப் பயிற்சி கொடுத்துக் கொண்டிருந்தார்.

இளமையிலிருந்தே இவரிடத்தில் பொதிந்திருந்த நாடக ஈடுபாடே இவரைத் திரைப்படத் துறைக்கு இழுத்துச் சென்றது. முதன்முதலாகப் பாவேந்தர் படத்துறையில் நுழைந்தது 1938 ஆம் ஆண்டு. சேலம் மோகினி பிக்சர் சார் குழலிசை மாமன்னர் திருவாவடுதுறை இராசரத் தினத்தைக் கதாநாயகனாகப் போட்டுக் 'கவிகாளமேகம்' என்ற படத்தை எடுத்தனர். அதற்குத் திரைக்கதை, வச னம், பாடல் எல்லாமே பாவேந்தர் தாம் எழுதினார். ஏறக் குறைய இதே காலத்தில்தான் தம் நண்பர் வ.ரா. வின் 'இராமானுசர்' என்ற படத்துக்குப் பாடல்கள் எழுதவும் ஒப்புக் கொண்டார். 'பாலாமணி அல்லது பக்கரத் திரு டன்' என்ற படத்திற்கும் ஒரு பகுதி வசனம் எழுதினார். இத்துடன் இவர் படத்துறை வாழ்க்கையின் முதற்கட்டம் முற்றுப் பெற்றது.

பிறகு கி.பி. 1947 முதல் 1953 வரை ஆறு ஆண்டுகள் திரைப்படத் துறையில் பாவேந்தர் சுறுசுறுப்போடு இயங்கிக் கொண்டிருந்தார். அபூர்வ சிந்தாமணி, சுபத்ரா, சுலோசனை, பொன்முடி, வாலியாபதி, ஆகிய ஐந்து படங் களும் ஆண்டுக்கொன்றாக சேலம் மாடர்ன் தியேட்டர்சா ரால் தொடர்ந்து வெளியிடப்பட்டன. இந்த நான்கிற் கும் பாவேந்தர் திரைக்கதை வசனம் எழுதினார்; சில பாடல்களும் எழுதினார். அதன் பிறகு திரைப்படத் துறை யிலிருந்து ஒதுங்கிக் கொண்டார். அவருடைய இசைப் பாடல்கள் அவ்வப்போது சில திரைப்படங்களில் எடுத்தா ளப்பட்டன.

பிறகு 1960 ஆம் ஆண்டு திரைப்படத் துறை இவரை மீண்டும் பற்றிக் கொண்டது. புதுவையிலிருந்து இவர்

வெளியிட்டுக் கொண்டிருந்த குயில் 13-12-60 இதழில் பாரதிதாசன் பிக்சர்ஸ்' பற்றிய அறிவிப்பு வெளியாகியது. 20-12-60 இதழில் 'பாண்டியன் பரிசு' திரைப்பட விளம் பரம் வெளியாகியது. பாவேந்தர் புதுவையிலிருந்து தம் குடியிருப்பைச் சென்னைக்கு மாற்றிக் கொண்டார்.

கி.பி. 1961-62 ஆம் ஆண்டில் நான் மாணவனாகச் சென் னையில் இருந்தேன். பாவேந்தர்பால் எனது சென்னைத் தொடர்பு 1961 ஆம் ஆண்டின் இறுதியில் ஏற்பட்டது. பாவேந்தர் குடியிருந்த இராமன் தெரு பங்களாவை முதன்முதலாக நான் அடைந்தபோது என்னை வரவேற் றது 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' என்ற பெரிய விளம்பரப் பலகைதான். நான் சென்னையில் அவரோடு பழகிய நாட் களில் படம் பிடிப்பதற்காக அவர் மேற்கொண்ட முயற்சி களைப் பற்றி நண்பர்கள் கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் அம்முயற்சியைப்பற்றிய முழுமையான வரலாறு எனக்குத் தெரியாது. நான் அவரைச் சந்தித்தபோது தாம் மேற் கொண்டிருந்த படப்பிடிப்பு முயற்சியில் ஏமாற்றமும் சலிப்பும் கொண்டிருந்த பாவேந்தரைத்தான் பார்த்தேன். நான் அறிந்திருந்த குறைவான செய்திகளிலிருந்து, படம் பிடிப்பதற்காகப் புதுவை வீட்டின் மீது பெருந் தொகை கடன் வாங்கி வந்திருந்தாரென்றும், அத் தொகையை வீணுகச் செலவழித்து விட்டு உள்ள அமைதி யில்லாமல் வருந்திக் கொண்டிருந்தாரென்றும் தெரிந்து கொண்டேன். அவரிருந்த உள்ள நிலையில் அதைப் பற்றிக் கேட்டால் வருந்துவார் என்று எண்ணி நான் எது வும் கேட்கவில்லை. அந்த நிலையிலும் படம் பிடிக்க வேண் டும் என்ற ஆசை அவர் உள்ளத்தை விட்டு நீங்கவில்லை.

பாரதிதாசன் பிக்சர்ஸின் சார்பில் 'பாண்டியன் பரிசு' படப்பிடிப்புத் துவக்க விழா ஆடம்பரமாக நடைபெற்றது என்றும், அன்றைய முதலமைச்சர் காமராசர் விழாவில் கலந்து கொண்டார் என்றும் கேள்விப் பட்டேன். நான் கூட பாவேந்தரோடு நடிகர் சிவாஜிகணேசன் இல்லத்

துக்கு ஒரிரு முறை சென்றதுண்டு. என்னைக் காரிலேயே உட்காரும்படி கையமர்த்திவிட்டு அவர் மட்டும் வீட்டுக் குள் செல்வார். அவர் உள்ளே கால்டி எடுத்து வைத்த தும் வரவேற்பு பலமாக இருக்கும். சிற்றுண்டியும் நடக் கும். ஆனால் சோர்ந்த முகத்தோடு திரும்பிவருவார்.

'பாண்டியன் பரிசு' பெரிய அளவில் திரைப்படமாக ஆக்கப் பட வேண்டும் என்று பாவேந்தர் விரும்பினார். அதில் நடிகர்கள் சிவாஜிகணேசன், எம். ஆர். ராதா, சரோஜா தேவி ஆகியோர் நடிக்க ஏற்பாடாகியிருந்தது. இயக்குநர் பீம்சிங் படத்தை இயக்க ஒப்புக் கொண்டிருந்தார். பாண் டியன் பரிசுப்படத்திற்கான இயற்கைக் காட்சிகளை மைசூ ரில் எடுக்க வேண்டுமென்று பாவேந்தர் விரும்பினார்; அப் படத்தில் வரும் போர்க் காட்சிகள் சிறப்பாக இருக்க, அழகிய பந்தயக் குதிரைகளைப் பயன் படுத்த வேண்டும் என்று பீம்சிங்கிடம் கூறினார். பாவேந்தரின் பெரிய திட் டத்தையும் சுருங்கிய கையிருப்பையும் மோப்பம் பிடித்து அறிந்து கொண்ட படத்துறை நண்பர்கள் இவரைப் பார்த் தால் ஒதுங்கிச் செல்லத் தொடங்கினர். 'வரலாற்றுப் படம் பிடிக்க நிறையச் செலவாகும்; ஏதாவது சமூகப் படம் எடுங்கள்; ஒத்துழைக்கிறோம்' என்று சொல்லி ஓர் ஆங்கில நாவலையும் இவர் கையில் திணித்து விட்டுச் சென்று விட்டனர். அதன்பிறகு அந்நாவலைத் திரைக் கதையாக்கி அதற்கு வசனமும் எழுதி முடித்தார் பாவேந் தர். எதை எழுதி என்ன பயன்? நடிகர்கள் வீடுகளுக்கு நடந்து நடந்து கால் ஓய்ந்ததுதான் மிச்சம்.

தமிழ்நாட்டுப் படத் துறைக்காரர்கள் செப்பிடு வித்தைக் காரர்கள். செப்பிடு வித்தை தெரிந்தவன் தான் படத் துறைக்குப் போகவேண்டும். பாவேந்தருக்குச் செப்பிடு வித்தை பழக்கமில்லாத ஒன்று. வெறுங்கையால் முழம் போடுவது தான் படத்துறையின் புகுமுகத் தேர்வு. எப் படியாவது ஏமாந்தவர்களை வளைத்துப் போட்டு ஆயிரம் அடியாவது படத்தைப் பிடித்து விடவேண்டும். அதன்

பிறகு அதைக் கடன் கொடுக்கும் சேட்டிடம் காட்டி அவன் பணத்தை வைத்துக் கொண்டு படத்தை முடிக்க வேண்டும். இது தான் செப்பிடு வித்தை. இதைச் செய்வதற்குத் தமிழ்நாட்டுப் பாவேந்தர் தேவைப்படவில்லை.

□

பாவேந்தருடைய கடவுட் கொள்கை பற்றி நானறிந்த ஓரிரு செய்திகளை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். பாவேந்தர் இளமையில் முருகபக்தர். மயிலம் முருகன் மீது அவர் பாடிய சுப்பிரமணியர் துதியமுது அதற்குச் சான்று. பள்ளிமாணவராய் இருந்த நாட்களில் பாவேந்தர் பஜனைப் பாடலும் பாடியதுண்டு.

இளமையிலே பாவேந்தர் உள்ளத்தில் ஊறிப்போயிருந்த இந்தச் சைவப்பற்று விட்டகுறை தொட்டகுறையாகப் பிற்காலத்திலும் அவரிடம் கொஞ்சம் ஒட்டிக் கொண்டிருந்ததாகச் சிலர் குறிப்பிடுவதுண்டு. அதனால் தான் தாம் எழுதிய 'எதிர்பாராத முத்தம்' காப்பியத்தின் இரண்டாம் பகுதியில் சைவத்துக்கும் குமரகுருபரர்க்கும் வக்காலத்து வாங்கிப் பாடியிருக்கிறார் என்று கூறுவர். இன்னும் சிலர் பாவேந்தர் 'புரட்சிக்கவி' யில் பாடியுள்ள 'வாணி அமைத்திட்டாள் நற்கவிதை; மழை போல் பெய்தான்' என்ற சொற்றொடரைக் காட்டி அவரையறியாமல் அவருள்ளத்தில் அரும்பிய கடவுட்பற்றைக் குறிப்பிட்டுக் காட்டுவர். 30-9-60 வெள்ளி மாலை 6 மணியளவில் புதுவை வாணி நிலையத்தில் நடைபெற்ற கலைமகள் விழாவுக்குப் பாவேந்தர் வந்து சிறப்பித்தார்' என்ற ஒரு செய்தி 11-10-60 இல் வெளியான குயில் ஏட்டில் வெளியாகியிருந்தது.

'எங்கெங்குக் காணினும்' என்று தொடங்குவது அவரது சக்திப்பாட்டு. பாவேந்தர் 1930 இல் வெளியிட்ட 'கதர் இராட்டினப் பாட்'டில் 'கண்ணன் வழிப் பிறந்த சாதி' என்ற கண்ணன் பாராட்டு வரி தென்படுகிறது. பாவேந்

தரின் நண்பரான ஓர் இசையாசிரியர் பலமுறை விரும்பிக் கேட்டதற்காகக் கண்ணன் கிளிக்கண்ணி (40 வரிகள்) ஒன்று பாடிக் கொடுத்திருக்கிறார். வாணி, சக்தி, கண்ணன் பற்றிய இப்பாடல்கள் யாவும் பாவேந்தர் பாட்டில் காணப்படும் பாரதிபாணியின் எதிரொலிகள்.'

திருவள்ளுவர் படத்தை எழுதிய ஓவியர் திரு. வேணு கோபால சர்மா பாவேந்தருக்கு நெருங்கிய நண்பர். அவரைச் சில ஆண்டுகளுக்கு முன் நான் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தபோது பாவேந்தரைப் பற்றி ஒரு செய்தியைக் குறிப்பிட்டார். சர்மா ஒரு பக்தர். பாவேந்தர் சென்னையில் ஒருமுறை தங்கியிருந்தபோது, சர்மாவும், உடன் இருந்தாராம். சர்மா தாம் வழிபடும் அம்பிகையின் மீது ஒரு பாடல் எழுதித் தரும்படி வேண்டிக் கொண்டார். பாவேந்தர் மறுத்தார். சர்மா பலதடவை வற்புறுத்தவே 'சரி, சொல்றே எழுதிக்க...' என்று கூறிவிட்டுப் பாடலைச் சொல்லத் தொடங்கினார் பாவேந்தர். அந்தப் பாடல் தம்மிடத்தில் வந்த பிறகு, தம் வாழ்க்கையிலேயே பெரிய திருப்பம் ஏற்பட்டு விட்டதென்றும், அதன் பிறகு தாம் வாழ்க்கையில் தொல்லை எதுவுமின்றி வசதியோடும் புகழோடும் இருப்பதாகவும் சர்மா என்னிடம் கூறினார்.

பாவேந்தருடைய வாழ்க்கையில் கடவுள் இவ்வாறு பல இடங்களில் குறுக்கிட்டிருக்கிறார். நான் பாவேந்தரோடு சென்னையில் பழகிய நாட்களில் ஒருநாள் கூட என்னிடத்தில் கடவுளைப் பற்றி அவர் பேசி நான் கேட்டதில்லை. ஆனால் கடவுள் பக்தர் சிலர் அவரிடம் உள்ளங்கலந்த நண்பர்களாகப் பழகியதைப் பார்த்திருக்கிறேன். மாரடைப்பால் தாக்கப்பட்டுச் சென்னை அரசினர் மருத்துவமனையில் படுத்திருந்தபோது, 'அப்பா! அப்பா!' என்று அன்போடு பழகும் அனுசூயா வடபழனி முருகன் கோவிலிலிருந்து திருநீறு கொண்டு வந்து பாவேந்தர் நெற்றியில் பூசினார். 'என்ன மந்திரமா?' என்று சொல்லிப்

பாவேந்தர் அதைக் கலைத்துவிட்டார். இதுதான் சாரும் போது பாவேந்தருக்கிருந்த கடவுட் கொள்கை.

நான் கி.பி. 1962 ஏப்ரல் வாக்கில் என் கல்லூரிப் படிப்பை முடித்துக் கொண்டு சேலம் திரும்பி விட்டேன். நான் சேலம் திரும்பியதும், நின்று போயிருந்த குயில் இதழை மீண்டும் தொடங்கினார் பாவேந்தர். நான் ஊருக்குப் புறப்படும் போது, "என்னுடைய பாடல்களை நீ ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்பு; நான் குயிலில் வெளியிடுகிறேன்" என்று சொன்னார்.

"ஒரு சிறந்த கவிஞரின் கவிதையைக் கருத்துக்கெடாமல் வேற்றுமொழியில் மொழி பெயர்ப்பது என்பது மிகவும் சிக்கலான வேலை. உங்கள் கவிதையை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் அளவுக்கு எனக்கு ஆங்கிலப் புலமை இல்லை" என்று சொன்னேன். ''பரவாயில்லை. தெரிந்த அளவு மொழி பெயர்ப்பு செய்'' என்று கட்டளையிட்டார். நான் 'அழகின் சிரிப்'பில் உள்ள 'வானவில்' பற்றிய பகுதியையும், பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதியில் உள்ள 'சுதந்தரம்'† யாத்திரை போகும் போது' என்ற பாடல்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அனுப்பினேன். அப்பாடல்களைத் தொடர்ந்து குயிலில் வெளியிட்டதோடு என் மொழி பெயர்ப்பைப் பாராட்டிக் கீழ்க் கண்ட சிறப்புக் கவி ஒன்றையும் எழுதி வெளியிட்டிருந்தார்.

நான்செய் தமிழ்ப்பாட்டை நல்லதோர் ஆங்கிலத்தில்
தான்செய் தளிக்கும் தகுதியிலே—வான்போன்ற
வாழ்கவே நன்முருகு சுந்தரந்தான் வண்மையெல்லாம்
சூழ்கவே சீர்த்தி தொடர்ந்து.

எந்தவித அறிவிப்புமின்றி 1—8—62 இதழோடு குயில் திடீரென்று நின்றுவிட்டது. பாவேந்தரின் பொருளாதார நெருக்கடிதான் காரணமென்று எண்ணுகிறேன். குயில்

†காண்க: பிற்சேர்க்கை.

நின்றதும் பாவேந்தர் பாடலை மொழி பெயர்க்கும் வேலையை நானும் நிறுத்திக் கொண்டேன். இம்மொழி பெயர்ப்புப் பணியைக் குறிப்பிடும் போது, இது பற்றிய வேறுசிலசெய்திகளையும்குறிப்பிடவிரும்புகிறேன். பாவேந்தர் பாடலை மொழிபெயர்க்கும் பணியில் பலர் தம்மை ஈடுபடுத்திக் கொண்டனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர் திருவாளர் பாலகிருஷ்ணன் அவர்கள். இவரைப் பற்றி நான் முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேன்.† தமிழ்க் கவிதைகளை ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பதற்கென்றே பிறந்தவர். ஆங்கிலம் இவரிடத்தில் தாய்மொழி போல ஏவல் செய்யும். சுயமரியாதை இயக்கப்பற்றும் பாவேந்தர் பாடலில் அளவுகடந்த ஈடுபாடும் கொண்டிருந்த காரணத்தால் உயிரும் உணர்வும் கெடாமல் கவிதை அழகோடு இவரால்மொழிபெயர்க்க முடிந்தது. பாவேந்தரின் தனிப்பாடல்கள் சிலவற்றையும், எதிர்பாராத முத்தம் காப்பியத்தையும் இவர் மொழிபெயர்த்துமுடித்திருந்தார். ஆனால் அம்மொழிபெயர்ப்புகள் இன்னும் அச்சேறாமல் இருப்பது வருந்தத்தக்கது.

பாவேந்தரின் பாடல்கள் சிலவற்றைப் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையாரும் மொழி பெயர்க்க முயற்சி எடுத்துக் கொண்டார் என்று தெரிகிறது. குடும்பவிளக்கின் முதற்பகுதியை மொழி பெயர்த்துக் கொண்டிருந்த போது 'கட்டில் அழகு' என்று தலைப்பிட்ட ஒரு பாடலை மொழிபெயர்க்க வேண்டி வந்தது.

> ''சரக்கொன்றை தொங்கலிட்ட பந்தலின் கீழ்
> தனிச்சிங்கக் கால்நான்கு தாங்கும் கட்டில்

என்ற வரிகள் வந்ததும் பன்மொழிப் புலவருக்கு மலைப்பு வந்துவிட்டது. 'இதை எப்படி மொழிபெயர்ப்பது?' என்று தெரியாமல் தடுமாறுகிறேன்' என்று பாவேந்தரிடம் குறிப்பிட்டாராம். 'கொன்றை' என்பது தமிழ் நிலத்தில் முல்

†காண்க: பக்கம் 7

லையில் பூக்கும் பூ. அந்தச் சொல்லை அதனுள் அடங்கி யிருக்கும் கருத்துச் செறிவும் தீனைப்பண்பும் புலப்படும்படி ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பது முடியாது என்று கருதி யிருக்கலாம். மேலும் இவ்வரிகளை மொழிபெயர்ப்பவர் கள் பல செய்திகளை உணர்த்தியாக வேண்டும். கொன்றை சரஞ்சரமாக பூக்கும் தன்மையுடையது என்பதையும், படுக்கையறைக் கட்டில் மீது மலர்ப்பந்தல் போடுவது தமிழ்நாட்டு வழக்கம் என்பதையும், கட்டில் கால்களை அரியணை போல் நான்கு பக்கமும் சிங்கந்தாங்கும்படி கலை யழகோடு அமைத்தல் தமிழர் இயல்பு என்பதையும் மொழி பெயர்ப்பில் உணர்த்தியாக வேண்டும். சிரமந்தானே? தமிழ் இலக்கியங்களைப் பிறமொழியில் பெயர்ப்பது என் னும் பணி தனிப்பட்ட ஒருவரின் ஆர்வத்தாலும் ஊக்கத் தாலும் நிறைவேறக் கூடியதா? இஃது ஒரு நாட்டின் அரசசங்கம் பொறுப்பேற்றுச் செய்ய வேண்டிய வேலை. பாவேந்தர் நினை இரண்டுங்கெட்டான் நிலை. பாவேந்தர் புதுவை மாநிலத்தைச் சேர்ந்தவர். எனவே, தமிழக அரசு புதுவை அரசாங்கம் இப்பணியை மேற்கொண்டு செய்யட்டுமே எனக்காத்திருக்கிறது. புதுவை அரசோ, 'தமிழக அரசு எப்படியும் செய்துவிடும்; நாம் ஏன் இதில் தலையிட வேண்டும்' என்று நினைக்கிறது போல் இருக் கிறது.' பாவேந்தர் ஒரு தமிழர்; அவர் படைப்புக்களை மொழிபெயர்ப்பது தமிழர் கடமை' என்று யாரும் நினைக் கக் காணோம்.

நான் சேலம் திரும்பிய பிறகு எப்போது சென்னை சென்ரு லும் பாவேந்தரைச் சென்று பார்த்துப் பேசிவிட்டு வருவது என்பது என் வழக்கமாகி விட்டது. தமது பொருளாதாரத் தட்டுப் பாட்டின் காரணமாகப் பாவேந்தர் தாம் குடி யிருந்த இராமன் தெரு பங்களாவின் முன்பகுதியைக் காலி செய்து விட்டு ரூ70/- வாடகையில் பின்கட்டு (Out House) க்குக் குடிபெயர்ந்து போய் விட்டார். நான் ஒரு முறை சென்னை சென்றிருந்தபோது பாவேந்தரும் நானும் திருவல்லிக்கேணிக் கடற்கரைக்குச் சென்றிருந்தோம்.

அப்போது என் தம்பி முருகரத்தனம் மாநிலக் கல்லூரியில் தமிழ் விரிவுரையாளனைப் பணியாற்றிக் கொண்டிருந்தான். அவன் அப்போது கடற்கரையைப் பார்த்தபடி அமைந்திருந்த பல்கலைக் கழக நிறைகலை மாணவர் விடுதியில் (University P.G. Students' Hostel) தங்கியிருந்தான். அவனைப் பார்க்கலாம் என்று நானும் பாவேந்தரும் கிளம்பினோம். நாங்கள் கிளம்பும்போது பாவேந்தருக்கு அறிமுகமான ஒரு பார்ப்பன நண்பரும் எங்களுடன் சேர்ந்துகொண்டார். அன்று விடுதியில் ஏதோ விருந்து. பாவேந்தர் புலால் உணவை விரும்பிச் சாப்பிடுபவர் என்பதை அறிந்து வைத்திருந்த என் தம்பி அவரை விருந்துக்கு அழைத்தான்.

'என்ன item?' என்றார் பாவேந்தர்.

'வான்கோழி பிரியாணி' என்று கூறினான் என் தம்பி.

'அப்படியா? சரி போவோம்!' என்று எழுந்தார்.

பாவேந்தர் அருகில் அமர்ந்திருந்த பார்ப்பன நண்பர் 'அப்ப...நா...வர்ரங்க' என்று சொல்லிக் கைகூப்பி விட்டு அவசரமாக நகர்ந்தார்.

'நீ...சாப்பிடலயா? வான்கோழி பிரியாணி... எளிதா கிடைக்காத item' என்றார் பாவேந்தர்.

'வேண்டாங்கய்யா... நா வர்ர...' என்றார் அந்த நண்பர்.

'ஏ? கோழி கொத்திப்புடுமுன்னு பயப்படறியா?' என்று கேட்டுவிட்டு உரக்கச் சிரித்தார். பார்ப்பன நண்பர் முகத்தில் அசடு வழிந்தது. இதை இரவில் நான் தூங்கும்போது நினைத்தாலும் குபீரென்று சிரிப்பு வரும்.

மறுமுறை நான் சென்னை சென்றிருந்தபோது மருத்துவப் பட்டப்படிப்பை முடித்துவிட்டு 'ஹவுஸ் சர்ஜனாக'ப் பயிற்சி பெற்றுக் கொண்டிருந்த என் இளைய தம்பியின் வேலை தொடர்பாகப் பாவேந்தரைச் சென்று பார்த்தேன். மந்திரி

மஜீத்தைத் தாம் இரண்டுமுறை இதுபற்றிச் சென்று பார்த்ததாகச் சொன்னார். 'நீ எதற்காக வீண் செலவு செய்து கொண்டு வந்தாய்? கடிதம் போட்டால் போதாதா? நான் பார்த்துக் கொள்கிறேன். நீ போ!' என்று சொன்னார். ஆனால் மந்திரி மஜீத்தை அவரால் மீண்டும் பார்க்க முடியவில்லை.

கவிஞர் மாநில மாநாடு சேலம் மாவட்டம் இராசிபுரத்தில் 1963ஆம் ஆண்டு நவம்பர்த் திங்கள் 9, 10 தேதிகளில் நடைபெற இருந்தது. இராசிபுரம் திருக்குறள் ஆட்சி மன்றத்தைச் சேர்ந்த திருவாளர்கள் கி. அரங்கசாமி, செ. அங்கமுத்து ஆகிய இருவரும் அம் மாநாட்டை முன்னின்று நடத்தினர். இச் செய்தியை முன்கூட்டி அறிந்த நான் பாவேந்தருக்கு இதுபற்றிக் கடிதம் எழுதிக் கேட்டேன். அவரிடமிருந்து கீழ்க்கண்ட கடிதம் வந்தது.

திரு. புலவர் அவர்களே,
அஞ்சல் கிடைத்தது. நான் 8—11—63 காலை எக்ஸ்பிரஸ் பஸ்ஸில் புறப்பட்டு வருகின்றேன்.
என்னை, பஸ் சந்திப்பு நிலையத்தில் சந்திக்க வேண்டுகிறேன்.
பிற நேரில்

பாரதிதாசன்

சென்னையிலிருந்து அரசாங்கப் பேருந்து வண்டியில் பகலெல்லாம் குலுங்கிப் பயணம் செய்து கொண்டு வரப் போவதாகப் பாவேந்தர் எழுதியிருந்த கடிதச் செய்தியைப் படித்ததும் எனக்கு மிகவும் சங்கடமாக இருந்தது. அவ்வளவு நீண்ட தொலைவு பேருந்தில் பகல் நேரத்தில் பயணம் செய்வது அப்போதிருந்த அவர் உடல் நிலைக்கு ஏற்றதன்று என்று கருதினேன். எனவே இரவு நேரத்தில் படுக்கை வசதியோடு புகைவண்டியில் வரும்படி அவருக்கு வற்புறுத்தி ஒரு கடிதம் எழுதினேன். என்னுடைய கடிதத்தைக் கண்டதும் அவருக்குச் சுரீரென்று கோபம் வந்து

விட்டது போலும். அவரது விருப்பத்துக்கு மாறுகத்தான் யாரும் பேசக்கூடாதே! நான்கு நாட்கள் கழித்து மிகவும் சூடாகப் பாவேந்தரிடமிருந்து ஒரு கடிதம் வந்தது:

5—11—63

அன்பு முருகுசுந்தரம்!

நான் உனக்கு அஞ்சல் எழுதியுள்ளேன். அது கிடைத்திருக்கும்.

இப்போதும் சொல்லுகிறேன். நான் சென்னையில், சேலம் எக்ஸ்பிரஸில் காலை 7¼க்குப் புறப்பட்டு 8—11—63 மாலை 4¼ மணிக்குச் சேலம் வந்து சேருகிறேன்.

என் நண்பர் ஒருவரும் என்னுடன் வருவார். கூடுமானால் சந்திக்கவும்.

மற்றவை நேரில்!

பாரதிதாசன்

தாம் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தபடியே *8—11—63* மாலை 4¼மணிக்கு அரசாங்க விரைவு வண்டியில் சேலம் பேருந்து நிலையத்தில் வந்து இறங்கினார். நானும் புலவர் மி.மு. சின்னண்டாரும் வேறுசில நண்பர்களும் மாணவர் கூட்டத்தோடு மாலையும் கையுமாகக் காத்திருந்தோம். தக்கமுறையில் பாவேந்தரை வரவேற்று வசதியான ஒரு தங்கல்மனையில் கொண்டுபோய்ச் சேர்த்தோம். நான் சென்னையில் இருந்தபோது ஒரு முறை சேலம் வரும்படி அவரை வேண்டிக் கொண்டேன். உடனே அவர் 'வரலாம்.....என்னை உன்னால் வைத்துச் சமாளிக்க முடியாது' என்று சொன்னார். அவர் அவ்வாறு சொன்னது எனக்கு என்னவோ போல் இருந்தது. தன் விருப்பம் கடுமையாக மறுதலிக்கப் பட்டால் ஒரு குழந்தை தன் பெற்றோர் முகத்தை எவ்வாறு பார்க்குமோ அவ்வாறு அவர் முகத்தை நான் பார்த்தேன். பாவேந்தர் சேலம் வரும் செய்தி கடிதம் மூலம் என்னை வந்தடைந்ததும் அவர் சென்னையில் சொன்ன இச்சொற்கள் தாம் முதலில் என் நினைவுக்கு வந்தன.

பாவேந்தரின் அன்றாட வாழ்க்கை முறையையும் உணவு முறையையும் நான் பலநாள் நேரில் கண்டறிந்தவன். சேலத்தில் இருக்கும் வரை அவர் மனங்கோணுமல் நடந்து கொள்ள வேண்டுமே என்ற அச்சம் எனக்கு வந்து விட்டது. அவர் என்ன என்ன உண்பார் என்று பட்டியல் போட்டுக்கொண்டு அதன்படி என் மனைவியைச் சமைக்கச் சொன்னேன். அவரோடு நான் முதலிலே குறிப்பிட்டிருந்த மெய்காப்பாளரும் காக்கி உடுப்போடு வந்திருந்தார். அவ்விருவரும் கூப்பிட்ட சொல்லுக்கு ஏனென்று கேட்க மாணவர் இருவரை அறையின் வாசலிலே நிற்க வைத்திருந்தேன்.

பாவேந்தர் விடுதிக்கு வந்ததும் காப்பி சாப்பிட்டு விட்டுப் பயணக் களைப்புத் தீர்வதற்காகக் கொஞ்ச நேரம் படுத்திருந்தார். மாலை 5 மணி இருக்கும். 'முருகு! நான், மருத்துவரிடம் செல்ல வேண்டும். மூச்சு இரைக்கிறது. 'இன்சொலின்' போட்டுக் கொள்ள வேண்டும்' என்று கூறினார். நான் அருகிலிருந்த டாக்டர் K.N. ராவிடம் அழைத்துச் சென்று ஊசிபோட ஏற்பாடு செய்தேன். மிகவும் களைப்பாகத் தென்பட்ட பாவேந்தர் ஊசி போட்டுக் கொண்டதும் தெம்பாகவும் சுறுசுறுப்பாகவும் காணப்பட்டார்.

பாவேந்தர் சேலம் வந்திருக்கிறார் என்ற செய்தி தெரிந்ததும் பல புலவர்களும் நண்பர்களும் அவரைத் தேடி வந்து விட்டனர். பேச்சு தமிழைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் திரும்பியது. அப்போது அங்கு வந்திருந்த 'திருக்குறள் இராமசாமி' என்ற புலவர் 'வள்ளுவர் புலால் மறுத்தலைப் பற்றி வற்புறுத்திக் கூறியிருக்கிறீரே! அதைப் பற்றி உங்கள் கருத்து என்ன?' என்று பாவேந்தரைக் கேட்டார். இந்தக் கேள்வியை அவர் கேட்டுக் கொண்டிருந்தபோது மீன் குழம்பும் புரு வறுவலும் அடங்கிய சாப்பாட்டுத் தூக்கு என் வீட்டிலிருந்து வந்து சேர்ந்தது.

பாவேந்தர் அப்புலவரை உற்றுப் பார்த்து 'வள்ளுவரின் புலால் மறுப்புக் கொள்கையை ஏற்றுக் கொண்டால்

தமிழன் உருப்படமாட்டான்; கோழையாகி விடுவான். வெறும் கத்தரிக்காயையும் வெண்டைக்காயையும் தின்று தின்று தமிழனுடைய வீரமே போச்சு. கோழி ஆடு இவற்றை அறுக்கணும். அவற்றிலிருந்து பீறிட்டடிக்கும் பச்சைரத்தத்தைச் சிறுவர்கள் பார்க்கணும். அப்பத்தா... அவுங்க அச்சம் நீங்கும்!' என்ருர். புலவர் அதிர்ச்சியால் வாயே திறக்கவில்லை.

அடுத்தநாள் காலை 10 மணிக்குமேல் நாங்கள் கவிஞர் மாநாட்டுக்காக இராசிபுரம் புறப்பட்டோம். மாநாட்டுத் தலைவராகிய பாவேந்தர் அலங்கரிக்கப்பட்ட வண்டியில் விவேகானந்தநகர் ஏசு மாளிகையிலிருந்து மாநாடு நடைபெறவிருந்த அரங்க விலாசத் திரைப்படக் கொட்டகைக்கு மேளதாளத்தோடு அழைத்துச் செல்லப்பட்டார். மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாகத் திருவள்ளுவர் படத் திறப்புவிழா நடைபெற்றது. புலவர் குழந்தை திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைத்தார். மாநாட்டின் துவக்க வுரைப் பேச்சாளராக நாமக்கல் கவிஞரின் பெயர் போடப்பட்டிருந்தது. ஆனால், அவர் மாநாட்டுக்கு வரவில்லை. இம்மாநாட்டில் கரந்தைப் புலவர் ந. இராமநாதன், அரசினர் பயிற்சிக் கல்லூரியில் அப்போது பேராசிரியராக இருந்த கு. சிவமணி, ஈரோடு புலவர் தமிழன்பன், பழனி இளங்கம்பன் ஆகியோரும் கலந்து கொண்டனர். பாவேந்தர் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில் நானும் பங்கேற்றேன். இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் திரு. சி. பா. ஆதித்தனர் 'வள்ளுவர் கண்ட தமிழகம் அன்றும் இன்றும் என்றும்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினர். மாநாட்டுக்குத் தலைமைதாங்கிய பாவேந்தர் உரை ஒரே உணர்ச்சிப் பிழம்பாகவும் ஆவேசமாகவும் இருந்தது. அந்த மாநாடு நடைபெறுவதற்குச் சற்று முன்தான் 'தீக்குறளை சென்ருேதோம்' என்ற திருப்பாவை அடிக்குக் காஞ்சி சங்கராச்சாரியார் புதிய உரைசொல்லித் தமிழறிஞர்களின் ஏகோபித்த கண்டனத்துக்கு ஆளாகி

யிருந்தார். பாவேந்தரின் ஆவேசத்துக்குச் சொல்ல வேண்டுமா!

மாநாடு நடந்த இரண்டு நாட்களும், நாங்கள் பாவேந்தர் ரோடு இராசிபுரம் அரசினர் பயணியர் விடுதியில் தங்கியிருந்தோம். பாவேந்தரும் புலவர் குழந்தையும், புலவர் இராமநாதனும் ஓயாமல் தமிழைப் பற்றிப் பேசியும் வாதிட்டுக் கொண்டும் இருந்தனர். எங்களுக்கெல்லாம் அவர்கள் பேச்சு சீரணிக்க முடியாத பெரிய விருந்தாக இருந்தது. பாவேந்தரும் புலவர் குழந்தையும் தமிழ்ப் புலவர் உலகில் முரட்டுத் தனத்துக்குப் பேர் போனவர்கள். இந்த இரண்டு பேருமே மதயானை போல் சில கருத்தில் மோதிக் கொள்வார்கள். நாங்கள் அச்சத்தோடும் வியப்போடும் அவர்களையே பார்த்துக் கொண்டிருப்போம். பாவேந்தர் கடைசியாக 'அது அப்படித்தா!' என்று அடித்து முழங்குவார், புலவர் குழந்தை பேசாமல் இருந்து விடுவார்.

பொதுவாக இது போன்ற இலக்கிய மாநாடுகளுக்கு வாழ்த்துச் செய்திகள் தாம் வருவது வழக்கம். 9—11—63 திங்கட்கிழமை முற்பகல் நாங்கள் மாநாட்டு மேடையில் அமர்ந்திருந்தபோது 'உயர்திருவாளர் புரட்சிப் பாவலர் பாரதிதாசன் அவர்கள், மே/பா 'கவிஞர்' மாநில மாநாடு' என்று முகவரி போட்டு ஓர் அஞ்சல் உறை வந்தது. அதில் நான்கு முழுப்பக்க அளவில் ஓர் வசைக் கவிதை இருந்தது. அஞ்சல் உறையின் மறுபக்கத்தில் ம இலெ. தங்கப்பா மே/பா 'தென்மொழி', திருப்பாதிரிப்புலியூர் கடலூர் பு. ந. என்று அவ்வசைக் கவிதைக்குரியாரின் முகவரி எழுதப்பட்டிருந்தது. அவர் யாரையும் பெயர் சுட்டாமல் பொதுவாக மாநாட்டையும், மாநாட்டில் கலந்து கொண்ட எல்லாக் கவிஞரையும் தமிழுணர்வு அற்றவர்களென்று திட்டித் தீர்த்திருந்தார். 'பாவலர் மாநாடு' என்று போடாமல் 'கவிஞர் மாநாடு' என்று போட்டிருந்ததே அவ்வசைப் பாடலுக்குரிய அடிப்படைக்

காரணம். அப்பாடலைப் பாவேந்தரிடம் காட்டினேன். 'இது அந்தத் துரைமாணிக்கம் வேலை' என்று மட்டும் சொல்லிவிட்டுப் பேசாமல் இருந்து விட்டார்.

10—11—63 பிற்பகல் கவிஞர் தமிழன்பனோடு பாவேந்தர் ஈரோடு புறப்பட்டுச் சென்று விட்டார். 11—11—63 திங் கட்கிழமை பிற்பகல் ஈரோடு மதரசா உயர்நிலைப் பள்ளி யில் பாவேந்தரின் சொற்பொழிவு நடைபெற்றது. அடுத்த நாள் பாவேந்தர் சேலம் வந்துவிட்டு அன்று இரவே சென்னை புறப்பட்டுச் சென்றுவிட்டார். இரண் டாம் முறை அவர் சேலம் வந்த போது நான் ஊரில் இல்லை. தவிர்க்க முடியாத ஒரு வேலையின் காரணமாக நான் திருச்செங்கோடு சென்று விட்டேன். அன்று பாவேந்தரை விடுதியில் சென்று சந்திக்க முடியாமல் போனது எனக்கு மிகவும் வருத்தமாக இருந்தது. என் வருத்தத்தைத் தெரியப்படுத்தி அவருக்கு ஒரு கடிதம் எழுதினேன். உடனே பாவேந்தர் அதற்குக் கீழ்க்கண்ட மறுமடல் விடுத்தார்.

16—11—63

திரு. முருகு வாழ்க

நாங்கள் அங்கு வந்தபோது எமக்குப் பேருதவி புரிந்தீர் கள். நன்றி.

13—11—63 ல் நீங்கள் எழுதிய அஞ்சல் கண்டேன்.

சேலம் ஓட்டலில் நீங்கள் சந்திக்க இயலாமை இயல்பு. யாம் அதுபற்றி வருந்தவில்லை.

நன்றி மறவாத
பாரதிதாசன்

இராசிபுரத்தில் கவிஞர் மாநில மாநாடு நடைபெற்ற அதே ஆண்டு பாவேந்தர் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க ஓரிரண்டு நிகழ்ச்சிகள் சென்னையிலும் நடைபெற்றன. 29—4—63 இல் சென்னை அண்ணாமலை மன்றத்தில் 'பாவேந்தர் பாரதிதாசனார் 74-ஆவது பிறந்தநாள் விழா'

நடைபெற்றது. அ த ன் அழைப்பிதழ் ஒன்று எனது சேலம் முகவரிக்கு வந்தது. இந்த 74 ஆவது பிறந்த நாளை நடத்த ஒரு விழாக்குழு அமைக்கப்பட்டிருந்தது. விழாக்குழுவின் தலைவராகத் திருவாளர் N. பாபு ஜனர்த் தனம், B.A., B Com., (கோல்டன் ஸ்டுடியோ உடையவர்) அவர்களது பெயர் போடப்பட்டிருந்தது. திருவாளர்கள் சிலம்புச் செல்வர் மா.பொ.சி, நடிகவேள் M. R. ராதா, குணச்சித்திர நடிகர் S.V. சகஸ்ரநாமம், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார், நாரண. துரைக்கண்ணன், கவிஞர் கண்ணதாசன், திருமதி அனுசூயா தேவி ஆகி யோர் அவ்விழாவில் வாழ்த்துரை வ ழ ங் கு வ ர் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அவ்விழாக் குழுவில் சினிமா ஆர்ட் டைரக்டர் அம்மையப்பன், கவிஞர் தஞ்சை வாணன், திரைப்பட நடிகர்கள் O.A.K.தேவர், R. பக்கிரி சாமி, புதுவைத் தமிழழகன், எண்ணூர் கொத்தாரி உர உற்பத்திச்சாலை பொது மேலாளர் S. நல்லபெருமாள் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர். பாவேந்தரின் 'பாரதப் பாசறை' என்ற நாடகம் வழக்கறிஞர் V.P. இராமன் தலைமையில் நடைபெறுவதாக இருந்தது. ஆனால் இந்த விழா எந்த அளவு வெற்றிகரமாக நடைபெற்றது என்று தெரியவில்லை.

அடுத்த ஆண்டு பாவேந்தரின் 75 ஆவது பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்குச் சிலர் முயற்சி எடுத்துக் கொண்டனர். இறங்கு துறையிலேயே நீத்தானது போல் விழாக்குழு அமைப்பதிலேயே பெரும் கருத்து வேறுபாடு ஏற்பட்டு விழா முயற்சி உடைந்தது. இவ்வமைப்புக் குழுச் சண்டையில் என் தம்பி முருகரத்தனத்தின் பெயரும் அடிபட்டது. சென்னை சென்று இதைப் பற்றி அறிய வேண்டும் என்று நான் எண்ணிக் கொண்டிருந்த நேரத் தில் பாவேந்தரிடமிருந்தே இதுபற்றி ஒரு கடிதம் வந்தது. அதில் நாள் குறிப்பிடவில்லை. கடிதம் 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் வாரத்தில் என்னை வந்தடைந்தது. அக் கடிதம் முகவரி அச்சிட்ட அவர் கடிதத்தாளில் (letterpad)

எழுதப்பட்டிருந்தது. ஓவியர் சர்மா தீட்டிய பாவேந்தரின் வண்ணப்படம் அத்தாளின் உச்சியில் மூன்று வண்ணத்தில் அழகாக அச்சிடப்பட்டிருந்தது. இதுதான் பாவேந்தரிடமிருந்து எனக்கு வந்த கடைசிக் கடிதம்.

பாவேந்தர் பாரதிதாசன்

10, இராமன்தெரு,
தியாகராயநகர், சென்னை-17

திரு கவிஞர் முருகுசுந்தரம் அவர்கள்,
ஆசிரியர், சேலம் கல்லூரி.

அன்புள்ள தோழர்க்கு,

15 நாள் முன்னர் என்னிடம் காரண துரைக்கண்ணார் வந்தார். சென்னையில் உங்கள் 75 ஆண்டு பிறந்த நாள் விழாவைக் கொண்டாடப் போகின்றோம். உங்களிடம் அதுபற்றி அனுமதி கோருகிறோம் என்றார்-நன்று என்றேன்.

மேலும் நான் அவரிடம் சொன்னது என்ன என்றால்—பலர் இவ்வாறு என்னை அனுமதி கேட்கிறார்கள். அவர்களுக்கெல்லாம் நீங்களே-பதில் எழுதி அனுமதியும் கொடுத்துக் கொள்ளுங்கள் என்றேன்.

அப்படியானால் விழாவுக்கென மத்தியக் குழு ஒன்று அமைக்க வேண்டும் என்று யோசனை கூறினார். நன்று என்றேன்.

இதை நும் தம்பி முருகரத்தினத்திடம் கூறினேன். எல்லாம் எனக்குத் தெரியும், நான் காரண துரைக்கண்ணரிடம் கலந்து ஏற்பாடு செய்து கொள்ளுகிறேன் என்றார்.

மறுநாள் வந்தார். அந்த மத்தியக் கமிட்டியில்—நெடுஞ்செழியன், சிற்றரசு முதலியவர்களைப் போடலாமல்லவா? என்றார்.

கடுமையாக மறுத்தேன்.

பிறகு வீரமணியைப் போடலாமா என்றார். மறுத்தேன்.

எஸ். இராமநாதன், முன்னுள் அண்ணுமலைப் பல்கலைக் கழகம் துணைவேந்தர் மணவாள ராமானுஜம், வி. பி. இராமன், அகிலன் முதலியவர்களைச் சொன்னேன். அவர் அவர்களை மறுத்தார்.

இன்று—அதாவது பதினைந்து நாட்களுக்குப்பின் ஆர்ட் டைரக்டர் அம்மை அப்பன் வாயிலாகச் சேதி அனுப்பப்பட்டிருக்கிறது—

வேறு யாரையாவது கொண்டு விழாவை நடத்திக் கொள்ளச் சொல்லுங்கள் என்று—

நான் இவர்களைக் கேட்டதுண்டா விழா நடத்தச் சொல்லி? இதை உங்களிடம் சொல்லி வைத்தேன்.

பாரதிதாசன்

N.B. இதனுடன் திரைப்படத்தில் மகாகவி பாரதி என்ற அறிக்கைகள் 3 அனுப்புகிறேன்.†

உங்களுக்கொன்று, ஏ. சித்தையன் அவர்கட்குஒன்று, தனபால் —ஜவுளி—அவர்கட்கு ஒன்று சேர்த்து விடுக—

பா

பாரதியின் வரலாற்றை விரைவில் எழுதி முடித்துவிட வேண்டுமென்று பாவேந்தர் என்னிடம் கூறியதாக நான் முதலிலியே குறிப்பிட்டுள்ளேன். அப்பணி 1964 ஆம் ஆண்டு ஏப்ரலில் தான் முற்றுப் பெற்றது. அப்பணி முற்றுப் பெறுவதற்குக் காத்திருந்தது போல் இருந்து விட்டு, அப்பணி முடிந்ததும் அவர் உயிர் பிரிந்தது. சென்னைக்கு வந்து 'பாரதிதாசன் பிக்சர்ஸ்' படக்கம்பனியை ஆரம்பித்துப் பாவேந்தர் பல துன்பங்களுக்கு ஆளானார். இப்படக் கம்பனியே அவர் பட கம்பனியாயிற்று; இறுதி ஐந்தாண்டுகள் அவர் மன அமைதியை அடியோடு குலைத்தது; இன்னும் பத்தாண்டுகள் கழித்து வரவேண்டிய அவர் சாவுக்குக் கட்டியம் கூறியது.

†பாவேந்தர் அறிக்கையைப் பிற்சேர்க்கையில் காண்க.

பாண்டியன் பரிசு பெரிய அளவில் ஒரு வரலாற்று வண்ணத்திரைப்படமாக வெளிவர வேண்டும் என்பது அவர் இடையருத ஏக்கம். சென்னைக்கு வந்த ஓராண்டில் அவ்வெண்ணம் பட்டுப் போயிற்று. அதன் பிறகு ஓர் ஆங்கிலக் கதைக்குச் 'சினேரியோ' எழுதினார்; அதுவும் கனவாயிற்று. என்ருலும் அவருடைய படம் பிடிக்கும் ஆசை தீரவில்லை. சாவதற்கு ஒரு திங்கள் முன்பாக அவர் உள்ளத்தில் ஒரு பெருத்த உந்துதல் ஏற்பட்டது. பாரதியின் வாழ்க்கையையாவது படமாக எடுத்து முடித்து விடவேண்டும் என்று எண்ணினர்.

'கப்பலோட்டிய தமிழன்' திரைப் படத்தைப் பார்த்த போது இவருள்ளத்தில் இந்த எண்ணம் முதலில் முளை விட்டதாம். அப்படத்தில் நடிகர் திரு S.V. சுப்பையா பாரதியாராகத் தோன்றி உணர்ச்சி பொங்க வீராவேசமாக நடித்தது இவருள்ளத்தைப் பெரிதும் கவர்ந்துவிட்டது.

"அப்படியே பாரதியார் போலவே இருந்தது. ஆகா! என்ன நடிப்பு! வேறு யாரும் பாரதியார் வேடந்தாங்கி அப்படி நடிக்க முடியாது. அவரைப் போட்டு 'மகாகவி பாரதியார்'† என்ற படத்தை எடுக்க வேண்டும்!' என்று பாவேந்தர் அடிக்கடி கூறியது என் நெஞ்சில் பசுமையாக இருக்கிறது.

'மகாகவி பாரதியார்' படமெடுத்தால் தமிழ்நாட்டு மக்கள் தமக்குக் கட்டாயம் ஆதரவளிப்பார்கள் என்று நம்பினர். சென்னை நடிக நண்பர்கள் எப்படியாவது கைகொடுப்பார்கள் என்று அவர் உள்ளத்தில் ஒட்டி ஊசாலாடிக் கொண்டிருந்த ஒட்டடையைத் துடைத்தெறிந்து விட்டுப் புதிய திட்டம் ஒன்று வகுத்தார். அத்திட்டத்தின் முதல் கட்டம் தான் 'திரைப்படத்தில் மகாகவி பாரதி' என்ற அறிக்கை. தமிழ்நாட்டின் பட்டி தொட்டியெல்லாம் பாவேந்தருக்கு நண்பர் பட்டாளமும், அடியவர் திருக்கூட்டமும் உண்டு.

†1942இல் பாரதியார் வாழ்க்கையைத் திரைப்படமாக்கப் பாவேந்தர் முயன்ருர். அதுவும் தடைப்பட்டுப் போயிற்று.

ஒரு பெரிய அரசியல் தலைவருக்குரிய மக்கட் கூட்டம் இவர் பின்னால் உண்டு. இத்திருப் பணியைப் பாவேந்தர் சென்னைக்குக் குடிவந்த புதிதில் 1960லேயே துவக்கியிருந்தால் அவர் வாழ்க்கையின் இறுதி நாட்கள் மிகவும் மகிழ்ச்சியாகவும், அமைதியாகவும் கழிந்திருக்கும். செல்வ வளத்தோடும் வாழ்ந்திருக்க முடியும்.

என் விண்ணப்பம் இதுதான்.
எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!—

என்று பாவேந்தர் இவ்வறிக்கையின் மூலம்விட்ட வேண்டுகோள் காலங்கடந்த வேண்டுகோள் ஆகிவிட்டது. தயிரைக் கடைவதற்கு எடுத்து மத்தை உள்ளே விட்டவுடன் பானையே உடைந்து விட்டது.

இவவேண்டுகோள் ஒரிரண்டு ஆண்டுகளுக்கு முன் பாவேந்தரிடமிருந்து வெளியாகியிருந்தால் படம் பிடிப்பதற்கான பெருந்தொகையைத் தமிழ்நாட்டு மக்களே திரட்டிக் கொடுத்திருப்பார்கள். அப்போது காமராசர் தாம் முதலமைச்சராக இருந்தார். தமிழக அரசின் ஆதரவும் ஒத்துழைப்பும் கூட இவருக்குக் கிடைத்திருக்கும்.

படத்துறையை நம்பிச் சென்னை வந்ததால் பொன்னான அவர் உழைப்பும், கைப்பொருளும் வீணாயின. அவருடைய தகுதிக்குக் குறைவான பலருடைய வாசலில் போய் நின்றதால், வாழ்நாள் முழுவதும் அவர் இறுமாப்போடு காத்துவந்த மான உணர்வும், மரியாதையும் கூடக் காயம்பட்டன. இவை எல்லாவற்றையும் விட ஒரு நாட்டின் பெருங்கவிஞன் வாழ்க்கையின் முதிர்ந்த நிலையில் பெறக்கூடிய பெருஞ்சிறப்புக்களையும், மரியாதைகளையும் கூட இவர் இழக்க வேண்டி நேரிட்டது.

பாரதீய ஞானபீடம் 1964 ஆம் ஆண்டுக்குரிய ஒரிலக்க ரூபாய் இலக்கியப் பரிசை இவருக்கு வழங்குவதாக இருந்

தது. அதற்குரிய பூர்வாங்க வேலைகளெல்லாம் கூட முற்றுப் பெற்று விட்டன. இப்பரிசு, வாழும் கவிஞர்களுக்கு வழங்கும் பரிசு. 1964 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இவர் இறந்ததும், இவருக்குக் கிடைக்கவிருந்த இப்பரிசு மலையாளக் கவிஞரான சங்கரகுருப்பிற்குக் கொடுக்கப் பட்டுவிட்டது. இது பாவேந்தருக்கு மட்டுமன்று; தமிழ்க் கவிதைத் துறைக்கும் தமிழ்நாட்டுக்கும் ஏற்பட்ட பேரிழப் பாகும்.

பாவேந்தருக்கும் தமிழ்க்கவிதைக்கும் கிடைக்கவிருந்த பெருஞ்சிறப்புப் பறிபோனது பற்றி நான் மிகவும் வருந்தினேன். இப்பரிசுக் குழுவில் ஓர் உறுப்பினராக இருந்த திருவாளர் காரைக்குடி சா. கணேசன் அவர்களுக்கு ஒரு கடிதம் எழுதி இதுபற்றி விசாரித்தேன். அவர் அன்பு கூர்ந்து இதுபற்றிய விளக்கத்தை எனக்குக் கடிதம் மூலம் தெரியப்படுத்தினர்கள். அவர் கடிதத்தைக் கீழே கொடுத்திருக்கிறேன்.

Phone 600 & 396

கம்பன் அடிப்பொடி
Kamban Adippodi

கம்பன் மணிமண்டபம்
Kamban Manimandapam
ஓம். காரைக்குடி—623002

20—5—76

அன்புள்ள முருகுசுந்தரம் அவர்கட்கு வணக்கம்; உங்கள் 17-5-76 கடிதம். நன்றி.

பாவேந்தர் வரலாற்றைத் தொகுத்தெழுதும் உங்கள் முயற்சியை வரவேற்கிறேன். முழு வெற்றிபெற வாழ்த்துகிறேன்.

பாரதீய ஞானபீடம் எவ்விதவேறுபாடுமின்றி இந்தியஇலக்கியப் படைப்பிற்கு ஆண்டு தோறும் ஓரிலக்க ரூபாய் பரிசு வழங்குவது நாமெல்லாம் அறிந்ததே.

1964ல் பன்மொழிப் புலவர் தெ பொ. மீனாட்சிசுந்தரனார், திரு. பெரியசாமித் தூரன் இவர்களுடன் யானும் சேர மூவர் குழு பரிந்துரை செய்ய நியமிக்கப் பெற்றது.

தெ.பெ.மீ. அக் குழுத் தலைவர்.

எங்களுள் மாறுபாடின்றி மூவரும் பாவேந்தர்தாம் பரிசுக் குரியவர் என்ற ஒரே முடிவுக்கு வந்தோம். அங்ஙனமே எங்கள் பரிந்துரையை முறைப்படி ஞானபீடத்திற்கு அனுப்பி வைத்தோம். இத்தகவலை பாவேந்தர் மகனிடம் யானே நேரில் கூறினேன்.

இதில் ராஜாஜி எந்தவிதத்தும் தலையிடவில்லை. தலையிட வும் மாட்டார்கள். ஆனால் எங்கள் பரிந்துரை பற்றி அவர் களிடம் கூறினேன். அவர்கள் எங்கள் முடிவு சரியானதே என்றும் கொள்கைக் கோலை வைத்துக் கவிதையை அளக் காத எங்கள் முறையே நன்றென்றும் கூறிப் பாராட்டினர்.

பாரதிதாசன் கவிதை நலத்தையும் மனிதப் பண்பாட்டை யும் மதிப்பதற்கு கொள்கை அல்லது கட்சிச் சார்பு என்றுமே தடையாக அமையப்படாது என்பதே அக் குழுவிலிருந்த மூவருடைய ஒருமித்த கருத்து.

உங்கள் பணி செம்மையாகவும் திறமையாகவும் நிறை வேறும் என்பதற்கு உங்கள் ஆர்வமும் அணுகு முறையுமே சான்றாக உள்ளன. வாழ்க!

அன்பன்
கம்பன் அடிப்பொடி

சென்னைக்கு வந்து படத்துறை முயற்சிகளை மேற்கொண் டது தவறு என்று 1964 ஆம் ஆண்டு துவக்கத்தில் பாவேந் தர் உணர்ந்திருக்க வேண்டும். அவ்வாறு படத்துறைக்கு வந்தும் பாரதியின் வாழ்க்கையைத் திரைப்படமாக்காமல் இவ்வளவு நாள் தம் முயற்கியையும், உழைப்பையும், காலத்தையும் பாழடித்துவிட்டோமே என்று வருந்தி யிருக்க வேண்டும். வயது முதிர்ச்சியும் தள்ளாமையும் அவரை அச்சுறுத்தவே, விரைவில் பாரதியின் வரலாற்றை எழுதி அதைத் திரைப்படமாக்கிவிட வேண்டும் என்று எண்ணியிருப்பார். இந்த அவசரத் தூண்டுதல் அவரைக் கடுமையான உழைப்பில் தள்ளியது. இரவு பகலாக விழித்

திருந்து 'மகாகவி பாரதி'யின் திரைக்கதையையும் வசனத்தையும் எழுதி முடித்தார். கடுமையான உழைப்பும், மன அமைதியின்மையும் அவர் வாழ்வை முடித்துவிட்டன.

21-4-64 சென்னையிலிருந்து ஒரு கடிதம் வந்தது. சென்னையிலிருந்து என் தம்பி இளங்கோவன் எழுதியிருந்தான். மாரடைப்பினால் தாக்கப்பட்டுச் சென்னை அரசாங்க மருத்துவமனையில் பாவேந்தர் சேர்க்கப்பட்டுள்ளார் என்ற செய்தி அதில் குறிப்பிடப்பட்டிருந்தது. அன்று இரவு சென்னை செல்லுவதற்கு வேண்டிய முயற்சிகளில் நான் ஈடுபட்டேன். எதற்கும் மாலைச் செய்தித் தாளைப் பார்த்து விடலாம் என்று எண்ணினேன். சேலம் மாலை முரசில் பாவேந்தர் இறப்பைப்பற்றிய செய்தி கொட்டையெழுத்தில் அவர் படத்தோடு போடப்பட்டிருந்தது. அடக்கம் செய்வதற்காக அன்று மாலை அவர் உடலம் புதுச்சேரிக்குக் கொண்டு செல்லப்படும் என்ற செய்தியும் வெளியாகியிருந்தது. உடனே கடலூர் மார்க்கமாகச் செல்லும் புகை வண்டியில் ஏறிப் புதுவை புறப்பட்டேன். அடுத்த நாள் காலை 8 மணியளவில் புதுவையை அடைந்தேன். புதுவை நகரமே வெள்ளக் காடாக இருந்தது. பெருமாள் கோயில் தெருவில் எள் விழ இடமில்லை.

பாவேந்தர் வீடு தொட்டிக்கட்டு வீடு. நடுவில் இருந்த தொட்டியில் தென் வடலாகப் பாவேந்தர் படுக்க வைக்கப்பட்டிருந்தார். அவரைச் சுற்றி மாலைகளும் மலர் வளையங்களுமே தென்பட்டன. மக்கள் கூட்டம் ஓயாமல் உள்ளே வருவதும் போவதுமாக இருந்தது. பாவேந்தரின் மனைவியாரும் மக்களும் காலடியில் அமர்ந்து அவர் பாதத்தைக் கண்ணீரால் நனைத்துக் கொண்டிருந்தனர். நடிகர் எம். ஆர். ராதா உள்ளே வந்து பாவேந்தருக்கு மாலையணிவித்துத் தம் இறுதி வணக்கத்தைச் செலுத்திக் கொண்டிருந்தார்.

பாவேந்தர் மகன் கோபதி அருகிலிருந்த சுவரில் தலையை மோதிய வண்ணம் 'பாவிகளா! சினிமா ஆசையைக்காட்டி எங்கப்பாவைக் கொன்னுட்டீங்களே! என்று கதறிக் கொண்டிருந்தார். கவிஞர் பொன்னடி அருகிலிருந்து கோபதிக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார். தமிழ் நாடு—புதுவை மாநிலங்களைச் சேர்ந்த முக்கிய அரசியல் வாதிகளும், கவிஞர்களும், புலவர்களும் பெருமாள் கோயில் தெருவெங்கும் நின்று கொண்டிருந்தனர்.

பாவேந்தரின் இறுதி ஊர்வலம் அவர் வீட்டிலிருந்துகாலை பத்து மணிக்குத் துவங்கியது. மகாகவி பாரதி திருவல்லிக் கேணியில் இறந்தபோது அவரை அடக்கம் செய்வதற் காகப் புறப்பட்ட ஊர்வலத்தில் முப்பது பேர் தாம் கலந்து கொண்டதாக ஓர் அன்பர் செய்தித்தாளில் ஒருமுறை வருந்தி எழுதிக் கண்ணீர் வடித்திருந்தார். ஆனால் பாவேந்தரது இறுதிப் பயணத்தில் 10, 000 பேர் கலந்து கொண்டார்கள். ஊர்வலம் ஒரு மைல் தூரம் இருந்தது. பாவேந்தரின் எழுத்துச் சாட்டைக்கு அடிக்கடி இலக்கான புதுவை முதலமைச்சர் சுபேர் வழியில் பாவேந்தருக்கு மாலையிட்டு வணங்கினார். வேறு இரண்டு புதுவை அமைச் சர்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். கூட்டம் நடுப் பகல் 12 மணிக்கு மயானத்தை அடைந்தது. எந்தச் சடங் குகளும் இல்லாமல் பாவேந்தர் அடக்கம் செய்யப்பட்டார்.

பாவேந்தர் அடக்கம் செய்யப்பட்ட போது கவிஞர் பொன் னடியான் கையில் ஒரு பெரிய மாலையுடன் நின்று கொண் டிருந்தார். பாவேந்தர் சடலம் குழியில் இறக்கப் பட்ட போது மிகவும் கவனமாகக் கையிலிருந்த மாலையைப் புதைகுழியில் போட்டார். நான் அருகில் நெருங்கிக் கேள் விக்குறியோடு அவரைப் பார்த்தேன்.

''பாவேந்தரின் அன்புக்குரிய ஓர் அம்மையார் சென்னை யில் இம்மாலையை என் கையில் கொடுத்து மறக்காமல் அவர் உடலோடு இதையும் சேர்த்துப் புதைக்குமாறு வேண்டிக்கொண்டார்'' என்று கூறினார் பொன்னடி.

பாவேந்தர் அடக்கம் செய்யப்பட்டதும் அம்மயானத்தி லேயே ஓர் இரங்கற் கூட்டமும் நடைபெற்றது. யாரோ ஓர் புதுவைப்பிரமுகர் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர், திருவாளர்கள் ம.பொ.சி, ஈ.வி.கே. சம்பத், கவி கா.மு. ஷெரீஃப், இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, என். வி. நடராசன், கண்ணதாசன், சுப்பையா (பொதுவுடை மைக் கட்சித்தலைவர்), குத்தூசி குருசாமி ஆகியோர் பேசினர். அவ்வை திரு.டி.கே. சண்முகம் 'துன்பம் நேர் கையில்' 'உலகப்பன்' ஆகிய பாவேந்தர் பாடல்களைப் பாடினர். பாவேந்தரின் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு சென்னை திரும்பிய மயிலை லோகநாதன் என்ற தி.க. நண்பர் மாரடைப்பால் உயிர் துறந்தார்.

○

சில கவிதைகளின் தோற்றம்

5

கவிஞர்கள் தாம் எழுதும் கவிதைகளைத் தாமே சிந்தித்து கற்பனையாகவும் எழுதுவர். தமது வாழ்க்கையிலும், தம்மைச் சார்ந்தோர் வாழ்க்கையிலும் ஏற்படும் எதிர்பாராத சில நிகழ்ச்சிகளின் உந்துதல்களாலும் உணர்ச்சி வசப்பட்டு எழுதுவர். இத்தகைய உந்துதல்கள் எல்லாக் கவிஞர்களின் வாழ்க்கையிலும் உண்டு. அரசியலிலும், சமுதாய மறுமலர்ச்சி இயக்கத்திலும், ஆசிரியர் பணியிலும் ஈடுபட்டிருந்த பாவேந்தர் உணர்ச்சி வசப்பட்டு ஆவேசம் கொள்வதற்கு அவர் வாழ்க்கையில் எத்தனையோ வாய்ப்புகள் இருந்திருக்கும். பிறர்மீது கொண்ட அன்பினாலும், உள்ள நெகிழ்ச்சியாலும் எத்தனையோ கவிதைகள் தோன்

றியிருக்கலாம். அவ்வாறு தோன்றிய சில கவிதைகள் உணர்ச்சிப் பிழம்புகளாய், உயிரோவியங்களாய் வடிவம் பெற்று இலக்கியத்தில் ஏறி மக்கள் நெஞ்சில் நிலைத்து நின்றுவிட்டன. அத்தகைய சில கவிதைகளையும், அக் கவிதைகளை எழுதத் தூண்டிய வரலாற்று நிகழ்ச்சிகளை யும் இங்கு நான் குறிப்பிட விரும்புகிறேன்.

திருமணம்:

இப்பாடல் 1949 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. பெரியாருக் கும் மணியம்மைக்கும் நடைபெற்ற திருமணம் இந்த நூற்றாண்டில் வரலாற்று முக்கியத்துவம் பெற்றது என்ப தைத் தமிழகம் அறியும். அத்திருமணத்தால் திராவிடர்க் கழகம் இரண்டாக உடைந்தது, திராவிட முன்னேற்றக் கழகம் தோன்றியது. சமுதாய சீர்திருத்த இயக்கமாக இருந்த திராவிடர் இயக்கத்தின் அடிப்படைக் கொள் கையை மாற்றி, அதற்கு அரசியல் திருப்பங் கொடுத்துத் தமிழகத்தில் ஆட்சி மாற்றத்தையே ஏற்படுத்திய பெருமை இந்தத் திருமணத்துக்குண்டு.

இந்தத் திருமணத்தின் பின் விளைவுகள் எப்படியிருந்தா லும், திருமணம் நடந்த நேரத்தில் இது பெரிய சர்ச்சைக் கும் கொள்கைப் போருக்கும் காரணமாக இருந்தது. கழக இதழ்களான விடுதலையும் திராவிடநாடும் எதிரெதிர் பாசறைகளாக மாறின. கழக அறிஞர்கள் இரண்டு பக்க மும் அணிவகுத்து நின்று கொள்கைப் போர் நடத்தினர். அப்போர் சுவையானதாகவும், அறிவுக்குப் பெரிய விருந் தாகவும் இருந்தது. உலகத்தில் நடைபெற்ற இலட்சியத் திருமணங்களும், அவைகட்கு மறுப்புகளும் நாள்தோறும் சட்ட நுணுக்கங்களோடு வெளியாகிக் கொண்டிருந்தன. எங்கு பார்த்தாலும் 'கண்ணீர்த் துளிகள்' பற்றிய பேச் சாகவே இருந்தது.

அறிஞர் அண்ணாவும் கைவல்யம் அவர்களும் எதிரெதிர் நின்று எழுத்துப் போர் நடத்திக் கொண்டிருந்தனர்.

"ஏழெட்டு ஆண்டுகள் பலர் முன்னிலையில் பழகி, சமைத்து உணவிட்டு, எழுத்தராகவும் செயலாளராகவும் பணி புரிந்த முப்பது வயதான ஒரு பெண், தான் மணக்கும் ஒருவரைப் பற்றித் தெரியாமலா திருமணம் செய்து கொள்வாள்?" என்று கேட்டார் கைவல்யம்.

"பெரியாரின் தேவைகளைக் கவனித்துக் கொள்ள நானில்லையா? சம்பத்தில்லையா? மிராந்தா இல்லையா? இதற்கு ஒரு மணியம்மை தேவையா?" என்று அண்ணு கேள்விக் கணை தொடுத்தார்.

அதற்குக் கைவல்யம், "நீங்கள் இருக்கலாம். ஆனால் பெரியாரின் தினவறிந்து சொறிந்துவிட உங்களால் ஆகுமா?" என்று கேட்டார்.

இக்கருந்துப் போராட்டத்தில் பாவேந்தரும் உணர்ச்சி வசப்பட்டுச் சில அறிக்கைகள் வெளியிட்டுவிட்டுப் பின்னர் ஒதுங்கிக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் எதிர்ப்பு அணியிலே பிறகு வாழ்நாள் பூராவும் இருந்துவந்தார்.

தாம் இவ்வளவு நாளாகப் பேசியும் எழுதியும் பரப்பி வந்த சீர்திருத்தக் கொள்கைக்கு மாறுகத் தந்தை பெரியார் திருமணம் செய்து கொண்ட நிகழ்ச்சி பாவேந்தரின் இந்தப் பாடலுக்கு உந்துதலாக அமைந்தது. அண்ணு—கைவல்யம் ஆகியோரின் எழுத்துப் போர் அப்படியே இப் பாடலில் இடம் பெற்று விட்டது.

மாதிவள் இலெனில் வாழ்தல் இலை எனும்
காதல் நெஞ்சக் காந்தமும், நாணத்
திரைக்குட் கிடந்து துடிக்கும் சேயிழை
நெஞ்ச இரும்பும் நெருங்கும்! மணம்பெறும்!

—இது உண்மையான திருமணத்துக்குப் பாவேந்தர் கொடுக்கும் விளக்கம்.

புணர்ச்சி இன்பம் கருதாப் பூவையின்
துணைப்பாடு கருதும் தூயோன், திருமணச்
சட்டத் தாற்பெறத் தக்க தீதிலை
இருப்பினும் அதனை மேற்கோளல் இல்லை.
அஃது திருமணம் அல்ல ஆதலால்!

—பெரியார்—மணியம்மை திருமணம் உண்மையான திருமணம் ஆகாது என்பதற்கு இது பாவேந்தர் கொடுக்கும் விளக்கம்.

என்தின வறிந்து தன்செங் காந்தள்
அரும்பு விரற்கிளி அலகு நகத்தால்
நன்று சொறிவாள் என்று கருதி
மணச்சட்டத்தால் மடக்க நினைப்பது
திருந்திவரும் நாட்டுக்குத் தீயெடுத் துக்காட்டு!
மங்கையர் உலகின் மதிப்புக்குச் சாவுமணி!

—இது அண்ணா—கைவல்யம் கருத்துப் போர்.

அதனைத்
திராவிடர் உள்ளம் தீண்டவும் நாணுமே!*

—இக்கடைசி வரி தந்தை பெரியார் மீது வீசிய எழுத்துச் சாட்டை.

ஒரே குறை:

இப்பாடல் 1944 இல் எழுதப்பட்டது. இப்பாடலுக்கு உந்துதலாக இருந்தவர் சேலம் மாவட்டத்தைச் சேர்ந்தவர். வயது முதிர்ந்த நிலையில் இருக்கும் இவர், எனக்கு நண்பர். பாவேந்தருக்கு அன்பர். பாவேந்தரோடு நீண்டநாள் பழகியவர். பாவேந்தர் வாழ்க்கையோடு நெருங்கிய தொடர்புடையவர். மிகவும் வசதியோடு வாழ்ந்த இப்பெரியவர், பாவேந்தருக்குப் பலவிதத்திலும் மனங்கோணாமல் உதவி புரிந்தவர். தமிழ்ப் புலமையும்

*பக்கம் 64: பாரதிதாசன் கவிதைகள் II

இசைப்புலமையும் ஒருங்கே வாய்க்கப் பெற்றவர் பாவேந்தர் மிகவும் மதித்துப் போற்றிய நண்பர்.

இந்நண்பர் மிகவும் இளமையிலே தம் மனைவியை இழந்து விட்டார். மனைவியை இழந்தபோது இவருக்கு வயது இருபத்து மூன்று. மீண்டும் திருமணம் செய்து கொள்ளலாமா வேண்டாமா என்று உள்ளம் ஊசலாட இருந்த நிலையில் ஒரு பெண்ணிடம் பழகும் வாய்ப்பு ஏற்பட்டது. அப்பெண் படித்தவர்; நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர். ஆனால் வேற்றுச்சாதி. சீர்திருத்தவாதியான இவர் சாதி வேறுபாட்டைக் கருதாமல் மணக்க முன்வந்தார். இருவரும் காதல் உணர்வோடு பழகியும், பெற்றோருக்கஞ்சி அப்பெண் இவரை மணந்து கொள்ள மறுத்துவிட்டார். தமது காதலில் ஏற்பட்ட தோல்வியை இந்நண்பர் பாவேந்தரிடம் ஒருநாள் கூறினார். அன்று இரவே இது கவிதையாக மலர்ந்துவிட்டது. இப்பாடலில் காதல் விருப்பும், பெற்றோருக்கு அஞ்சும் அப்பெண்ணின் அச்சமும் மிக அழகாக விளக்கப்பட்டுள்ளன.

திருவிருக்கும் அவளிடத்தில்! திறமி ருக்கும்!
செங்காந்தள் விரல்நுனியின் நகத்தி லெல்லாம்
மெருகிருக்கும்! இதழோரப் புன்சி ரிப்பில்
விளக்கிருக்கும்! நீள்சடையில் மலரி ருக்கும்
புருவத்தில் ஒளியிருக்கும்! வனப்பி ருக்கும்!
போய்ப்போய்நான் காத்திருக்கும் இடமும் மிக்க
அருகிருக்கும்! வரமாட்டாள்; உடையும் நெஞ்சுக்
கோகோலும் எண்ணந்தான் அவளுக் கில்லை.‡

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை:

இப்பாடல் எழுதப்பட்ட ஆண்டு *1955* என்று எண்ணுகிறேன். ஆசிரியர் சொக்கலிங்கம் தினசரி நாளிதழைச் சென்னையில் தொடங்கினார். அவ்விதழைத் தொடங்கிய

‡பக்கம் 43: காதல் நினைவுகள்

போது அதில் வெளியிடுவதற்காகப் பாவேந்தரிடம் ஒரு கவிதை கேட்டார். பாவேந்தர் கொடுக்க மறுத்தார். அப்போது உடன் இருந்த கெழுதகை நண்பரான நாமக்கல் மு. செல்லப்பரெட்டியார் தூண்ட இக்கவிதையை எழுதித் தினசரிக்கு அனுப்பி வைத்தார். இதில் பெரியார் பணியும், திராவிட இயக்கத்தால் தமிழும் தமிழினமும் பெற்ற உயர்ச்சியும் சுட்டப்படுகின்றன.

தமிழனுக்கு வீழ்ச்சியில்லை; தமிழன் சீர்த்தி
தாழ்வதில்லை! தமிழ்நாடு தமிழ மக்கள்,
தமிழென்னும் பேருணர்ச்சி இந்நாள் போலே
தமிழ்நாட்டில் எந்நாளும் இருந்த தில்லை!
தமிழர்க்குத் தொண்டுசெயும் தமிழ னுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய்ப் போகும்!
தமிழுக்குத் தொண்டுசெய்வோன் சாவ தில்லை
தமிழ்த்தொண்டன் பாரதிதான் செத்த துண்டோ?†

இரவின் இளவரசி:

பாவேந்தர் சென்னை இராமன் தெருவில் குடியிருந்த போது 16—2—62 வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் இந்தப் பாடல் எழுதப்பட்டது. சிறுசிறு கருத்துக்களைக் கருவாகக் கொண்ட கட்டளைக் கலித் துறைகளை எளிமையாக எழுதி, அப்பாவினத்தைக் கவிஞர் நடுவே விளம்பரப் படுத்தப் போவதாகப் பாவேந்தர் குறிப்பிட்டதை நான் 14—2—62 நாட்குறிப்பில் எழுதியிருக்கிறேன். அவ்வாறு அவர் குறிப்பிட்ட பிறகு முதன் முதலாக எழுதி விளம்பரப் படுத்திய கட்டளைக் கலித்துறை இதுதான்.

பாவேந்தர் இரவுச் சாப்பாட்டை முடித்துக் கொண்டு முற்றத்தில் பிரம்பு நாற்காலியில் அமர்ந்து ஓய்வெடுத்துக்

†பக்கம் 103: பாரதிதாசன் கவிதைகள் II

கொண்டிருந்தார். நானும் பொன்னடியும் கூடத்தில் அமர்ந்திருந்தோம். வெளியில் அமர்ந்திருந்த பாவேந்தர் திடீரென்று உள்ளே எழுந்து வந்தார்.

''என்ன இது மயக்கும் மணம்? எங்கிருந்து வருது? என்ன பூ?'' என்று மூக்கில் மணத்தை இழுத்துக்கொண்டே கேட்டார். நாங்களும் அக்கடி மணத்தை உணர்ந்தோம்.

"அது என்ன மலர் என்று பார்த்துவிட்டு வருகிறோமய்யா'' என்று கூறிவிட்டு நானும் பொன்னடியும் வெளியில் சென்றோம்.

பாவேந்தர் வாடகைக்கு இருந்த பங்களாவுக்கு அடுத்த பங்களா, ஓட்டல் அதிபர் புகாரி சாகிபின் குடியிருப்பு. இரண்டு பங்களாவுக்கும் இடையில் கைப்பிடிச் சுவர் எழுப்பப்படவில்லை; வேலிதான் இருந்தது. அந்த வேலியில் 'நைட்குவீன்' என்ற பூ, கொத்துக் கொத்தாக மலர்ந்து அவ்வாறு மயக்கும் மணத்தைப் பரவ விட்டுக் கொண்டிருந்தது. ஒரு பெரிய மலர்க்கொத்தாக ஒடித்துக் கொண்டு வந்து பாவேந்தர் கையிலே கொடுத்தோம்.

அதைப் பார்த்ததும் ''இந்தப் பூத்தானா? அடேயப்பா! என்ன மணம்!.....'' என்று வியந்து விட்டு ''ஆமா. இப் பூவோட பேரென்ன சொன்னீங்க?'' என்று கேட்டார்.

'நைட்குவீன்' என்று நாங்கள் மீண்டும் சொன்னோம்.

'அப்படியா!' என்று கூறிவிட்டு நீண்ட நேரம் அதைக் கையில் வைத்து முகர்ந்து கொண்டே இருந்தார்.

பாவேந்தர் அடுத்த நாள் அதிகாலை 5 மணிக்கே வழக்கம் போல் எழுந்து பின்னல் சென்று விட்டார். நாங்கள் அவர் அறைக்குள் நுழைந்தபோது மேசைமீது கீழ்க்

கண்ட கட்டளைக் கலித்துறை 'இரவின் இளவரசி' என்று தலைப்பிட்டு எழுதப்பட்டிருந்தது.

கரவில் இருந்ததொரு மங்கைஎன்
முக்கில் கடிமணத்தை
வரவிடு கின்றுள் வரவில்லை
என்னெதிர் வாயிதழைத்
தரவில்லை உண்ணவும் என்றேன்என்
தோழனும் 'தையலவள்
இரவின் இளவர சிப்பெயர்ப்
பூ'வென் றியம்பினனே.

○

பிற்சேர்க்கை

1

பாரதிதாசன் மீசை*

(14ம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

களிற்றுநிரை பலவற்றை வெற்றி கண்டு
காடதிர வேமுழங்கி இறுமாப் போடு
மலைக்குகையில் வீற்றிருக்கும் அரிமாப் போல
மாக்கவிஞன் வீற்றிருந்தான்; வாயில் இட்டுக்
குழைக்கின்ற புகையிலையைச் சுருட்டாய்ச் சுற்றிக்
குண்டலமாய்ப் புகைவிட்டான்; அவன் தமிழ்வாய்
விளைக்கின்ற கரியபுகை தமிழ் மணந்து
வீசியது நாற்புறமும் வியப்பில் ஆழ்ந்தேன்.

"பெண்ணின்பம் தனைவடித்துப் பண்ணைக் கூட்டிப்
பேரின்பப் பாடல்களாய் ஆக்கித் தந்த
வெண்ணெய்ச்சொல் பாரதிக்குத் தாசி! உம்மை
வேடிக்கை யாய்ஒன்று கேட்க ஆசை!
எண்ணிச்சொல்! பாரதியின் முறுக்கு மீசை
இமயத்தைப் போல்நிமிர்ந்து விண்ணைக் குத்தக்
கன்னத்தில் மோதுகின்ற உமது மீசை
கவிழ்ந்துநிலம் நோக்குவதேன்?" என்று கேட்டேன்.

*பாவேந்தர் மீசை பற்றி தொடக்க நிலையில் ஆசிரியர் பாடிய பத்து எண்சீர் விருத்தங்களில் சில இங்கே தரப்பட்டுள்ளன.

இன்றமிழில் தேன்பிலிற்றி வண்ணங் கூட்டி
இசைப்பாடல் பாடுகின்ற கவிதை வேந்தன்
கன்னத்தில் மின்னல்விழச் சிரித்தான்; நெஞ்சக்
கற்பனையைத் தட்டிவிட்டான்; என்னை நோக்கி
"எண்ணத்தில் உயர்ந்திருக்கும் சிறந்த ஆசான்
எதிர்நிற்கும் மாணவர்கள் கவிழ்ந்தி ருந்து
மண்ணைத்தான் பார்ப்பார்கள்" என்று சொல்லி
மறத்தமிழன் மெதுவாகப் புன்ன கைத்தான்.

"தித்திக்கும் முக்கனியைச் செழித்த கொய்யாத்
தீங்கனியை வெறுத்தவௌவால் உமது வாயில்
தித்திக்கும் கவிதையென்னும் கனியை யுண்ணச்
சிறகைவிரித் தமர்ந்ததுகோ? சோலை தன்னில்
தித்திக்கும் மலைத்தேனைத் தெவிட்டி வந்த
தீங்குரலின் கருவண்டுக் கூட்டம் ஒன்று
தித்திக்கும் இலக்கியத்தேன் பருகு தற்கும்
திருவாயில் படிந்ததுவோ?" என்று கேட்டேன்.

அழகேறி ஆட்சிசெய்த மீசை தன்னை
அன்போடு மெதுவாகத் தடவி விட்டுப்
"பழகுதமிழ்ப் பெரும்புரட்சிப் பார தித்குப்
பற்பலரால் இடையூறு நேர்ந்த போது
கிளர்ந்தெழுந்த மீசையிது! தமிழ்ப்ப கைச்சொல்
கேட்டவுடன் துடிப்பதிது!" என்று சொல்லி
மழைத்தமிழன் எழுந்துசென்றான்; முழங்கு கின்ற
மதயானை அவன்நடைக்குத் தோற்ற தங்கே.

கொடிகட்டி உலகாண்ட ஆங்கி லேயர்
குலத்துதித்த மறப்புலவன் ஷாவைத், தேனை
வடிகட்டிக் கவிதையென ஆக்கித் தந்த
வங்கத்துத் தாகூரைப், பணத்தி மிர்க்கு
வெடிவைத்த தால்ஸ்தாயை எண்ணும் போது
வெண்தாடி நம்கண்ணில் அசைந்து தோன்றும்.
படிமெச்சும் பாரதிக்குத் தாசன் தன்னைப்
பைந்தமிழர் எண்ணுங்கால் மீசை தோன்றும்.

2

டாக்டர் காமில் ஸ்வலபில் கடிதம்

(55ம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

Thiru Bharathi Dasan Avargal,
95, Rue de Perumal Kovil,
Puduccheri—Pondichery.

Dear Mahakavi,

I send enclosed herewith an issue of our Novy'/New Orient Monthly/ wherein you will find a few of my CZECH translations of your splendid poems together with a short note on your life and work.

May I ask you to kindly arrange for the despatch of your collected work to me? For me and my students of Tamil it is a "must"—your work is undoubtedly the peak of Tamil lyrical poetry in the first half of our century.

Yours very sincerely,
Dr. Kamil Zvelebil,
தமிழ் ஊழியன்

CESKOSLOVENSKA AKDEMIE. VED
ORIENTALNI USTAV
LAZENSKA 4, PRAHAI- MALA STRANA
C tel. 663- 19, 663- 96.

3

பாவேந்தர் நடத்திய இலக்கணப் பாடம்

(57, 97 ஆகிய பக்கங்களின் அடிக்குறிப்பிற்குரியது.)



4

நிதியளிப்பு விழா அழைப்பிதழ்

(63ம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

காரியாலயம்:
"சட்ராஸ் அவுஸ்"
581, பைகிராப்ட்ஸ் ரோடு
திருவல்லிக்கேணி, சென்னை-5.
22-7-1946

பேரன்புடையீர்,

வணக்கம். தமிழ்நாட்டுப் புரட்சிக் கவிஞர் திரு. பாரதிதாசன் (புதுவை கனக சுப்புரத்தினம்) அவர்களுக்கு நிதி அளிப்பு விழா, உயர்திரு. நாவலர் எஸ். சோமசுந்தர பாரதியார், எம் ஏ., பி.எல். அவர்கள் தலைமையில் நடைபெறும். தாங்கள் அனை வரும் வந்திருந்து சிறப்பிக்க வேண்டுகிறோம்.

இடம்: சென்னை, சைனா பஜார், பச்சையப்பன் மைதானம்

தேதி: 28-7-46 ஞாயிறு மாலை 4 மணி

தங்கள் அன்புள்ள
என். கிருஷ்ணராஜ்
நிதிக் கமிட்டித் தலைவர்

சி.என். அண்ணாதுரை
பொருளாளர்

டி.என். ராமன்
ப. கண்ணன்
காரியதரிசிகள்

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நிதி அளிப்பு விழா அழைப்பிதழ்

28-7-46 ஞாயிறு மாலை 4 மணிக்கு சென்னை சைனாபஜார் பச்சை யப்பன் மைதானப் பந்தலில் நடைபெறும்.

நிகழ்ச்சி

28-7-1946 ஞாயிறு மாலை

4 மணி நாதஸ்வரம்:
வித்துவான் K.S. பிச்சையப்பா, குளிக்கரை

5 மணி: இசை
இசையரசு M.M. தண்டபாணி தேசிகர்

6 மணி: தலைவர் முன்னுரை

6-45 மணி: வரவேற்புரை
(பல கழகங்கள் சார்பில்)

7-30 மணி நிதி அளிப்பு:
பொன்னாடை அளித்தல் காஞ்சி A.K. தங்கவேலர்

8 மணி பாராட்டுரை வழங்குதல்:
(சொற்பொழிவாளர்கள்)

திரு. திவான் பகதூர் N. சிவராஜ் (மேயர்)
திரு. M. இராதாகிருஷ்ணபிள்ளை, B.A., B.L.,
திரு. T. செங்கல்வராயன், B.A., B.L.,
திருமதி குஞ்சிதம் குருசாமி, B.A., L.T.,
திரு. டாக்டர் A. கிருஷ்ணசாமி, M.A., PH.D; BAR-AT-LAW
திரு. R.P. சேதுப்பிள்ளை, M.A., B.L.,
திரு. ராவ்பகதூர் P. சம்பந்த முதலியார், B.A., B.L.,
திரு. வ. ரா.
திரு. K.A.P. விசுவநாதம்
திரு. ராவ் சாயிப் P. ரத்னசாமி
திரு. வித்துவான் மு. வரதராசனார், B.O.L., M.O.L.,
திரு. C.D. நடராஜன், M.A., B.L.,
திரு. ப. ஜீவானந்தம்
திரு. நடிகமணி K.R. இராமசாமி
திரு ம. பொ. சிவஞான கிராமணியார்
திரு. திருலோக சீதாராமன்
திரு. இரா. நெடுஞ்செழியன், M.A.,

நன்றி கூறல்: C.N. அண்ணாதுரை, M.A.,

5

Freedom*

(113ம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

'Sweet fruits and delicious nuts
They shall give you.
"Sweet darling! precious diamond!'
They shall fondle you.

But poor parrot!
'Look here!
Your sweet loving sister,
Flies along the streets of the sky,
And swings high on the golden branches
Of the coconut tree;
Roves in the garden;
Moves in the street;
And has this earth
And the sky of her own.

Is it—the wooden cage—
The place for you for ever?
You call her often.
'Sister! Oh my sister!'
Is freedom a thing to be given
Like ginger or pepper?

மூலம்: சுதந்தரம்
பாரதிதாசன் கவிதைகள் முதல் தொகுதி

*பாவேந்தருடைய குயிலில் வெளியான (இந்நூலாசிரியரின்) ஆங்கில மொழிபெயர்ப்புக்களில் ஒன்று.

6

திரைப்படத்தில் மகாகவி பாரதி

(125ம் பக்க அடிக்குறிப்பிற்குரியது)

தமிழ்ச் சான்றோர்களே,

உலகு தொடங்கிய நாள் முதல் மேம்பட்டு வந்த நம் தமிழ் மொழி —புலவர்களாலும், புரவலர்களாலும் வளர்ந்து வந்த நம் தமிழ்மொழி, பத்தொன்பதாம் நூற்றாண்டை அடைந்தபோது அந்தத் தண்டமிழ் உண்டா இல்லையா எனற நிலையை அடைந்திருந்தது.

அந் நிலையில்,

யாம் அறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணேம் என்று எழுந்தமகாகவி பாரதி— அவர் சொன்னது போல

இனிக்க எழுதிப் பாடிக் குவித்துத் தமிழுக்கோர் ஒளியை— தமிழுக்கோர் எழுச்சியை, உண்டு பண்ணினர். தம் வறுமையிலும் இவ்வரிய தொண்டு பண்ணினர்.

இந்நாள் அவர் இளைஞர், முதியர், கல்விச் செல்வர், பொருட் செல்வர் அனைவர் உள்ளத்துள்ளும் வாழ்கின்றார் எனின் அது வியப்பன்று.

மகாகவி பாரதி வாழ்க்கை வரலாற்றை—பாட்டுத் திறத்தாலே இவ் வையத்தைப் பாலித்த திறத்தை,

திரைப்படம் ஆக்க விழைந்தேன்.

இதில்

எழுதும் திறமும் கலைத் திறமும் கொண்ட தமிழ்ச் சான்றோர் பலர் எனக்குக் கருத்து உதவுவோராக இருக்க முன்வந்தருளினர்கள்.

என் விண்ணப்பம் இதுதான்.

'எதுவும் நல்கியிங் கெவ்வகை யானும்
இப்பெருந் தொழில் நாட்டுவம் வாரீர்!'

(பாரதி)

இங்ஙனம் தங்கள்,
பாரதிதாசன்

திருவாளர் எஸ். இராமநாதன்—முன்னாள் அமைச்சர்.
" மணவாள இராமானுசம்—முன்னாள் துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
" வி.பி. இராமன்—சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்.
" அருண்—எழுத்தாளர், நூலாசிரியர்.
" அகிலன் " "
" பத்மநாபன்—துணையாசிரியர், சுதேசமித்திரன்.
" முருகதாசா—திரைப்பட இயக்குநர்.
" கிருஷ்ணசாமி "
" நாரண துரைக்கண்ணன்—நூலாசிரியர், பத்திரிகாசிரியர்.
" இராதாமணாளன்—துணையாசிரியர், நவ இந்தியா.
" அம்மையப்பன்—கலை இயக்குநர்.
திருமதி தங்கம்மா பாரதி—பாரதி மகள்.
" சகுந்தலா பாரதி "

பிழை திருத்தம்

பக்கம்	பிழை	திருத்தம்
20	அவரைப் பார்த்தால் எப்படி	அவரைப் பார்த்தால் பாரதி எப்படி
41	இருந்த என் ஆசிரியரின்	இருந்த நான் என் ஆசிரியரின்
48	பீரோவாகச் செய்வர் கூலி	பீரோவாகச் செய்யக் கூலி
58	அவள் தமிழைப் பற்றி	அவர் தமிழைப் பற்றி
85	அவருடைய தெஞ்சும்	அவருடைய நெஞ்சும்
101	மூக்குக் கண்ணுடியோடும்	மூக்குக் கண்ணுடியோடு
105	படைப்பசற்றல் குறைந்தது	படைப்பாற்றல் குறைந்தது.
106	இருக்கும் நோக்கென்ருள்	இருக்கும் நோக்கென்ருன்
137	நீள்சடைரில் மலரிருக்கும்	நீள்சடையில் மலரிருக்கும்

பாவேந்தர் நினைவுகள்

முருகுசுந்தரம்

சேலம் நகரவைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணி யாற்றும் முருகுசுந்தரம் தமிழ் இலக்கிய மேடை தொறும் தம் கவிதைகளை மெல்லிய பூங்காற்றாய் வீச வைத்த புதுமைக் கவிஞர்; 'உருகும் திருவாசகத்திற்கு நெஞ்சென்பர்; இவர் வாசகமும் அவ்வாறே' என்று கலைஞர் நாவையே வியந்து பேச வைத்த புகழ்க்கவிஞர்.

❍

பாவேந்தர்'குயிலி'லும் சுரதாவின் கவிதைஇதழ்களிலும் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்ட முருகு 'கடை திறப்பு''பனித்துளிகள்'போன்ற தொகுதிகளால் கவிதை யின் நல்லழகை எவரும் எளிதில் வசப்படும் வகையில் அறிமுகப்படுத்தியவர்.உலகப் புகழ்பெற்ற சொற்பொழி வுகளையும் கடிதங்களையும் கட்டுரைகளையும் கவிதை களாக்கிப் புதுநெறி காட்டியவர்.

❍

பாவேந்தரின் பரம்பரையைச் சேர்ந்த இவர் பாவேந்த ரின் கடைசி நாட்களில் அவரோடு நெருங்கிப் பழகி அவரிடம் கண்டும் கேட்டும் அறிந்த நிகழ்ச்சிகளை 'பாவேந்தர் நினைவுகளா'க்கியுள்ளார். "பாவேந்தர் என் னும் பவளமல்லிச் செடியை நான் சென்னையிலும் சேலத்திலும் சுற்றிச் சுற்றி வந்தபோது அது தானுக உதிர்த்த மலர்களையும் நானே விரும்பிப் பறித்த மலர் களையும் மட்டுமே இந்நூலில் படைத்திருக்கிறேன்" என்கிறார்.

❍

கவிஞர் ஒருவரைப் பற்றிக் கவிஞர் ஒருவரால் எழுதப் பெற்ற இந்நூலின் இன்னொரு பகுதி விரைவில் வெளி வரவிருக்கிறது.

இது ஒரு அகரம் வெளியீடு